விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 வைகாசி 29 திங்கட்கிழமை (12.06.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 175

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005


இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

# வடக்கு அமைச்சரவை விரைவில் மாற்றம்!

## தீவிர நடவடிக்கையில் முதலமைச்சர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் தற்போதுள்ள அமைச்சர்கள் நான்கு பேரையும் அப்பதவியில் இருந்து மாற்றுமாறு அதிகளவிலான மாகாண சபை உறுப்பினர்கள் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் வலியுறுத்தியுள்ள நிலையில் முதலமைச்சரும் அமைச்சரவை மாற்றம் தொடர்பில் தீவிர நடவடிக்கைகளை எடுக்க முயற்சித்து வருகின்றார். (23-ம் பக்கம்...)



## பேருந்து கட்டணம் அதிகரிக்கபடவுள்ளது

(கொழும்பு)

நாட்டில் தற்போது அமுலிலிருக்கும் பேருந்து கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் ஜுலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் பேருந்து கட்டணங்கள் 6.5வீதம் அதிகரிக்கப்படவுள்ளதாக போக்குவர 24☛

## வாகன இறக்குமதி ரூ.38 பில். இழப்பு!

(கொழும்பு)

தீர்வை வரியின்றி வாகனங்கள் இறக்கும்தி செய்யப்பட்டதால், அரசாங்கம் 38 பில்லியன் ரூபா வருமானத்தை இழக்க நேரிட்டுள்ளதாக தகவல் வெளியிடப்பட்டுள்ளது. 24☛

## ஜனாதிபதி - உறவுகள் இன்று சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மைத்திரி பாலசிறிசேனவுக்கும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுடைய பிரதிநிதிகள் 15 பேருக்கும் இடையிலான முக்கிய கலந்துரையாடல் இன்றைய தினம் 23☛

## முழுமையான தீர்வுடன் ஜனாதிபதி வருவார்!

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நம்பிக் காத்திருப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு இன்றைய தினம் வருகை தரவுள்ள ஜனாதிபதி மைத்திரி பாலசிறி 23☛

## கைகலப்பில் நால்வர் படுகாயம்; மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குருநகர் பகுதியில் நேற்றைய தினம் இரு குழுக்களிடையே ஏற்பட்ட கைகலப்பில் நால்வர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் இந்த சம்பவத்தை அடுத்து சந்தேகத்தின் பேரில் மூவர் யாழ்.பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று இரவு 8 மணியளவில் குருநகர் பகுதியில் இரு குழுக்களிடையே கருத்து முரண்பாட்டின் காரணமாக 23☛

## வித்தியா படுகொலை வழக்கு

## மூவரடங்கிய நீதிபதிகள் முன் முதலாவது விசாரணை இன்று

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பாடசாலை மாணவி சிவலோகநாதன் வித்தியாவின் படுகொலை வழக்கு, மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இன்று முதன் முறையாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

யாழ். மேல்நீதிமன்றத்திலேயே மேற்படி வழக்கு விசாரணை நடைபெறவுள்ளது.

யாழ். புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியாவின் படுகொலை வழக்கின் இறுதிக் கட்ட விசாரணைகளுக்கு மூவரடங்கிய மேல்நீதிமன்ற நீதிபதிகள் குழாம் அண்மையில் நியமிக்கப்பட்டது.

சட்டமா அதிபரின் 24☛

## ஞானசார தேரரை விரைவில் கைது செய்வோம் - பொலிஸ்

### மற்றொருவர் நேற்று கைது

(கொழும்பு)

அண்மைக்காலமாக முஸ்லிம் வர்த்தக நிலையங்களை தீயிட்டு கொளுத்தியதாகவும் மற்றும் இனவாதத்தை தூண்டும் முயற்சிகளில் ஈடுபட்டதாகவும் குற்றம்சுமத்தப்பட்டுள்ள பொது பல சேனா அமைப்பின் உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுதவிர பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரரையும் கைது செய்வதற்கான அத்தனை முயற்சிகளும் இடம்பெற்று வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரியந்த ஜயகொடி தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து இதுவரை நாட்டின் 24☛

## இலங்கை குறித்து ஜெனிவாவில் இன்று அறிக்கை விவாதம்

(கொழும்பு)

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பான அறிக்கை இன்று விவாதிக்கப்படவுள்ளது.

நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் தொடர்பான ஐ.நா சிறப்பு ஆணையாளர் மொனிக்கா பின்டோவின் இலங்கை விஜயம் தொடர்பான அறிக்கையே விவாதி 23☛

## ரூ.400 மில். இழப்பு!

(கொழும்பு)

கடந்த 2013ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுநலவாய உச்சி மாநாட்டில் பங்கேற்ற தலைவர்களுக்காக புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட சொகுசு 23☛

## ஆறு நாடுகள் கவனயீர்ப்பு!

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுடைய போராட்டத்திற்கு வலுசேர்க்கும் முகமாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தினால் சர்வதேசத்தில் உள்ள ஆறு நாடுகளில் இன்றைய தினம் ஒரே நேரத்தில் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள் 23☛

## அமைச்சுப் பதவிகளுக்காக காட்டிக் கொடுக்கின்றனர்!

### சிறீதரன் எம்.பி சாடல்



(கிளிநொச்சி)

மக்கள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் போது அமைச்சுப் பதவிகளுக்காக ஒருவரையொருவர் காட்டிக்கொடுத்து பத 24☛

## தேர்தல்கள் ஆணைக்குழு கூடுகிறது!

(கொழும்பு)

புதிதாக பதிவு செய்வதற்காக விண்ணப்பித்துள்ள அரசியல் கட்சிகள் குறித்து எதிர்வரும் 15-ம் திகதி வியாழக்கிழமை தேர்தல்கள் ஆணைக் 23☛

## மாகாண விசாரணைக்குழு அறிக்கை அபாண்டமானது

### அமைப்புகள் முதல்வருக்கு கடிதம்

(பரந்தன்)

கடந்த 2015 ஆம் ஆண்டு பாரதிபுரம் பாடசாலையில் மாணவி ஒருவர் அதிபரினால் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டார் என மாகாணசபை அமைச்சர்களை விசாரிக்க நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிட்ட விடயம் முற்றிலும் உண்மைக்கு புறம்பானது, அபாண்டமானது. அவ்வாறு ஒரு சம்பவமே நடக்கவில்லை என அப்பிரதேசத்தைச் சேர்ந்த பதினொரு பொது அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவித்து முதலமைச்சருக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

அத்தோடு பாரதிபுரம் பாடசாலையில் அக்காலப்பகுதியில் விசாரணைக்குழு 23☛

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாவசிய பொருட்களின்
# விலைகளை அதிகரித்தால் கடுமையான நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சீனி உட்பட 12 அத்தியாவசிய பொருட்களுக்கான விலைகளை தன்னிச்சையாக அதிகரிக்கும் வியாபாரிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ரிசாட் பதியூதீன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொக்கட்டிச்சோலையில் அமைக்கப்பட்ட 378ஆவது ச.தொ.ச விற்பனை நிலையம் நேற்று முன்தினம் காலை திறந்து வைக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பட்டிருப்பு தொகுதி அமைப்பாளர் சோ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ரிசாட் பதியூதீன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதியாக கிராமிய பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சரும் பட்டிப்பளை பிரதேச அபிவிருத்திக்குழுவின் இணைத் தலைவருமான எம்.எஸ்.எஸ்.அமீர் அலி கலந்து கொண்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரை பிரதேசத்தில் முதன்முறையாக அரச விற்பனை நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

விவசாயிகளும் வறுமை நிலையில் உள்ள மக்களும் அதிகமாக வாழும் இப்பகுதி மக்கள் பயன் அடையும் வகையில் அனைத்து வசதிகளையும் கொண்டதாக இந்த விற்பனை நிலையம் அமைக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் நிறைவடைவதற்குள் 500 ச.தொ.ச விற்பனை நிலையங்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ரிசாட் பதியூதீன் தெரிவித்தார்.

சீனி உட்பட 12 பொருட்கள் அத்தியாவசிய பொருட்களாக அடையாளப்படுத்தப்பட்டு நேற்று முன்தினம் வர்த்தமானி மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த பொருட்களுக்கு நினைத்தவாறு விலைகளை அதிகரிக்க முடியாது.

சீனிக்கான தீர்வை விலையை 10 ரூபாயினால் அதிகரித்ததற்காகவும் அதன் காரணமாக நுகர்வோருக்கான சீனியின் விலையினை வர்த்தகர்கள் அதிகரிக்க முடியாது எனவும் தெரிவித்த அமைச்சர், இவற்றினை கண்காணிப்பதற்காக 200 அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (செ-11)

# நாடு வெற்றி பெறுவதற்கு அனைவரும் ஒன்றிணைவோம்

## அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

அறிநெறிக் கல்வியின் முக்கியத்துவத்தை சிறுவர்களின் முன்னேற்றத்திற்கு கைகொடுக்கும் வகையில் ஒத்துழைப்பை வழங்கி தேசிய இலங்கை வெற்றிபெற அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய இந்து சமய அறநெறிக் கல்வி விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு கொழும்பில் நேற்று இடம்பெற்ற மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போது இந்து சமய அலுவல்கள் அமைச்சர் டி. எம். சுவாமிநாதன் இதனை தெரிவித்தார்.

இதேவேளை, இந்து சமய அறநெறி கல்வி வாரத்தை முன்னிட்டு நல்லூரில் நேற்று இந்து சமய அறநெறி கல்வி விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று இடம்பெற்றது.

நல்லூர் பிரதேச செயலக இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்த ஊர்வலம் இடம்பெற்றிருந்தது. (செ-11)

# ஜீ.எஸ்.பி பிளஸ் சலுகை தற்காலிக வாய்ப்பு – மகிந்த

தற்காலிமான பொருளாதார வாய்ப்பாகவே ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை இலங்கைக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தை ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை மூலம் கட்டி எழுப்ப முடியும் என அரசாங்கம் மக்கள் மத்தியில் கருத்தொன்றை பரப்பியுள்ளது.

இலங்கையின் தனிநபர் வருமானம் 4 ஆயிரத்து 35 டொலர்களை அண்மித்துள்ள நிலையில், இலங்கையின் இறக்குமதி பொருட்கள் ஐரோப்பிய நாடுகளுக்குள் இறக்குமதி செய்கின்ற போது முழுமையான வரி அறவீட்டுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை விரைவில் உருவாகும் என மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

எனவே, ஜீ.எஸ்.பி வரிச்சலுகையில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட முறைமையினை இலங்கை பின்பற்றும் பட்சத்தில் வரி அதிகரிக்கப்படும் போது அதற்கு ஏற்றால் போல் தம்மை திருத்தியமைத்து கொள்வது இலங்கைக்கு இலகுவானதாக இருக்கும்.

அவ்வாறன்றி அரசாங்கம் பின்பற்றி வரும் முழுமையான ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகை தொடர்பான தற்போதைய நடைமுறையினால் வரி அதிகரிக்கப்படும் போது இலங்கை சவால்களுக்கு முகம் கொடுக்க நேரிடும் என மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# ஜெனரல்களாக பதவி உயர்வு

(கொழும்பு)

பிரிகேடியர் பதவியில் இருந்த இராணுவ அதிகாரிகள் 10 பேருக்கு மேஜர் ஜெனரல்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி ரசிக பெர்ணான்டோ, சுகத் பெரேரா, மேர்வின் பெரேரா, லக்சிறி வடுகே, அதுல கொடிப்பிலி, விஜித ரவிப் பிரிய, அதுல கலகமகே, ராஜ் ரணவக, ஷாந்த திஸா நாயக்க மற்றும் தர்மசிறி ஆகியோருக்கே இவ்வாறு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளன.

இந்த பதவியுயர்வுகள் கடந்த 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (செ-11)

# தமிழ்த் தலைமைகளின் எதிர்ப்புக்கு மறுபதில் நாம் வழங்க மாட்டோம்

## பெங்கமுவே நாலக்க தேரர் கருத்து

(கொழும்பு)

வட மாகாணத்தில் விகாரைகளை அமைக்க வேண்டாம் என தமிழ்த் தலைமைகள் கூறினாலும் தெற்கிலுள்ள சிங்கள மக்கள் அவர்களுக்கு எதிரான கருத்துக்களை ஒருபோதும் கூறமாட்டார்கள் என்று தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றியத்தின் தலைவர்களில் ஒருவரான பெங்கமுவே நாலக்க தேரர் தெரிவித்துள்ளார்

எந்தவொரு பள்ளிவாசல்கள் மீதும் யாரும் தாக்குதல் நடத்தவில்லை என்று கூறியுள்ள அவர், புராதன பௌத்த தலங்கள் மீதே தாக்குதல் நடத்தப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

நாட்டைப் பாதுகாக்கும், நாட்டை உருவாக்கும் என்ற தொனிப்பொருளில் தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த மக்கள் சந்திப்பு கொழும்பு - பிலியந்த புதிய நகர சபை மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய பெங்கமுவே நாலக்க தேரர் "இந்தியாவுக்கு அல்லது ஐக்கிய அரபு இராஜ்ஜியம் போன்ற நாடுகளுக்கு தங்களுக்கென தேசிய ஒருங்கிணைப்பு அமைப்புக்களை உருவாக்கிக் கொள்ள முடியும்.

அப்படி உருவாக்கிக்கொண்டால் ஐக்கிய நாடுகளோ அல்லது மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கோ எந்த நாடுகளுக்கும் தேவையற்ற அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியாது. இப்படியான பலம்மிக்க செயற்பாடே இந்த தேசிய உரிமைகள் அமைப்பினால் நடத்தப்படுகின்றது. இது அரசியலிலும் அப்பாற்பட்ட செயற்திட்டமாகும்.

எமது நாட்டில் ஐக்கியமின்மை அதிகமாக ஏற்படக் காரணம் அரசியல் கட்சிகளினால்தான். மாறாக சிங்களம், தமிழ் இனங்களால் அல்ல. இலங்கைக்கு அண்மையில் விஜயம் செய்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பௌத்த தர்மத்தை பாதுகாக்கும் இலங்கைக்கு முழு உலகமும் கடன்காரர்கள் என்று தெரிவித்திருந்தார்.

எனினும் அவர் என்ன காரணத்திற்காக இதனைக் கூறினார் என்று விளங்கவில்லை. அதை விடவும் சற்று வித்தியாசமாக மோடிக்கு கூறியிருக்க முடியும். முழு உலகத்தையும் கடன்காரராக்குவதற்கு மோடிக்கு என்ன உரிமை உள்ளது? பாரத நாடு கடன்பட்டிருப்பதாக கூறியிருக்கலாமே.

இலங்கையை விட்டு வெள்ளைக்காரர்கள் செல்கையில், தங்களை விடவும் சாமர்த்தியமான காரியங்களைச் செய்யும் கறுப்பு வெள்ளைக்காரர்களை உருவாக்கிவிட்டே அவர்கள் சென்றதாக அநகாரிக தர்மபால 1926ஆம் ஆண்டில் கூறியிருந்தார்.

இந்த கறுப்பு நிற வெள்ளைக்காரர்களின் பிரதிநிதியான மங்கள சமரவீர அமெரிக்காவினால் செய்யப்பட்ட இலங்கைக்கு எதிரான யோசனையில் கையெழுத்திட்டார்.

தனது நாட்டிற்கு எதிரான தீர்மானத்தை வாழ்த்தி எவ்வாறு ஒருவரால் கையெழுத்திட முடியும்? இன்னுமொரு சிறந்த வெள்ளைக்காரர் இலங்கையில் இருக்கின்றார். அவர் தான் ரணில் விக்கிரமசிங்க. வெளிநாட்டவர்களுக்குத் தேவையான விடயங்களை அவர் இங்கு செய்கின்றார். சந்திரிகா அம்மையார் கூறுவதுபோல எந்த பள்ளிவாசல்களும் தாக்கப்படவில்லை.

ஆனால் புராதன பௌத்த தலங்கள் பலவற்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. வடக்கில் விகாரைகள் அமைக்க முடியாதென வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் வட மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஆகியோர் கூறுகின்றனர்.

ஆனால் சிங்களவர்கள் ஒருபோதும் அவ்வாறு கூறமாட்டார்கள்" என்றார். (செ-11)


ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

பிரெஞ்சு கற்பதற்கு வட மாகாணத்தில் FRENCH EMBASSYயின் கீழ் இயங்குகிறது.

யாரும் படிக்கலாம். www.ambafrance.lk.org

DELF A1, A2 வகுப்புகளுக்கு உடன் பதிவு செய்யவும்.



021 222 8093

61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

(9414)



துயர் பகிர்கின்றோம்



அமரர் யோகரத்தினம் தயேந்திரன் (பபா)

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலையின் காவு வண்டிச் சாரதியும் மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லக் குழந்தைகளுக்காக பல வழிகளிலும் தன்னாலான பேருதவி ஆற்றிவந்த பெருமகன் அமரர் யோகரத்தினம் தயேந்திரன் (பபா) அவர்களின் திடீர் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம்.

காலனவன் கண்ணுக்கு தென்பட்டு உயிர்பிழைக்க போராடும்
கருத்தாக்களை கவர்ந்திழுக்கவிடாது
கண்ணியமாய் கடுகதியாய்
களத்தினிலே கொண்டுசென்று
தன்னுயிர்போல் மன்னுயிரையும் எண்ணி
உயிர்காக்க உதவிடும் உத்தமனே – நீவீர்
உதவிடும் செயலது கூற்றுவனுக்கும் பொறுக்கவில்லையோ!
உன்னத மனிதர்கள் உலகினில் வாழ – இறைவா!
உந்தனுக்கும் மனமில்லையா!!!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர் தி.இராசநாயகம், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள், இல்லக் குழந்தைகள்,
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்,
ஜெயந்திநகர், கிளிநொச்சி.

(C - 8779)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் நிதி மையங்களை இலக்கு வைத்து நடக்கும் மோசடிகளைக் கண்டறிய புதிய புலனாய்வுப் பிரிவு!

(கொழும்பு)

அரசாங்க நிதி மையங்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் மோசடி முறைகேடுகளைக் கண்டுபிடித்து அறிக்கை சமர்ப்பிக்க புதிய புலனாய்வுப் பிரிவுவொன்று உருவாக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. விசேட பிரிவினால் பெறப்படும் தகவல்கள் நிதியமைச்சர் மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கும் வகையில் நிதியமைச்சர் மங்கள சமரவீரவினால் இந்த பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான விசேட புலனாய்வு பிரிவுகள் பல வெளிநாடுகளில் இயங்கி வருகின்றன. குறிப்பாக சிங்கப்பூர் நாட்டில் நிதி மோசடிகளை குறைத்து கொள்வதற்காக இவ்வாறான புலனாய்வுப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது இலங்கையிலும் நிதி மோசடி விசாரணை பிரிவு இயங்கி வருகின்றது. அங்கு ஏதாவது ஒரு மோசடி தொடர்பில் முறைப்பாடு கிடைத்தால் மாத்திரமே விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. எனினும் அரசாங்க நிதி நடவடிக்கை தொடர்பில் எந்த நேரமும் அவதானத்துடன் இருப்பதற்கு புலனாய்வு பிரிவு ஒன்று அவசியமாகியுள்ளது.

பிரேமதாஸ ஆட்சிக் காலத்தில் லொரன்ஸ் மாபியா என்ற பெயரில் விசேட பொலிஸ் பிரிவு இய ங்கியது.

அத்துடன் அமைச்சில் இடம்பெறும் முறை கேடுகள் மற்றும் பலவீனங்கள் ஜனாதிபதிக்கு அறிக்கையிடப்பட்டது.

எனினும் அது அரசியல் கோபங்களை தீர்த்து கொளவதற்காக ஜனாதிபதி பயன்படுத்தி கொண்டதாக குற்றம் சுமத்தப்பட்டது.

எப்படியிருப்பினும் புதிய பிரிவில் நிதி குற்றம் தொடர்பில் விசேட அறிவுடைய பொலிஸ் அதிகாரிகள், வங்கி நடவடிக்கை மற்றும் நிதி சந்தை நடவடிக்கை தொடர்பில் விசேட அறிவுடைய பலரின் உதவி கிடைத்துள்ளது.

அத்துடன் இதற்கு வெளிநாட்டு நிபுணர்களின் விசேட ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ள நிதியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. (இ-7)

# அரசியலில் தமிழ் மக்கள் இனி தவறுகளை செய்யக்கூடாது

## அமீர் அலி அட்வைஸ்



அரசியலில் தொடர்ந்தும் தமிழ் மக்கள் தவறுகளைச் செய்யக்கூடாது என பிரதியமைச்சர் அமீர் அலி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை கொக்கட்டிச் சோலையில் இடம்பெற்ற வைபவமொன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைக் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த பொதுத்தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 3 இலட்சம் தமிழ் வாக்குகளில். தமிழ்க் கட்சிகள் ஒரு இலட்சம் வாக்குகள் வரை தான் பெற்றன. சுமார் ஒன்றரை இலட்சம் வாக்குகளுக்கு என்ன நடந்தது என்றே தெரியாது.

சுமார் 25 ஆயிரம் வாக்குகளை ஐக்கிய தேசியக் கட்சிக்கு அளித்திருந்தால் இம்மாவட்டத்தில் ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் வந்திருப்பார். அவரொரு பிரதியமைச்சராகவோ அமைச்சராகவோ வந்து பாரிய அபிவிருத்திகளைச் செய்திருப்பார். எனவே அரசி யலில் தொடர்ந்தும் தமிழ் மக்கள் தவறுகளைச் செய்யக் கூடாது.

அதற்காக எல்லாவற்றையும் இழக்காமல் சமகாலத்தில் அரசியலில் எதைச் செய்ய முடியுமோ அதனைச் செய்கின்றபோதுதான் பாதிக்கப்பட்டுள்ள தமிழ்ச் சமூகம் எதனையாவது அடைய முடியும்" என பிரதியமைச்சர் அமீர் அலி மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரி படுகொலை

## சந்தேகநபரின் வீடு தீக்கிரை

(கொழும்பு)

பலாங்கொட பின்னவல பிரதேசத்தில் ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரியொருவரை வெட்டிக் கொலை செய்த சம்பவத்தில் பிரதான சந்தேகநபரின் வீட்டுக்கு பிரதேசவாசிகள் நேற்று அதிகாலை தீ வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சந்தேகநபர் அப்பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளதாக கூறப்படுகின்றது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரி தனது வயலில் இருந்து வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் இனந்தெரியாத நபர் ஒருவர் அவரை கூர்மையான ஆயுதத்தினால் குத்திக் கொலை செய்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசாரணை இடம் பெற்று வரும் நிலையில் சந்தேகநபர் எனக் கருதப்படுபவரின் வீட்டுக்கு பிரதேசவாசிகள் தீ வைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# முன்னோக்கிய பயணத்திற்கான பொறுப்பை சிவில் சமூகம் ஏற்க வேண்டும் - சந்திரிகா

(கொழும்பு)

சிவில் சமூகம் நாட்டின் முன்னோக்கிய பயணத்திற்கான பொறுப்பை ஏற்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண் டார நாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

காலி மாபலகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அன்றாட வாழ்க்கை தொடர்பாக மக்களுக்கு பிரச்சினைகள் இருந்தாலும் அரசியல் வாதிகளின் செயற்பாடுகள் சம்பந்தமாக மக்கள் அவதானிப்புடன் இருக்க வேண்டும் எனவும் அவர் கூறியுளளார்.

இதேவேளை, இனங்களுக்கு இடையில் பேதங்களை ஏற்படுத்தியது சம்பந்தமான பொறுப்பை சிங்கள மற்றும் தமிழ் அரசியல்வாதிகள் ஏற்க வேண்டும் எனவும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (இ-7)

# மகிந்தவுடன் சு.க. உறுப்பினர்கள் ஜப்பானில் ரகசிய பேச்சுவார்த்தை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுடன் இரகசிய பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் செய்து கொளளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துடன் நிறைவடைய உள்ள நிலையில் சில சுதந்திரக் கட்சியின் உறுப் பினர்களுடன் இவ்வாறு மகிந்த பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட முன்னதாக சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களது ஆதரவினை மகிந்த பெற்றுக்கொள்ள முயற்சித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கூட்டு எதிர்க்கட்சியை பலப்படுத்திக் கொள்ள சுதந்திரக் கட்சியின் சில அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் உதவியை மகிந்த நாடி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# பிரதமர் ரணிலைச் சந்திக்க படையெடுத்த ஐ.தே.கவினர்





மருத்துவ சிகிச்சைகளை முடித்துக்கொண்டு அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பிய பிரதமர் ரணிலை அரசியல் பிரமுகர்கள் பலர் சந்தித்துள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது பாரியார் மைத்திரி ஆகியோர் அமெரிக்காவிலிருந்து நேற்று முன்தினம் இரவு நாடு திரும்பினர். இவர்களை ஐக்கிய தேசி யக் கட்சியின் பிரமுகர்கள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என அனைவரும் கட்டுநாயக்க விமான நிலையத்தில்வைத்தே சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். (இ-7)

# குடும்பத்தாருக்கு எதிரான விசாரணைகளை தடுத்துநிறுத்தும் முயற்சியில் மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)


தனது குடும்பத்தினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளை தடுத்து நிறுத்தும் முயற்சியில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஈடுபட்டுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இதற்கென விமான நிலைய மற்றும் விமான சேவைகளின் தலைவர் காமினி அபேரட்ன எனப்படும் டெக்ஸி அபேவின் உதவியை மகிந்த ராஜபக்ஷ நாடியுள்ளார் எனவும் ராஜபக்ஷ குடும்பத்திற்கு எதிரான விசாரணைகளை இடைநிறுத்துமாறு டெக்ஸி அபே ஊடாக, ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய அமைச்சர் ஒருவருடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நிதி குற்றவியல் விசாரணைப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளை தடுத்து நிறுத்தும் முயற்சியில் மகிந்த தீவிரம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்காவை வீழ்த்தியதனால் அரையிறுதிக்கு முன்னேறியது இந்தியா



தென்னாபிரிக்காவை 191 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்திய இந்தியா 8 விக்கெட்டுக்களால் வென்று அரையிறுதிக்கு முன்னேறியது.

ஐ.சி.சி. சம்பியன்ஸ் டிராபி தொடரின் நேற்றைய போட்டியில் 'பி' பிரிவில் இடம் பிடித்துள்ள இந்தியா - தென்னாபிரிக்கா அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இந்த போட்டியில் வெற்றி பெற்றால் மட்டுமே அரையிறுதி போட்டிக்கு முன்னேற முடியும் என்பதால் இரு அணிகளுக்கும் இது முக்கியத்துவம் வாய்ந்த போட்டியாக இருந்தது.

இந்திய அணித் தலைவர் விராட் ஹோலி நாணயச் சுழற்சியில் வென்று களத்தடுப்பை தேர்வு செய்தார். இந்திய அணியில் வேகப் பந்து வீச்சாளர் உமேஷ் யாதவ் நீக்கப்பட்டு அஸ்வின் சேர்க்கப்பட்டார். தென்னாபிரிக்கா அணியில் பர்னெல் நீக்கப்பட்டு பெலுக்வாயோ சேர்க்கப்பட்டார்.

அம்லா மற்றும் டி கொக் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். இருவரும் நிதானமாக விளையாடி ஓட்டங்கள் சேர்த்தனர். குறிப்பாக விக்கெட் இழக்காமல் பார்த்துக் கொண்டனர். இதனால் முதல் 10 ஓவரில் தென்னாபிரிக்கா 35 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

அதன்பின் இருவரும் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். 12.5 ஓவரில் தென்னாபிரிக்கா 50 ஓட்டங்களைத் தொட்டது. அந்த அணி 17.3 ஓவரில் 76 ஓட்டங்கள் எடுத்திருக்கும்போது முதல் விக்கெட்டை இழந்தது. அம்லா 54 பந்தில் 3 பவுண்டரி, 1 சிக்சருடன் 35 ஓட்டங்கள் எடுத்து அஸ்வின் பந்தில ஆட்டம் இழந்தார்.

அடுத்து டி கொக் உடன் டு பிளசிஸ் ஜோடி சேர்ந்தார். தென்னாபிரிக்கா 21.1 ஓவரில் 100 ஓட்டங்களைத் தொட்டது. 68 பந்தில் அரைச் சதம் அடித்த டி கொக் 72 பந்தில் 4 பவுண்டரியுடன் 53 ஓட்டங்கள் எடுத்த நிலையில் வெளியேறினார். அப்போது தென்னாபிரிக்கா 2 விக்கெட் இழப்பிற்கு 116 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

3-வது விக்கெட்டுக்கு டு பிளசிஸ் உடன் அணித் தலைவர் டி வில்லியர்ஸ் ஜோடி சேர்நதார். டி வில்லியர்ஸ் தொடக்கம் முதலே அதிரடியாக விளையாட ஆரம்பித்தார். ஆனால் 12 பந்தில் 16 ஓட்டங்கள் எடுத்திருக்கும்போது ரன்அவுட் ஆனார். அடுத்து வந்த டேவிட் மில்லரும் ரன்அவுட் ஆனார்.

இதனால் 142 ஓட்டங்கள் எடுப்பதற்குள் தென்னாபிரிக்கா நான்கு விக்கெட்டுக்களை இழந்தது. களத்தில் நிலைத்து நின்ற டு பிளசிஸ் 36 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஹர்திக் பாண்டியா பந்தில் விக்கெட்டை பறிகொடுக்க தென்னாபிரிக்கா தடுமாற ஆரம்பித்தது. டு பிளசிஸ் அவுட்டாகும்போது தென்னாபிரிக்கா 33.3 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 157 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

அதன்பின் டுமினியைத் தவிர மற்ற வீரர்களான கிறிஸ் மோரிஸ் (4), பெலுக்வாயோ (4), ரபாடா (5), மோர்கல் (0), இம்ரான் தாஹிர் (1) சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க ஆக தென்னாபிரிக்கா 44.3 ஓவரில் 191 ஓட்டங்கள் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. டுமினி 20 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

இந்திய அணி சார்பில் பும்ப்ரா, புவனேஸ்வர் குமார் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களும், அஸ்வின், ஜடேஜா, ஹர்திக் பாண்டியா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களும் வீழ்த்தினார்கள்.

பின்னர் 192 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்தியாவின் தவான், ரோகித சர்மா ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். ரோகித் சர்மா 12 ஓட்டங்கள எடுத்த நிலையில் மோர்கல் பந்தில் ஆட்டம் இழந்தார்.

அடுத்து தவான் உடன் விராட் ஹோலி ஜோடி சேர்ந்தார். விராட் ஹோலி முதலில் சற்று திணறினார். ஆனால் தவான் நம்பிக்கையுடன் விளையாடினார். நேரம் செல்ல செல்ல விராட ஹோலி தனது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த தொடங்கினார். இதனால் தென்னாபிரிக்க பந்து வீச்சாளர்கள் இருவரை பிரிக்க திணறினார்கள்.

தவான் 61 பந்தில் அரைச்சதம் அடித்தார். மறுமுனையில் விராட் ஹோலி 71 பந்தில் அரைச்சதம் அடித்தார். தொடர்ந்து விளையாடிய தவான் 83 பந்தில் 12 பவுண்டரி, 1 சிக்சருடன் 78 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டம் இழந்தார். இந்த ஜோடி 2-வது விக்கெட்டுக்கு 128 ஓட்டங்கள் சேர்த்தது.

76 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்த விராட் ஹோலி

தவான் ஆட்டம் இழந்ததும் யுவராஜ் சிங் களம் இறங்கினார். இந்த ஜோடி இந்திய அணியை வெற்றி நோக்கி அழைத்துச் சென்றது. 38-வது ஓவரின் கடைசி பந்தை யுவராஜ் சிங் சிக்சருக்கு தூக்க இந்தியா 38 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 193 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. விராட் ஹோலி 101 பந்தில் 7 பவுண்டரி, 1 சிக்சருடன் 76 ஓட்டங்கள் எடுத்தும், யுவராஜ் சிங் 25 பந்தில் 23 ஓட்டங்கள் எடுத்தும் களத்தில் இருந்தனர்.

பந்து வீச்சில் மோர்னி மோர்கல், இம்ரான தகீர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

இந்த வெற்றியின் மூலம் 'பி' பிரிவில் இருந்து இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது. இந்தியா 15ஆம் திகதி பர்மிங்காமில் நடைபெறும் அரையிறுதியில் பங்களாதேஷை எதிர்கொள்ள வாய்ப்புள்ளது.

போட்டியின் ஆட்ட நாயகனாக இந்தியாவின் பும்ரா தெரிவு செய்யப்பட்டார்.




## காயம் காரணமாக திசார பெரேரா வைத்தியசாலையில்




சம்பியன்ஸ் கிண்ண தொடரில் விளையாடிவரும், இலங்கை அணியின் சகலத்துறை ஆட்டக்காரரான திசார பெரேராவின் தலை பகுதியில் பந்தடிப்பட்டுள்ளதால் அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானிற்கு எதிராக இன்று களமிறங்கவுள்ள இலங்கை அணி, நேற்று முன்தினம் இங்கிலாந்தின் கார்டிப் மைதானத்தில் பயிற்சில் ஈடுபட்டிருந்த நிலையில், திசார பெரேரா தலையில் பந்தடிப்பட்டு உபாதைக்குளாகியுள்ளதாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம தெரிவித்துள்ளது.

இந்நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள திசார பெரேராவிற்கு எவ்வித பாதிப்புமில்லையெனவும், பந்தடிப்பட்ட பகுதி மாத்திரம் மென்மைநிலை அடைந்துள்ளதாகவும், எவ்வாறாயினும் அவர் தீவிர மருத்துவ கண்காணிப்பில் இருப்பதாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும் 8ஆவது சம்பியன்ஸ் கிண்ண தொடரில் விளையாடி வரும் இலங்கை அணி, அரையிறுதி வாய்ப்பை பெறுவதற்கு, இன்று இடம்பெறவுள்ள பாகிஸ்தானுடனான போட்டியில் வெற்றிபெறவேண்டிய கட்டாயத்தில் உள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

## பிரெஞ்ச் ஓபன் மகளிர் ஒற்றையர்
# ஜெலினா சம்பியன்



பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் லத்வியாவின் ஜெலினா ஆஸ்டபென்கோ சம்பியன் பட்டம் வென்றார். இறுதியில் ருமேனியாவின் சிமோனா ஹலெப்பை தோற்கடித்தார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில், பிரெஞ்ச் ஓபன கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் நடக்கிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியில், உலகின் 'நம்பர்-4' ருமேனியா வின் சிமோனா ஹலெப், 47ஆவது இடத்தில் உள்ள லத்வியாவின் ஜெலினா ஆஸ்டபென்கோ மோதினர்.

முதல் செட்டை ஹலெப் 6:4 எனக்கைப் பற்றினார். பின் எழுச்சி ஆஸ்டபென்கோ, இரண்டாவது செட்டை 6:4 என தன் வசப்படுத்தி பதிலடிதந்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செட்டில் மீண்டும் அசத்திய ஆஸ்டபென்கோ 6:3 என வென்றார்.

ஒரு மணி நேரம், 59 நிமிடம் வரை நீடித்த போட்டியில் அபாரமாக ஆடிய ஆஸ்டபென்கோ 4:6, 6:4, 6:3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று, கிண்ணத்தை வென்றார்.

இதன்மூலம் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற முதல் லத்விய நட்சத்திரம் என்ற பெருமை பெற்றார். சிமோனா ஹலெப், 2ஆவது முறையாக (2014, 2017) பிரெஞ்ச் ஓபன் இறுதியில் தோல்வி அடைந்தார்.

## பிரெஞ்ச் ஓபன் ஆண்கள் ஒற்றையரில் பட்டம் வென்றார் நடால்



பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடரில் ஸ்பெயின் வீரர் ரபெல் நடால், 10வது முறையாக சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிசில், பிரெஞ்ச் ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் நடந்தது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், உலகின் 'நம்பர்-3' சுவிட்சர்லாந்தின் ஸ்டானிஸ்லாஸ் வாவ்ரின்கா, 4வது இடத்தில் உள்ள ஸ்பெயினின் ரபெல் நடால் மோதினர். இதன் முதல் செட்டை 6-2 எனக் கைப்பற்றிய நடால், இரண்டாவது செட்டை 6-3 என தன்வசப்படுத்தினார். தொடர்ந்து அசத்திய நடால், 3வது செட்டை 6-1 என வென்றார். முடிவில் நடால் 6-2, 6-3, 6-1 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, 10வது முறையாக கோப்பை வென்று சாதனை படைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி குறைப்பால் உள்ளூர் உற்பத்தியாளர்கள் பாதிப்பு

தேசிய பால் உற்பத்தியாளர்கள் மற்றும் மீனவர்களை பாதிப்புக்கு உட்படுத்தும் வகையில் அரசாங்கம் செயற்பட்டு வருவதாக, நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அரசாங்கம், பால் மற்றும் மீன் வரிகளைக் குறைக்க தீர்மானித்துள்ளமையினால், உள்ளூர் உற்பத்தியாளர்கள் பாதிப்புக்கு உள்ளாவார்கள் என அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# டெங்குநோய் பரவினால் முகம்கொடுக்க சுகாதாரத்துறை தயார் - ராஜித தெரிவிப்பு

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் டெங்கு நோய் பரவினால், அதற்கு முகம் கொடுக்க தயாராகவுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

நகர மயமாக்கல் காரணமாக டெங்குநோய் பரவும் வீதம் அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். மேல் மாகாணத்தில் இந்த நிலைமை அதிகமாக காணப்படுவதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்காக 7 கோடி ரூபா பெறுமதியான 50 லொறிகள் சுகாதார அமைச்சுக்கு கொள்வனவு செய்யப்பட்டன. இதனை வழங்கி வைக்கும் நடவடிக்கை நேற்று முன்தினம் காலை நடைபெற்றதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)


# கிருஷ்ணா அடகு சேவை

பதிவு இல : J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 15.12.2016 இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2017 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 15ஆம் திகதி (15.07.2017) இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு தொகுதி பணத்தை கட்டி புதுப்பித்துக்கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 15.07.2017 ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

உரிமையாளர் : A.S.Surendran

இல.370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 021 4900311

இல.09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5046

(C-8780)


# 31ஆம் நாள் நினைவலைகள்



அமரர்

## அப்பாக்குட்டி செல்லத்துரை

(முன்னாள் உபதலைவர் கச்சாய் க்ண்ணகை அம்மன் தேவஸ்தானம்)

"பாரெங்கு மெச்சு கச்சாய்,
பண் டைய வரலாற்றை
ஆங்கில நாடுவரை,
அறிவித்த பெருந் தலைவா"

துயருறும்
நண்பர் குழாம்
வினோபா பாலர் பகல் இல்லம்,
வினோபா நகர், கச்சாய்.

(9404)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>உயரம்: 163cm<br>தகைமை/தொழில்: A/L வெளிநாடு NOT PR<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ: B/7418 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>உயரம்: 5'6''<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/7457 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 33<br>உயரம்: 183cm<br>தகைமை/தொழில்:A/L/பிரான்ஸ் PR<br>தொ.இ: B/7419 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ மருந்தாளர்<br>தொ.இ: G/7459 |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 18<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:O/L/வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் முக்கியம்<br>தொ.இ: B/7422 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/7460 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 13 செவ் 4 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L/அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் அசைவமும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/7423 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: சூரி செவ் 11 இல்<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>தொ.இ: G/7465 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# இராசி பலன்

12.06.2017
(வைகாசி 29, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 5.52 மணிக்கு
துதியை பின்னிரவு 12.04 மணிவரை
பூராடம் முற்பகல் 10.19 மணிவரை
சுபநேரம் 11.52 - 1.22 மணிவரை
இராகுகாலம் 7.22 - 8.52 மணிவரை
வற்றாப்பளை கண்ணகை பொங்கல்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சுக் | சூரி புத | செவ் |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>திருவாதிரை<br>மாலை 5.06ற்கு<br>மகர -சந் | | |
| | | | ராகு |
| சந் | சனி | | குரு |

**மேடம்:** நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும்.

**இடபம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், முன்கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, உறவினர்களிடம் பேசும் போது கவனம் தேவை.

**மிதுனம்:** நண்பர்கள் நம்பிக்கைக் குரியவர்களாக நடந்து கொள்வர், இல்லத்தில் நல்ல சம்பவமொன்று நடைபெறலாம், அலங்காரப் பொருட்களை வா ங்கும் எண்ணம் உருவாகும்.

**கடகம்:** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், காரிய அனுகூலமுண்டு, ஆரோக்கியமான நாள்.

**சிம்மம்:** வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பூர்வீக சொத்துக்களால் ஆதாயமுண்டு, அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**கன்னி:** பெற்றோர் மீது பிரியம் கூடும், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வாகனசுகமுண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**துலாம்:** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம், விருப்பமொன்று கைகூடும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** நல்ல காரியத்திற்கு அடித்தளம் அமைப்பீர்கள், குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், வாக்கு மேன்மையுண்டு.

**தனுசு:** சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், எதிர்பாரத காரியமொன்று நடைபெறலாம், போசனசுகமுண்டு ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**மகரம்:** தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், முயற்சிகளில் தாமதங்கள் ஏற்படலாம்.

**கும்பம்:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், ஆடம்பரப் பொருட்களை வாங்க முற்படுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மீனம்:** முத்தான வாய்ப்புகள் வந்து சேரலாம், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், தொழில் மேன்மையுண்டு, உற்சாகத்துடன் செயற்படுவீர்கள், போசன நன்மையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்ப்பவனியும் திருப்பலியும்

(யாழ்ப்பாணம்)

ஊரணி புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாவில் இன்று பிற்பகல் 3 மணிக்கு புனித தேர்ப் பவனியும் நாளை செவ்வாய்க் கிழமை காலை 8 மணிக்கு திருநாள் திருப்பலியும் இடம் பெறும். (இ

# கழிவுகளால் அவதி

(மந்துவில்)

தென்மராட்சி மந்துவில் பகுதியில் வரணி, வேம்பிராய், புத்தூர் சந்திகளை இணைக்கும் முச்சந்தியான குழுக்களைச் சந்தியில் கொட்டப்படும் கழிவுகளால் சுகாதாரச் சீர்கேடு நிலவுவதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

எனவே உரியவர்கள் இதனைக் கவனத்திலெடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்.(இ-5-10)

# எல்லைப் பிரச்சினையால் புனரமைக்கப்படாத வரணி தில்லையம்பலம் இந்து மயானம்

(வரணி)

வரணி தில்லையம்பலம் இந்து மயானம் எப்பிரதேச சபையின் எல்லைக்குட்பட்டது என்ற நிர்வாக ரீதியிலான பிரச்சினை காரணமாக புனரமைக்கப்படாமல் காணப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வடமராட்சிக்கும் தென்மராட்சிக் கும் இடையிலுள்ள எல்லையில் காணப்படும் தில்லையம்பலம் இந்து மயானம் பல வருடங்களாக எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லாமல் காணப்படுகிறது.

இதுதொடர்பில் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்ற போதும் மயானம் இரு பகுதிகளுக்கும் எல்லைப்பகுதியில் உள்ளதனால் நிர்வாக எல்லை ரீதியிலான பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் பிரதிநிதிகள் தமது பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீடுகளின் கீழ் எவ்விதமான புனரமைப்பு வேலைகளையும் மேற்கொள்ள முடியாமல் உள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர். எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனத்திலெடுத்து நடவடிக்கை எடுக்குமாறு பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-5-103)

# நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம்

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் திருவிழா இடம் பெறவுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் 3ஆம் திகதி திங்கட்கிழமை 108 சங்காபிஷேகமும் மறுநாள் 4 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை இரவு திருமஞ்சமும் 5 ஆம் திகதி புதன்கிழமை பகல் விசேட கருடசர்ப்ப பூசை வாயு பட்சணி நாகம் வீதியுலாவும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு சப்பறத் திருவிழாவும் 8 ஆம் திகதி சனிக்கிழமை பகல் தேர்த்திருவிழாவும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு பூங்காவனமும் இடம் பெறவுள்ளது. (இ-5)



உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு கரவெட்டி, கலட்டி ஐக்கிய சன சமூக நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற சிரமதானப் பணியில் நெல்லியடி பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களும் கிராமத்து இளைஞர்களும் இணைந்து கலட்டி வீதியை துப்புரவு செய்வதைப் படங்களில் காணலாம்.


# நூல் வெளியீட்டு விழா

மேனாள் இந்துப் பண்பாட்டுப் பேராசிரியர் அமரர் இரா.வை. கனகரத்தினத்தின் முதலாமாண்டு நினைவையொட்டி நாளை 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு திருநெல்வேலி சைவவித்தியா விருத்திச் சங்க மண்டபத்தில் பேராசிரியர் கனகரத்தினத்தின் " பண்பாட்டியல் சிந்தனைகள்" எனும் நூல்வெளியீட்டு விழா சங்கத்தின் முதல்வர் வி.ரி. சிவலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

பேராசிரியரின் சகோதரர் வை.இராஜேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் இவ்விழாவில் சங்கத்தின் உப தலைவர் சோ.பத்மநாதன், கலாநிதி க.ஸ்ரீகணேசன், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் எஸ். முகுந்தன் நூலின் பதிப்பாசிரியர் முருகேசு கௌரிகாந்தன், பேராசிரியர் மீனலோசனி, பேராசிரியர் மா. சின்னத்தம்பி, யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ். அமிர்தலிங்கம், உப பீடாதிபதி பா.தனபாலன், சங்கச் செயலாளர் செல்வ மனோகரன், ஆசிரியர் காவலூர் இ.விஜேந்திரன், ஏழாலை நடராசா சிவகுமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ-8)

# ஜீவகாருண்யம்

## மனிதவாழ்வு பிரதிபலிப்பானது



முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும். நாம் செய்யும் நன்மை, தீமைகள் யாவும் முந்தியோ, பிந்தியோ பல விதத்தில் சுக துக்கங்களாக வந்து எம்மை அனுபவிக்க வைக்கிறது.

பிற உயிர்களுக்கு நாம் செய்யும் நன்மை, தீமைகள் யாவும் எம்மை அல்லது எங்கள் சந்ததிகளுக்கே சுக, துக்கங்களாக சென்றடைகின்றன. மாதா, பிதா செய்வது மக்களுக்கு தலைவிதி என்பதும் இதுதான்.

உற்றநோய்நோற்றல் உயிர்க்கு ஊறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு
- திருவள்ளுவர்.

பிற உயிர்களை நாம் துன்புறுத்தாமல் இருப்பதே தவத்தின் வடிவமாகும். தவ வலிமை இருப்பவர்களுக்கு துன்பம் அணுகாது. நன்மைகள் தானாகவே அவரைச் சூழும்.

நாம் இறைச்சி உணவை உண்பதால் பிற உயிர்களை பதை பதைக்க , கதறக் கதற நிலத்தில் விழுத்தி அந்த வேதனையுடன் சத்தம் வராதபடி அதன்வாயை முடக்கிப்பிடித்து மூர்ச்சை அடக்கும் வேதனையுடன் கழுத்தைக் கத்தியால் அரிந்து அரியும்பொழுது தாங்கொணா வேதனையை அனுபவித்த பழியான ஆட்டிறைச்சி உண்பதை தவிருங்கள். அறக்கடவுள் உங்கள் தலைவிதியை நன்மையாக மாற்றுவார்.

கொலைக்களத்தில் மாட்டின் கழுத்தை தூணுடன் ஒட்டக்கட்டி கால்களை இறுகப் பிணைத்து தடம்போட்டு விழுத்தி மண்டையில் இரும்பு உலக்கையால் அடித்து விழுத்தி கத்தியால் கழுத்தை அரியும்போது தாங்கொணா வேதனை மரண அவஸ்தையை அனுபவிக்க தாங்கமுடியாமல் தன் நாக்கை தானே கடித்து கோசல கோமயம் கரைசலாக சீறி அடித்திட அவஸ்தைப்பட்டு மரண ஆய்க்கினைப்பட்டு தன் ஆத்மாவை களட்டிய மாட்டு இறைச்சியை உண்ணாதீர்கள். அவைகளுக்கு உயிர்ப் பிச்சை கொடுங்கள். கடவுள் உங்களுக்கும் நன்மைகள் எல்லாம் பொலிய வைப்பார். இறையருள் கிடைக்கப் பெற்று மகிழ்ச்சியான வாழ்வை தர்ம சாஸ்தா, தர்மதேவதை உங்களுக்கு நல்குவார்.

தன் ஊன் பெருக்கத்திற்கு தான் பிறிது ஊன் உண்பான் எங்ஙனம் ஆளும் அருள் - திருக்குறள்

தன்உடலைவளர்ப்பதற்காக பிற உயிர்களைக் கொன்று அதன் இறைச்சியை உண்பவருக்கு இறைவனின் அருள் கிடைக்காது.

அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றின் உயிர் செகுத்து உணாமை நன்று
- திருக்குறள்

பிறஉயிர்களுக்குதுன்பம் செய்யாது இருப்பதை விட மேலான புண்ணியம் வேறு ஒன்று இல்லை.

ஆயிரம் யாகங்களையும் அபிஷேகங்களையும் தான தருமங்களையும் திருப்பணிகள் முதலானவற்றையும் செய்வதெல்லாம் பலனளியாது போய்விடும். இவை யாவற்றையும் விட மேலானது ஒரு உயிரை கொலை செய்யாது இருப்பது. நாம் செய்யும் நன்மைகள், தீமைகள் யாவும் இப்பிறப்பிலேயே எமக்கோ, எமது சந்ததிக்கோ திரும்பவும் வந்து அடைகிறது. அதன்பெறுபேறாக நாம் இன்ப துன்ப சுகதுக்கங்களை அனுபவிக்கின்றோம். இவை இயற்கையின் நியதி. இதில் நம்பிக்கை வையுங்கள். மனிதரை விட ஓரறிவு குறைவு பட்ட நாற்கால் ஜீவ மிருகங் களுக்கு உயிர்ப்பிச்சை கொடுங்கள்.

சர்வமதபிரியன்

# கைப்பணியாளர்களுக்கான விழிப்புணர்வுச் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தேசிய அருங்கலைகள்பேரவையினால் நடத்தப்படவுள்ள மாகாண கைத்தொழில் கண்காட்சியில் பங்கு கொள்ளும் கைப்பணியாளர்கள் காட்சிப்படுத்தப்படவுள்ள கைப்பணிப் பொருட்கள் தொடர்பான கைப்பணிசார் நுட்பங்களை பயிற்றுவிக்கும் செயலமர்வு இன்று திங்கட் கிழமை காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

இவ் விழிப்புணர்வு செயலமர்வில் களிமண் சார்ந்த உற்பத்திகள், தும்பு, ஓலை, புல் சார்ந்த உற்பத்திகள், பிரம்பு, மூங்கில் சார்ந்த உற்பத்திகள், உலோக கைப்பணிப் பொருட்கள், ஆபரணங்கள், சங்கீத உபகரணங்கள், துணிகளிலான கைப்பணிப் பொருட்கள், பற்றிக் வேலைப்பாடுகள், மர உற்பத்திகள், தோற் பொருட்கள், கற்கள் மூல கைப் பணிப் பொருட்கள், தென்னை, கித்துள், எள்ளு, பனை சார்ந்த உற்பத்திகள், நானாவித கைப்பணிப் பொருட்கள், நினைவுச் சின்னங்கள் போன்ற கைப்பணித் துறை சார்ந்த கைப் பணியாளர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு தேசிய அருங்கலைகள் பேரவையின் அபிவிருத்தி உதவியாளர் அறிவித்துள்ளார். (இ)



யாழ். அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக மூன்று மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகளை லயன் எஸ். விக்னராசா அண்மையில் பாடசாலை நிகழ்வொன்றில் வைத்து வழங்கினார்.





உரும்பிராய் வடக்கு இலக்குமி சி.க.வ.கூட்டுறவுச் சங்கத்தின் வெள்ளிவிழா அண்மையில் உரும்பிராய் சரஸ்வதி சனசமூக நிலைய கலையரங்கில் சங்கத் தலைவி இ.அனுஷா தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் சி.க.வ.கூ.சங்கத்தின் யாழ். மாவட்ட சமாசச் செயலாளர் திருமதி கனகாம்பிகை மங்கல விளக்கேற்றுவதையும் செல்வி இ.அனுஷா தலைமையுரையாற்றுவதையும் போட்டி நிகழ்வையும் படங்களில் காணலாம்.

# நீர்த்தாங்கிக்கு அடிக்கல்

(கச்சாய்)

பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி உதவியுடன் நீர்த்தாங்கி அமைக்கும் வேலைத்திட்டம் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது.

கச்சாய் விநோபா பாலர் பகல் பராமரிப்பு இல்லத்திற்கான நீர்த்தாங்கி அமைக்கும் வேலைத்திட்டத்தை கச்சாய் கிராமசபையின் முன்னாள் பதில் தலைவர் வல்லிபுரம் சின்னத்தம்பி அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைத்தார்.



இந்த நீர்த்தாங்கி அமைக்க 5இலட்சத்து 50ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (இ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?




தந்தித் தொலைக்காட்சிக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழங்கிய செவ்வியில்; இலங்கையில் தமிழின அழிப்பு நடந்தது என வடக்கு மாகாண சபை எடுத்த தீர்மானத்தால், முதலமைச்சர் விக்னேஸ்வரனுடன் இனிமேல் நான் கதைக்க மாட்

தமிழின அழிப்பு என்ற தீர்மானத்திற்காக, முதலமைச்சர் விக்னேஸ்வரனை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இத்துணை தூரம் கடிந்து கொண்டதற்குள் உள்ளார்ந்தமான கோபம் உள்ளதென்பதை மட்டும் கூறிக்கொள்ள முடியும்.

தவிர, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழங்கிய செவ்வி என்பது



டேன் எனக் கூறியிருந்தார்.

வடக்கின் முதலமைச்சர் மீது எதிரான கருத்துக்களைக் கூறுவதென்பது ஒரு அரசியல் தலைவர்- அரசியல்வாதிக்கு ஏற்புடையது எனக்கொள்வதில் நியாயமுண்டு.

ஆனால் வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களுடன் கதைக்கமாட்டேன், அவரைச் சந்திக்கமாட்டேன் என இந்த நாட்டின் பிரதமர் கூறுவதற்குள் அரசியல் நாகரிகம் இல்லையென்றே கூறவேண்டும்.

அதுமட்டுமன்றி தமிழின அழிப்பு நடந்தது என்ற தீர்மானத்தால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இத்துணை தூரம் கோபம் கொள்வதன் காரணம்தான் என்ன? வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழின அழிப்பு நடந்தது என்ற அடிப்படையில்தான் போர்க் குற்றம் தொடர்பான விடயம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் ஆராயப்படுகின்றது. நிலைமை இதுவாக இருக்க வடக்கு மாகாண சபை ஏகமனதாக நிறைவேற்றிய

## விக்னேஸ்வரன் பொய் சொல்கிறார் பிரதமர் ரணிலின் குற்றச்சாட்டு இது

இந்தியாவில் உள்ள தந்தித் தொலைக்காட்சிக்கு எனும்போது அதன் விரிபரப்பு வெளிநாடு என்ற எல்லையைக் கொண்டதாகும்.

ஆக, ஒரு வெளிநாட்டு ஊடகத்திற்கு வழங்கிய செவ்வியில் வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரனுடன் கதைக்கமாட்டேன், அவரைச் சந்திக்கமாட்டேன் என்றெல்லாம் கூறிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒரு கட்டத்தில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் பொய் சொல்கிறார் எனக்கூறியதுதான் மிகப் பெரும் அபத்தம்.

சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் வடக்கு மாகாணத்தின் முதலமைச்சராக இப்போது பதவி பெற்றிருந்தாலும் அவர் இந்த நாட்டின் உயர்நீதிமன்ற நீதியரசராக இருந்தவர்.

இலங்கையின் நீதியரசராக இருந்த ஒருவர் என்ற அடிப்படையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தந்தித் தொலைக்காட்சிக்கான தனது செவ்வியில் நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்களை விமர்சனம் செய்யும் போது நிதானமாக நடந்து கொண்டிருக்க வேண்டும். எனினும் அந்த உயர்ந்த பண்பு அந்த இடத்தில் பிரதமரிடம் இல்லாமல் போயுள்ளது.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் பொய் சொல்கிறார் எனப் பிரதமர் கூறுவதென்பது திட்டமிட்டுச் சொல்வதாகவே இருக்க முடியும்.

இந்த நாட்டின் உயர்நீதிமன்ற நீதியரசராக இருந்த ஒருவரைப் பார்த்து அவர் பொய் சொல்கிறார் எனப் பிரதமர் ரணில் கூறியதற்குள் முதலமைச்சர் விக்னேஸ்வரனைக் கடுமையாக எதிர்க்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளூரக் குடிகொண்டிருந்ததை உணர முடியும்.

ஏனெனில் தமிழ் மக்களுக்காக வடக்கின் முதலமைச்சர் விக் னேஸ்வரன் அதிகமாகக் குரல் கொடுத்தால், கூட்டமைப்பு அரசாங்கத்துடன் சேர்ந்து நிற்பது வெளிப்படத் தொடங்கிவிடும்.

இதனால் கூட்டமைப்பும் தன்னை மாற்றிக்கொள்ள வேண்டிய ஒரு இக்கட்டான சூழ்நிலைக்கு ஆளாகுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

ஆகவே, விக்னேஸ்வரனை எதிர்ப்பதுதான் ஒரே வழி என்பது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தீர்மானமாக இருந்தது.

இந்தத் தீர்மானமே தந்தித் தொலைக்காட்சியில் பிரதமரின் செவ்வியாக வெளிப்பட்டது எனலாம்.

தமிழ்மக்களின் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று வடக்கு மாகாணத்தின் முதலமைச்சராக இருக்

அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையை எப்படியோ தமக்குள் உள்வாங்கி விட்டோம். ஆனால் இப்போது வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் இரா.சம்பந்தர் போல தங்களுக்கு கட்டுப்படமாட்டார் என்பது தெரிகிறது.

சம்பந்தர் போல விக்னேஸ்வரனும் தமக்குக் கட்டுப்படுவதாக இருந்தால் இலங்கையில் நடந்தது இன அழிப்பு என்ற தீர்மானத்தை வடக்கு மாகாண சபை எடுத்திருக்காது.

ஆகவே முதலமைச்சர் விக்னேஸ்வரனை கடுமையாக எதிர்த்தாக வேண்டும்.

அவரை எதிர்ப்பது கூட்டமைப்புக்கும் உதவி செய்வதாக இருக்கும்.

கக் கூடிய ஒருவருடன் கதைக்கமாட்டேன் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியது பேரினவாதத்தின் நிலைப்பாடு என்ன என்பதை உலகறியச் செய்வதாகவும் இருந்தது.

அதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தந்தித் தொலைக்காட்சிக்காகச் செவ்வி கண்டவர்; முதலமைச்சருடன் நீங்கள் கதைக்கமாட்டீர்களா? ஒரு நாட்டின் பிரதமர் அவ்வாறு செய்யலாமா? எனத் திரும்பத் திரும்பக் கேட்டபோதும், தனது முடிவை நிலை நிறுத்துவதில் பிரதமர் ரணில் உறுதியாக இருந்தார்.

(வளரும்)

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாச்சிக்குடாவிலுள்ள வீடொன்றில் திருட்டுப்போன நகைகள், பணம் மீட்பு

## முழங்காவில் பொலிஸாரின் நவீன தொழில் நுட்ப அதிரடி நடவடிக்கையையடுத்து

(மல்லாவி)

கிளிநொச்சிமாவட்டபொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட முழங்காவில் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள நாச்சிக்குடாப் பகுதியில் இடம் பெற்ற திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட சந்தேக நபர்களை தொலைபேசி சீரியல் இலக்கத்தை வைத்து கைது செய்துள்ளதுடன், திருட்டுப் போன தங்க நகைகள், பணம் என்பவற்றையும் மீட்டுள்ளதாக முழங்காவில் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

முழங்காவில் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள நாச்சிக்குடாக் கிராமத்தில்

கடந்த மாதம் 30 ஆம் திகதி செவ்வாய்கிழமை இரவு 8 மணியளவில் வீட்டைப் பூட்டி விட்டு வீட்டில் உள்ள அனைவரும் அதே கிராமத்தில் உள்ள உறவினர் வீட்டுக்கு சென்றுள்ளனர்.

இதனை அவதானித்து விட்டு உள் நுழைந்த திருடர்கள் வீட்டின் அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த 10 பவுண் நிறையுடைய தங்கநகைகளையும்.

இரண்டு இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பணத்தையும். கைத் தொலைபேசி ஒன்றையும் திருடிச் சென்றுள்ளனர்.

வீடு திரும்பிய வீட்டார் தமது வீடு உடைக்கப்பட்டு பொருட்கள் திருடப்பட்டுள்ளதை அவதானித்து விட்டு. திருட்டுத் தொடர்பில் வீடு உரிமையாளரினால் முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து. துரிதமாகச் செயற்பட்ட முழங்காவில் பொலிஸார் திருட்டுத் தொடர்பில் புலன் விசாரணை முன்னெடுத்திருந்த நிலையில்.

திருடப்பட்ட பொருட்களில் உள்ளடங்கியிருந்த தொலைபேசியியைக் கொள்வனவு செய்த சிட்டையை வீட்டு உரிமையாளரிடம் இருந்து பெற்ற பொலிஸார் சிட்டையில் எழுதப்பட்டிருந்த தொலைபேசியின் "இமி இலக்கத்தை" வைத்து அந்த தொலைபேசி இயங்கிய இடத்தை கண்டறிந்துள்ளனர்.

இதன் போது. திருட்டுப் போன தொலைபேசியை திருடிய திருடர்கள் அதனை ஒரு இலக்கத்துடன் மட்டும் தொடர்பு கொண்ட பின்னர் செயலிழக்கச் செய்த நிலையில்மறைத்து வைத்துள்ளனர்.

இதனையடுத்து துரிதமாக செயற்பட்டபொலிஸார்தொலைபேசியில் கடைசியாக திருடர்கள் தொடர்பு கொண்ட இலக்க தொலைபேசியை வைத்திருந்தவரை மடக்கி பிடித்து விசாரணை மேற் கொண்டுள்ளனர்.

விசாரணையின் போது. சந்தேக நபர் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் திருடன் இனங் காணப்பட்டு கைது செய்யப்படதுடன், திருட்டுச் சந்தேக நபர் வழங்கிய தகவல்களை அடுத்து மற்றுமொரு சந்தேக நபரும் திருட்டில் இணைந்து ஈடுபட்டுள்ள நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் நடைபெற்ற விசாரணையை அடுத்து திருடப்பட்ட தங்கநகைகள் 10 பவுண் முழுமையாக மீட்கப்பட்டதுடன் திருடப்பட்ட பணத்தில் 2 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாவும், தொலைபேசியும் ஓர் இடு காட்டில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

இத் திருட்டின் போது 10 ஆயிரம் ரூபா பணத்தை திருடர்கள் செலவு செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்கள்.

நவீன தொழில்நுட்ப வசதியைப் பயன்படுத்தி முழங்காவில் பொலிஸார் திருடர்களை கைது செய்துள்ளதுடன், திருடப்பட்ட பொருட்களையும் மீட்டுள்ளனர்.

கைதான சந்தேக நபர்களை, கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதுடன் தடயப் பொருட்களையும் பாரப்படுத்த நடவடிக்கை மேற்க் கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-15)

### அவசர மருத்துவ முதலுதவிச் சேவை

கிளிநொச்சி பளை திரியாய் அம்மன் ஆலய பொங்கல் விழாவை யொட்டி இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்ட கிளையினரால் ஒவ்வொரு வருடமும் முதலுதவிச் சேவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவ்வருடம் அவசர மருத்துவ முதலுதவிச் சேவை கடந்த 9 ஆம் திகதி மேற்படி ஆலயத்தில் முன்னெடுக்கப் பட்டது.

இதில் மக்கள் பங்கேற்று அவசர மருத்துவமுதலுதவிச் சேவையை பெற்று பயனடைந்தனர்.

இந்த முதலுதவிச் சேவையில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் உறுப்பினர் இராசரத்தினம், தொண்டர்கள் , பணியாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (2)






நா.யோகேந்திரநாதன் எழுதிய "நீந்தி கடந்த நெருப்பாறு" நூல் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் ஆரம்பமானது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா கலந்து கொண்டதுடன், வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான பசுபதிப்பிள்ளை, அரியரத்தின்ம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிதனர். (படங்கள்:- மல்லாவி செய்தியாளர்)

## கடும் வரட்சியினால்

# காடுகளில் நீர்நிலைகள் வற்றியதால் அரியவகை மிருகங்கள் உயிரிழப்பு

(மல்லாவி )

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நிலவிவரும் கடுமையான வரட்சி காரணமாக மக்கள் நீரின்றி பாதிக்கப்பட்ட நிலையில், வான் பயிர்களான தென்னை, பலா, உட்பட பல பயன்தரும் மரங்கள் அழிவடைவதாகவும் காட்டுப் பகுதியில் வாழும் அரியவகை காட்டு விலங்குகளும் நீரின்றி உயிரிழந்து வரும் அவல நிலை காணப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

தற்போது நிலவிவரும் கடும் வரட்சி காரணமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் கடுமையான பாதிப்புக்களை எதிர் கொண்டுள்ளது.

இங்குள்ள மக்களின் குடிநீர் கிணறுகளின் நீர் மட்டம் குறைவடைந்தமையால் மக்கள் குடிநீர் பெறுவதில் சிரமங்களை எதிர் கொள்வதாக தெரிவிக்கும் நிலையில், பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் மேற்கொண்ட உப உணவுப் பயிர்செய்கையும் அழிவடையும் இறுதி நிலையை எட்டியுள்ளது.

நீண்ட கால பயன் தரும் வான் பயிர்கள் அழிவடைந்து வருகின்றன.

இன் நிலையில், அடர்ந்த காட்டுப் பகுதிகளில் உள்ள நீர் நிலைகள் வற்றி போனமையால் காட்டு விலங்குகள் நீர் நிலைகளை தேடியலைந்து திரியும் நிலையில் சமூக விரோதிகளால் அவை வேட்டையாடப்படுகின்றன.


அத்துடன் நீரின்றி இறந்து வருகின்றது. குறிப்பாக பாதுகாக்கப்பட்ட அரிய வகை புள்ளிமான்கள் இறந்து வருகின்றது.

காட்டு யானைகள் நீருக்காவும், உணவுக்காகவும் கிராமங்களை நோக்கிப் படை எடுத்து வருகின்றன.

இதனால் மக்கள் பெரும் பீதியடைந்த நிலையில் இரவு நேரங்களில் விழித்திருந்து காவல் காக்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

நீரைத் தேடிய நிலையில், தனியாகவும், கூட்டாகவும் வரும் யானைகள் காடுகளில் சட்ட விரோதமான முறையில் மண், கடத்து வோரால் வெட்டப்பட்ட கிடங்குகளில் வீழ்ந்து காயமடைவதுடன், உயிரையும் இழக்கும் அபாயம் நிலை காணப் படுகின்றது. (2-15)

# புதுக்குடியிருப்பு- வற்றாப்பளை பிரதான வீதி பக்த அடியவர்களுக்காக திறக்கப்பட்டுள்ளது



(பனிக்கன்குளம்)

வரலாற்று சிறப்பு மிக்க வற்றாப்பளை அம்மன் ஆலய பொங்கல் விழா இன்ற திங்கட் கிழமை நடைபெறும்.

இதனையொட்டி புதுக் குடியிருப்பு வற்றாப்பளை பிரதான வீதி பக்தர்களின் நலன் கருதி நேற்று திறக்கப்பட்டு போக்கு வரத்து மீண்டும் குறித்த பாதை நாளை செவ்வாய்க் கிழமை மூடப்படும் என இராணுவத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு தமது சொந்த கிராமமான கேப்பாபிலவில் தம்மை வாழ இராணுவம் அனுமதிக்க வேண்டும் என கோரி போராடிவரும் மக்கள் வீதியில் இரு பக்கத்திலும் உள்ள காணிகளை பெரும் ஆதங்கத்துடனும், ஏமாற்றத்துடனும் போகும் வழியில் பார்வையிடுகின்றனர்.

இந்த நிலையில் கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி முல்லைத்தீவு இராணுவ பாதுகாப்புப் படைக்கட்டளை தலைமையகம் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட இந்த கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை 103.ஆவது நாளாகவும் தமது சொந்த நிலங்களுக்குசெல்லவேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து போராடிவரும் மக்களுக்கு இந்த தற்காலிக பாதை திறப்பு ஏமாற்றத்தை அளித்துள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

தமது காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என போராடி வரும் நிலையில் பிரதான வீதியை மட்டும் இராணுவம் தற்காலிகமாக திறந்து விட்டுள்ளது.

எமது வாழ்விடங்கள் எம்மிடம் மீளவும் ஒப்படைக்கும் வரை தொடர்ந்தும் போராட்டத்தை தொடரப் போவதாக தெரிவித்து தமது கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர் கோப்பாபிலவு மக்கள்.

(2-281-15)

# சித்திரக்கண்காட்சியும் பரிசளிப்பும்

"சமாதானம் மற்றும் நல்லிணக்கத்துடனே நாட்டை அபிவிருத்தி செய்வோம்"எனும் தொனிப்பொருளில் சித்திரக் கண்காட்சியும் பரிசளிப்பு நிகழ்

2.30 மணியளவில் வன்னி பிரதி பொலிஸ்மா அதிபர் தலைமையில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

விருந்தினர்களாக பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர , [illegible] நாதன் ஆகியோர் கலந்து

[illegible] வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களையும், பணப்பரிசுகளையும் வழங்கி வைத்தனர்வன்னி பிரதி பொலிஸ்மா அதிபர் காரியால யத்தில் கடந்த 08-04-2017 நடை[illegible] சித்திரப் போட்டியில் வவுனியா, மன்னார் ஆகிய

பாடசாலை களின் 602 மாணவர்கள் கலந்து கொண்டு தங்கள் ஆக்கங்களை வரைந்திருந்தனர். மாணவர்களின் ஆக்கங்களை பார்வையிட்டபின் உரை யாற்றிய பொலிஸ்மா அதிபர். மாண வர்களுக்கு சிறந்த இலாபம் சுத்தமாக

யும் சுத்தமாக வைத் திருக்க வேண்டும். மாணவர் கள் கல்வி கற்கும் இடங்கள், உணவு அருந்தும் இடங்கள் ஆகிய வற்றை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். உலகிலேயே பெரிய செல்வம் உங்கள் சந்தோசமே என தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி பொதுச்சந்தையில் அமையப்பெற்ற கடைத்தொகுதி கட்டடம் இன்று திறக்கப்படும்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுச் சந்தையில் புதிய கடை தொகுதி ஒன்று இன்று காலை 09.30 மணிக்கு வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது.

மீள் குடியேற்றத்திற்கு பின்னர் அம்பாள்குளம் கிராமத்தில் 2010 ஆம் ஆண்டு இயங்கி வந்த கிளிநொச்சி பொதுச் சந்தை பின்னர் புதிதாக 2013 ஆம் ஆண்டு ஏ-9 வீதிக்கு அருகில் தற்போது இயங்கி வருகின்றது. இந்தச்சந்தையில் மீன் கடைத் தொகுதி, மரக்கறி கடை தொகுதி நிரந்தரக் கட்டடமாக அமைக்கப்பட்டு ஏனைய கடைகள் அனைத்தும் தற்காலிகமாக அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

தற்போது புதிதாக 64 கடைகளை கொண்ட வெற்றிலை, தேங்காய், பழம், மண்பாண்டம், மருந்தகம், புத்தகசாலை, பாலுற்பத்தி பொருட்கள் விற்பனை நிலையம் ஆகியவற்றிற்கான கட்டடத்தொகுதி நெல்சிப், கரைச்சி பிரதேசசபை இணைந்து வழங்கிய 22 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் இக்கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டது.

இக் கட்டடத் தொகுதி இன்று திங்கட்கிழமை காலை 09.30 மணிக்கு வடமாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரனினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான பசுபதிப்பிள்ளை,அரியரட்ணம், தவநாதன் ஆகியோரும் ஏனைய பிரமுகர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (2-271)

# ஆயுதமுனையில் மிரட்டி 40 பவுண் நகைகள், 4இலட்சம் பணம் கொள்ளை

## கல்லாறு பகுதியில் சம்பவம்

(மல்லாவி)

கிளிநொச்சி கல்லாறு பகுதியில் ஆயுதமுனையில் 40 பவுண் தங்கநகைகள், நான்கு இலட்சம் ரூபா பணம் என்பன கொள்ளையிட்ட சம்பவம் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 3 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவ்து,



குறித்த பகுதியில் தனியார்வர்த்தகநிலையம்ஒன்றை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த கடை உரிமையாளர், தங்கி நின்ற நபர் ஆகியோர் மீது ஆயுத முனையில் மிரட்டி தாக்குதல் நடத்தி அங்கு வைக்கப்பட்டிருந்த பணம் உள்ளிட்ட பெறுமதி வாய்ந்த பொருட்களை கொள்ளையிட்டனர்.

அதன் பின்னர் கடை உரிமையாளரையும் பிரஸ்தாப நபரையும் ஆயுதமுனையில் அருகில் இருக்கும் வீட்டிற்கு அச்சுறுத்தியவாறு அழைத்துச் சென்றுள்ளனர்.

உரிமையாளரை அச்சுறுத்தும் போது அவரின் அலறல் சத்தம் கேட்டு விழித்துக் கொண்ட வீட்டார் கதவைத் திறக்கும் முன்னர் வீட்டின் பின் கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த பெண்கள், சிறுவர்கள் ஆகியோரை அச்சுறுத்தி காதில் அணிந்து இருந்த தோடுகளைக் கழற்றுமாறு மிரட்டிய தோடு வீட்டினுள் வைக்கப்பட்டிருந்த நகைகளையும் கொள்ளையிட்டுள்ளனர்.

இதேவேளை வீட்டில் இருந்தவர்கள் அயலவர்களின் உதவியைப் பெற்றுக் கொள்ள முயன்றபோதும் திருடர்களால் அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து தர்மபுரம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. அவ்விடத்திற்கு விரைந்த தர்மபுரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

குறித்த திருட்டுச் சம்பவத்தின் போது 40 பவுண் தங்கநகைக்ள், 4 இலட்சம் ரூபா பணம் என்பன திருட்டுப் போயுள்ளதாக வீட்டின் உரிமையாளரினால் தெரிவிக்கப்படுகின்றது. (2-15)

# கையடக்கத் தொலைபேசியை கடமைநேரத்தில் பயன்படுத்தாதீர்

## வடக்கு மாகாண கல்வி அமைச்சர் அதிபர்களுக்கு ஆலோசனை

கடமை நேரத்தில் கையடக்க தொலைபேசிகளை பயன்படுத்தாதீர்கள் என வடக்கு கல்வி அமைச்சர் த.குருகுலராஜா அதிபர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

வவுனியா புளியங்குளத்தில் அலுவலர் விடுதியை திறந்து வைத்த பின்னர் வவுனியா வடக்கு வலய அதிபர்களுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர்,

ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முடியாத நிலையில் இருக்கும் ஆசிரியர்களை அனைத்து பாடங்களுக்கும் உரிய வகையில் பயன்படுத்தவேண்டும்.

அவர்கள் பயிற்சி பெற்றிருப்பின் அதனை செய்யக் கூடிய வகையில் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கும்.

குறிப்பாக வடக்கு கல்வி நிலை பின்தங்கியதற்கு போரியல் தாக்கமே முக்கிய காரணம். கடமை நேரத்தில் கையடக்க தொலைபேசிகளை பயன்படுத்தக்கூடாது என நாம் கூறியிருக்கின்றோம். ஆனால் இந்தக் கூட்டத்தில் அதிலும் பாராளுமன்ற உறுப்பினர், அமைச்சர், மாகாணசபை உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள் இருக்கும் இடத்தில் துணிந்து கையடக்க தொலைபேசிகளை பார்த்துக்கொண்டு இருக்கின்றீர்கள். சத்தம் போடுகின்றீர்கள். ஆகவே வகுப்பறைகளில் என்ன நடக்கும் என்பது எமக்குத் தெரியும். பல அதிபர்கள் அதனைத் தான் செய்கின்றனர்.

பாடசாலையில் மாணவர்களுக்கு அடிக்காதீர்கள் என்றால் நீங்கள் அடிக்கின்றீர்கள். பாலர் பிரிவில் தடியுடன் நிற்கின்றீர்கள். பச்சிளம் பாலகர்களை கசக்குகின்றீர்கள். அவ்வாறு செய்ய முடியாது.

இதற்காகவே 40 உளவள ஆசிரியர்களை பயிற்றுவித்து வலயங்களுக்கு அனுப்பியுள்ளோம் என தெரிவித்தார். (2-250)

# வீடொன்றின் அறை தீக்கிரை

## பெறுமதியான பொருட்கள் தீயில் எரிந்து நாசம்

(குருமன்காடு)

வவுனியா, ஈரப் பெரிய குளம் புகையிரத நிலையத்திற்கு முன்பாக அமைந்திருந்த வீடு ஒன்றின் அறை நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் தீக்கிரையானதில் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட் கள் எரிந்து நாசமாகியுள் ளதாக ஈரப்பெரிய குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். வவுனியா, ஈரப் பெரிய குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் அறை முன்னர் வியாபார நிலையமாக பயன் படுத்தப்பட்டிருந்தது. தற் போது வியாபாரம் மேற்கொள்ளப்படாது வீட்டுப் பொருட்கள் வைப்பதற்கான இடமாக மாற்றப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இந்நிலையிலேயே குறித்த வீட்டு அறை தீப்பற்றி எரிந்துள்ளது.



இதனை கட்டுப்படுத்த அயலவர்கள் மற்றும் வீட்டு உரிமையா ளர்கள் முயற்சித்த போதும் கைகூடாமல் அது முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

இதனால் அங்கு நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்,துவிச்சக்கரவண்டி உட்பட வீட்டு தளபாடங்கள் பல தீயில் எரிந்து சாம்பலாகியுள்ளதுடன் தீ விபத்து எவ்வாறு ஏற்பட்டது என பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளைமேற் கொண்டு வருகின்றனர் (2-250)

# ஆலய கருவறைக்கு அடிக்கல் நாட்டல்

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள கைவேலி இரண்டாம் வட்டாரத்தில் அமையப்பெற்றுள்ள அருள்மிகு ஸ்ரீ முருகன் கண்டி பிள்ளையார் ஆலயத்தின் கருவறைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள மேற்படி ஆலயத்தின் கருவறைக்கான அடிக்கல்லை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா நாட்டிவைத்தார்.

இதன் போது வடக்கு மாகாண சபை உறுப்பினர் தவநாதன்,ஈழமக்கள் ஜனநாயக்கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட நிர்வாக செயலாள்ஜெ.கிருபன்ஆகியோரும் உடன் இருந்தனர். (2)




# சமளங்குளம் வீதி சமிக்ஞைகள் இனந்தெரியாத நபர்களால் சேதம்

(குருமன்காடு)

வவுனியா சமளங் குளத்தில் வீதி சமிக்ஞை இனந் தெரியாத நபர்களினால் சேதமாக்கப்பட்டுள்ளது.

கோவிற்குளம் - சிதம்பரபுரம் பிரதான வீதியில் அமைந்துள்ள சமளங்குளப் பாலத்திற்கு அருகே காணப்பட்ட வீதி சமிக்ஞை நேற்று முன்தினம் இரவு இனந் தெரியாத நபர்களினால் சேதமாக்கப்பட்டுள்ளது.



கட்டுமானப்பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்ற இரவு வேளையில் அவ் விடத்தில் நின்ற இனந் தெரியாத நபர்கள் பாலத்தின் தூண்கள், வீதி சமிக்ஞை குறியீட்டு பலகை, பாலத்தின் கீழ் மண்ணில் பதிக்கப்பட்ட புற்கள் என்பவற்றை சேதப்படுத்தியுள்ளனர்.

அவ்விடத்தில் நேற்று முன்தினம் இரவு இளைஞர்கள் ஒன்றுகூடி மது பாவனையில் ஈடுபட்டிருந்ததாக பொதுமக்கள் தெரிவித்

# கற்பகபுரம் கிராம வீட்டுத்திட்டத்தில் வழங்கப்படும் பணத்தில் முறைகேடுகள்

வவுனியா கற்பகபுரத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் வழங்கப்பட்டு வரும் வீட்டுத்திட்டத்தில் முறைகேடுகள் இடம்பெறுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். குடியேற்றம் செய்யப்பட்ட கற்பகபுரம் கிராமத்தில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறு வீடுகள் அமைப்பதற்கு மலசலகூடத் தொகுதிகளுக்கு ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரமும் மலசலகூடம் உள்ள குடும்பங்களுக்கு ஐந்து இலட்சம் வருகின்றது. இந் நிலையில் இம் மக்களில் சிலருக்கு வீடுகளை அமைப்பதற்கு சில ஆண்டுகளுக்கு முன்னர் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் 10 வருட கடன் திட்ட த்தில் ஒரு இலட்சம் ரூபா வழங்கப்பட்டு இரு அறைகள் அமைக்கப்பட்டிருந்தன. இவ்வாறான சூழலில் தற்போது வழங்கப்படும் வீட்டுத்திட்டத்தில் 10 வருட கடன் திட்டத்தில் வழங்கப்பட்ட கடனை ஒரே தடவையில் கழித்து நான்கு இலட்சமாகவே வழங்கப்படுவதாக குற்றம் சாட்டுகி தாம் வீட்டுத்திட்டத்தை முழுமையாக பூரணப்படுத்த முடியாதுள்ளதாக தெரிவிக்கும், இம் மக்கள் தமக்கு வழங்கப்பட்ட 10 வருட கடன் திட்டத்திற்கான பணத்தை புதிய வீட்டுத்திட்டத்தில் கழிக்காது முழுமையாக பணத்தை தரும் பட்சத்தில் வீடுகளை அமைக்கக்கூடியதாக இருக்கும் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இது தொடர்பில் வவுனியா மாவட்ட அபிவிருத்திகுழு தலைவர்கள் கூடிய கரிசனை கொள்ள வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகோவை திருப்பியனுப்பிய மலேசியா; செந்தில் தொண்டமான் வருத்தம்



(சென்னை)

மலேசிய அரசாங்கம் வைகோவை திருப்பி அனுப்பியது வருத்தம் அளிக்கிறது என ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

அமைச்சர் செந்தில் தொண்டமானின் பூர்வீகம் தமிழகத்திலுள்ள நெல்லை மாவட்டம் வள்ளியூர் ஆகும். இவருடைய பெற்றோர் பாளையங்கோட்டை மகாராஜ நகரில் வசித்து வருகிறார்கள்.

இந்நிலையில் நாகர் கோவிலில் நேற்று முன் தினம் நடந்த திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக செந்தில் தொண்டமான், தனது மனைவியுடன் பாளையங்கோட்டைக்கு வந்து தனது வீட்டில் தங்கியிருந்தார். அவரை நிருபர்கள் பேட்டி கண்டனர். அப்போது அவர் தெரிவிக்கையில்,

இந்திய அரசின் சார்பில் இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை நான் வரவேற்கிறேன். இலங்கை தமிழர்கள் தற்போது பழைய நிலையில் இருந்து இயல்பு நிலைக்கு மாறி வருகிறார்கள்.

இந்த வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் மூலம் அவர்களுக்கு மறுவாழ்வு ஏற்பட்டுள்ளது.

நடிகர் ரஜினிகாந்த் அரசியலுக்கு வருவது அவருடைய சொந்த விருப்பம். மலேசிய அரசு வைகோவை திருப்பி அனுப்பியது எனக்கு வருத்தம் அளிக்கிறது எனத் தெரிவித்தார். (இ-7)

# முதியோர் பராமரிப்பும் பாதுகாப்பும்

ஒரு தனிமனிதனின் வாழ்க்கை முதல் நிலையில் குழந்தைப்பருவம், இளமைப்பருவம் நிறைவாக முதுமைப்பருவம் என மூன்று வகையாகப் பிரிக்கப்படுகிறது. 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் முதியவர்கள் அல்லது ஒரு நாட்டின் மூத்த குடிகள் என்று வரையறுக்கப்படுகின்றனர். ஒக்டோபர் முதலாம் திகதியை சர்வதேச சிறுவர்கள் மற்றும் முதியோருக்கான தினமாக பிரகடனப்படுத்தியிருந்தாலும் பெரும்பாலும் இது சிறுவர்களுக்கான ஒரு சர்வதேச நாளாகவே கொண்டாட்டங்கள் மூலம் அறிய முடியும்.

## உலக அளவில் முதியோர்

வளர்ந்து வரும் அதி நவீன மருத்துவத்தால் உலக அளவில் முதியோரின் எண்ணிக்கை விறுவிறுவென அதிகரித்து வருகிறது. 1990களில் 4 சதவிகித முதியோர்கள் இருந்த அமெரிக்காவில் இன்று சுமார் 14 சதவிகிதமாக அதிகரித்திருக்கிறது. 2020இல் 17 சதவிகிதமாக இருக்கும் அதே வேளை உலக அளவில் 2020இல் நூறு கோடி பேர் அறுபதை தாண்டியவர்களாக இருப்பார்கள் என்கின்றன ஆய்வுகள். அது மட்டுமன்றி 80 வயதிற்கு மேற்பட்டவர்களின் எண்ணிக்கையும் அதிகரிப்பை காட்டுகின்றது. அதிக முதியவர்களை கொண்ட நாடாக சீனாவில் 16 கோடிக்கும் அதிகமான முதியவர்கள் உள்ளனர்.

## இலங்கையில் முதியோர்

இலங்கையில் முதியோர் பல்வேறுபட்ட பொருளாதார ரீதியான பிரச்சினைகளுக்கு முகம்கொடுப்பது அதிகரித்து செல்வதனை அவதானிக்க முடிகிறது. இலங்கையின் தரவுகளின் படி 60 வயதிற்கு மேற்பட்டோர் 2012இல் 12.5 சதவிகிதமும் அதன் வளர்ச்சி சுமார் 16.7 சதவிகிதம் 2021 இலும் அத்துடன் மொத்த சனத்தொகை வளர்ச்சியின் சதவிகிதம் 2041லும் இருக்கும் எனக்கணக்கெடுப்புகள் காட்டுகின்றன.

## இலங்கையில் முதியோர் பாதுபாப்பு

இலங்கையின் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள் தொடர்பான அத்தியாயத்தின் 12ஆவது உறுப்புரை சட்டத்தின் முன் சகலரும் சமம் என ஏற்பாடு செய்துள்ள போதிலும் முதியோர்கள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை. எனினும் பெண்கள் சிறுவர்கள் மற்றும் வலது குறைந் தோர் தொடர்பில் 12(4)இல் விசேட ஏற்பாடுகள் உள்ள போதும் முதியோர்கள் அதில் உள்ளடக்கப்படவில்லை.

ஆனால் இலங்கையில் தற்பொழுது பின்வரும் சட்ட ரீதியான ஏற்பாடுகள் உள்ளன.

* ஓய்வூதிய சம்பள ஏற்பாடுகள்
* ஊழியர் சேமலாப நிதியச்சட்டம்
* 2000ஆம் ஆண்டின் 09 இலக்க முதியோர்களின் உரிமைகளை பாதுகாக்கும் சட்டம்

## 2000 ஆம் ஆண்டின் 09 இலக்க முதியோர்களின் உரிமைகளை பதுகாக்கும் சட்டம்

முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் இலங்கையின் சட்ட முறைமையில் புதிதாகச் சேர்க்கப்பட்ட 2000ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க முதியோர்களின் உரிமைகளை பாதுகாக்கும் சட்டமானது இலங்கையின் சட்ட முறைக்குள் முதியோர்கள் தொடர்பில் சட்டரீதியான பாதுகாப்பை பெற்றுக்கொடுக்க எடுக்கப்பட்ட பிரதான முயற்சியாக இதனை நோக்க முடியும். முதியோர்களின் உரிமைகளைப் பேணுவதற்கான ஏற்பாடுகள் மற்றும் சட்டமயப்படுத்தப்பட்ட தேசிய முதி யோர் சபையை தாபித்தல் அவற்றின் தத்துவங்கள், நடவடிக்கை முறை கள் ஆகியவை விபரமாக உட்படுத்தப்பட்டுள்ள சட்ட மாகும்.

1991ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் தாபனத்தினால் வெளியிடப்பட்ட ஆலோசனைக்கமைவாக இலங்கை அரசு முதியோர்களின் உரிமைகளைக் காப்பதற்கு இலங்கையின் சட்ட முறையில் புதிதாக சேர்க்கப்பட்டு விசேட கவனத்தை செலுத்தி அவர்களது நலனுக்காக தேசிய முதியோர் சபை எனும் நிறுவனமொன்றை தாபிப்பதற்கும் முதியோர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான சட்டங்கள் மற்றும் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

## முதியோர் தேசிய சபை

ஐக்கிய நாடுகள் தாபனத்தின் முதியோர் தொடர்பான கருத்தியலுக்கும் முதியோர் தொடர்பான வியன்னா சம்மேளன பரிந்துரை களுக்கும் அமைவாக முதியோர் நன்மை கருதி செய்யப்படும் முக்கியமான பொறிமுறையொன்றாகும். இது பின்வரும் விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

* இச் சபையின் தலைவராக சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர்
* இச் சபையின் துணை தலைவராக சமூக சேவைகள் அமைச்சின் மேலதிக செயலாளர்
* இச் சபையின் செயலாளராக சமூக சேவைகள் அமைச்சின் பணிப்பாளர்
* ஜனாதிபதியினால் குறித்த அமைச்சரோடு கலந்துரையாடி முதியவர்களை பிரதி நிதித்துவப்படுத்த மூன்று உறுப்பினர்கள்
* ஜனாதிபதியினால் குறித்த அமைச்சரோடு கலந்துரையாடி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சேவைகளிலுள்ள நிறுவனங்கள் அரசாங்க சார்பற்ற நிறுவனங்களை பிரதி நிதிப்படுத்தும் ஐந்து உறுப்பினர்கள்.
* ஜனாதிபதியினால் குறித்த அமைச்சரோடு கல[illegible] சபைகள் மற்றும் அரசாங்க



அலுவலர்கள் ஆகிய பிரிவுகளுக்குப்பொறுப்பான நான்கு உறுப்பினர்கள் என 15 உறுப்பினர்களை கொண்ட சபையாக அமைதல்.

மதிப்புடனும், சுயாதீனத்துடனும் வாழ்வதற்கு முதியோர்களுக்கு துணை புரிவதற்காக இலங்கையின் முதியோர்களின் உரிமைகளை பாதுகாப்பதும் நலன்புரியை மேம்படுத்துவதும் சபையின் முக்கிய பணியாகும். இதன் அடிப்படையாகக்கொண்டு பல அதிகாரங்கள் இச்சபைக்கு வழங்கப்பட்டுள்ளன. அதாவது அரச மற்றும் தனியார் சேவைகளின் போது இலகுவாகவும் நன்மையானதுமான சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு முதியோர் அடையாள அட்டை வழங்குதல் கிராம மற்றும் பிரதேச அத்துடன் மாகாண சபை மட்டங்களில் முதியோர் சபைகளை அமைத்தல் மற்றும் மதரீதியான செயற்பாடுகளில் காத்திரமாக பங்கு கொள்ளும் பொருட்டு அவர்களை ஊக்குவித்தல் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

மேலே குறிப்பிடப்பட்ட 2000ஆம்ஆண்டின்9ஆம் இலக்க சட்டத்திற்கு அமைவாக சட்டத்தின் 15(1) பிரிவுக்கமைய பிள்ளைகளால் பெற்றோர்கள் பேணிக் காக்கப்படுதல் மற்றும் அவர்களது தேவைகளை பூர்த்தி செய்யப்படுதல் வேண்டுமெனவும் அது பிள்ளைகளின் கடமை மற்றும் பொறுப்பு எனவும் இப் பிரிவில் கூறப்பட்டுள்ளது. சட்டத்தின் 15(2) பிரிவுக்கமைய பிள்ளை இல்லாத முதியோர்களுக்காகத் தகுதியான தங்குமிட வசதிகள் அரசாங்கத்தினால் செய்யப்பட வேண்டும்.

சட்டத்தின் 25(1)இன் படி பிள்ளை அல்லது தம்மை பராமரித்துக் கொள்ள முடியாத பெற்றோர் தொடர்பில் பராமரிப்பு வழங்க வேண்டும்.

* மாதக்கொடுப்பனவு அல்லது
* ஏதாவது மாதாந்த கொடுப்பனவு அல்லது
* ஒரு முழுக் கொடுப்பனவு

தங்களுக்கு செலுத்த வேண்டும் என முதியோர் ஒரு பிள்ளைக்கு அல்லது பலருக்கு கட்டளையிடும்படி சபைக்கு விண்ணப்பம்ஒன்றினைச் செய்ய முடியும். இதன் போது

* சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற குறைந்த தொகையை குறித்த வங்கியில் வைப்பிலிடும்படி
* அத்தகைய குறைந்த தொகையின் பெறுமதிக்கு ஒத்த காப்புறுதி ஒன்றை ஒரு வருடத்திற்கு செய்ய பிரதிவாதிக்கு கட்டளையிட முடியும்.

மேலே குறிப்பிட்டுள்ள படி எவரேனும் பிரதிவாதி யான பிள்ளை அதனை செய் யாது விட்டுவிடும் போது செலுத்த வேண்டிய தொகையை பிரதிவாதியின் சம்பளத்திலிருந்து அறவிடுவதற்கு முறைப்பாட்டாளர் சபைக்கு விண்ணப்பம் ஒன்றினைச்செய்ய முடியும்.

அத்துடன் சபையினால் செய்யப்பட்ட பணிப்பை கவனியாதுவிடல் அல்லது மீறுதல் நீதிமன்றத் திற்கு செய்த அவதூறு எனக் கருதி சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். இதற்கமைய ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப் பணம் அல்லது ஒரு வருடத்திற்கு விஞ்சாத மறியற் தண்டனைக்கு அல்லது இரண்டிற்கும் உட்படுத்தக் கூடிய தவறென இச் சட்டத்தின் 32 மற்றும் 41ஆம் பிரிவுகளில் விதித்துரைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஏதாவது ஒரு கொடுப்பனவு செலுத்தப்படுவதன் காரணமாக ஏனைய உரிமைகள் மறுக்கப்பட முடியாது.

இச் சபைக்கு பின்வரும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்ப முடியும்.

செயலாளர், முதியோர் பராமரிப்பு முறைப் பாட்டுச் சபை, தேசிய முதியோர் செயலகம், 150, ஏ.எல். எச்.பி. கட்டடம், நாவில றோட், நுகே கொடை.

மேலதிக விபரங்களுக்கு அண்மையிலுள்ள சட்ட உதவி ஆணைக்குழு காரியாலயத்தையோ அல்லது சமூகசேவைகள் காரியாலயத்தை அணுகுவதன்மூலம் மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளமுடியும்.

தொகுப்பு: ம.ஜெயந்தன்,
சிரேஷ்ட நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர்,
சட்ட உதவி ஆணைக்குழு,
முல்லைத்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்து சமய அறநெறி கல்வி வாரத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச செயலக இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்து சமய அறநெறி கல்வி விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று நேற்றைய் தினம் காலை நல்லூர் பிரதேசத்தில் இடம்பெற்றது.நல்லூர் பிரதேச செயலகத்திலிருந்து ஆரம்பமான இந்த விழிப்புணர்வு ஊர்வலம் நல்லூர் ஆலயம் வரை சென்று அங்கு பூசை வழிபாடுகள் இடம்பெற்று மீண்டும் நடைபவனியாக நல்லூர் பிரதேச செயலகத்தை வந்தடைந்தது.நல்லூர் பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற விழிப்புணர்வு ஊர்வலத்தில் இந்து சமயத் தலைவர்கள் மற்றும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அறநெறி பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், ஆலய தர்மகர்த்தாக்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

( படங்கள்:- சோபிகா)

# இலங்கைத்தமிழ் வம்சாவளியைச்சேர்ந்த பெண் தங்கம் டெபோனயர் பிரிட்டன் தேர்தலில் வெற்றி



(லண்டன்)

இலங்கைத் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த பெண் ஒருவர் பிரித்தானிய நாடாளுமன்றத் தேர்தலில் சுமார் 37 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் அமோக வெற்றியைப் பெற்றுள்ளார்.

தொழிற்கட்சி சார்பில், பிரிஸ்டல் மேற்குத் தொகுதியில் போட்டியிட்ட தங்கம் டெபோனயர், 47.213 வாக்குகளைப் பெற்றார்.

இவரை எதிர்த்துப் போட்டியிட்ட கன்சர்வேட்டிவ் கட்சி வேட்பாளரால், 9877 வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தார்.

தங்கம் டெபோனயரின் தந்தை இலங்கைத் தமிழர் என்பதும், அவரது தாயார் பிரிட்டன் பெண் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-7-8)

# கமநல அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு கேள்வி அறிவித்தல்

தவிசாளர் மாவட்ட பெறுகைக்குழு கமநல அபிவிருத்தித் திணைக்களம் முல்லைத்தீவு சார்பாக உதவி ஆணையாளரால் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் உள்ள குளங்கள் வாய்க்கால் புனரமைப்பு வேலைக்காக தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

1.விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.

2. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளக்கப்பட்டுள்ளது.

3.ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் கமநல அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு எனும் முகவரியில் 07.06.2017 தொடக்கம் முற்பகல் 10.00 மணியளவில் இருந்து மாலை 3.00 வரை விலைக்கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம் என்பதுடன் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.

4. ஆங்கில மொழி மூலமான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியினை முல்லைத்தீவு கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 07.06.2017 முதல் 20.06.2017 வரை வேலை நாட்களில் காலை 9 மணியிலிருந்து மாலை 3 மணி வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 1000.00 கட்டணமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

5.மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர், மாவட்ட பெறுகைக்குழு, கமநல அபிவிருத்தி திணைக்களம், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு 20.06.2017 ஆம் திகதியன்று மு.ப 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும்.கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபால் உறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.கேள்விகள் யாவும் மேற்குறிப்பிட்ட முகவரியில் நேரடியாக வருகை தர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்ல்து பிரதிநிதிகள் முன்னிலையில் 20.06.2017 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு திறக்கப்படும். கேள்விகளின் மூலப்பிரதி தனியாகவும் நகல் தனியாகவும் இரு உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.

6.கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

7.கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கேள்வியானது (Bid) கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியில் இருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் விதத்திலும் கேள்விப்பிணை பொறுப்பு (Bid Security) 120 நாட்கள் செல்லுபடியானதாகவும் இருத்தல் வேண்டும்.

| கேள்வி இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) VAT நீங்கலாக | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்விப் பிணைத் தொகை | மீளளிக்கப் படாத தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| Mu/DAD/Tender/2017/39 | வன்னிவிளான் குளம் | 2.14 Mn | 3 மாதம் | C5, C6, C7 | 20,000.00 | 1000.00 |
| | சிறாட்டிக்குள கால்வாய் | 1.13 Mn | 3 மாதம் | C5, C6, C7 | 10,000.00 | 1000.00 |
| | புதுக்குளம் | 2.54 Mn | 3 மாதம் | C5, C6, C7 | 25,000.00 | 1000.00 |
| | பெரிய தேகிழன் குளம் | 2.48 Mn | 3 மாதம் | C5, C6, C7 | 25,000.00 | 1000.00 |
| | கிடாபுடிச்ச குளம் | 2.48 Mn | 3 மாதம் | C5, C6, C7 | 25,000.00 | 1000.00 |
| | இள்மருதன் குளம் | 1.64 Mn | 3 மாதம் | C5, C6, C7 | 15,000.00 | 1000.00 |
| | வடகாட்டுக்குளம் | 3.45 Mn | 3 மாதம் | C5, C6, C7 | 35,000.00 | 1000.00 |
| | குஞ்சுக்குளம் | 2.68 Mn | 3 மாதம் | | Fo | 1000.00 |
| | குஞ்சுக்குள கால்வாய் | 1.93 Mn | 3 மாதம் | | Fo | 1000.00 |

உதவி ஆணையாளர்,
கமநல அபிவிருத்தி திணைக்களம், முல்லைத்தீவு

(C-8781)

# அனர்த்தம்;அரச அதிகாரிகளின் செயற்பாடுகள் பாராட்டத்தக்கது எஸ்.பி.திஸாநாயக்க தெரிவிப்பு



வெள்ளப்பெருக்கு மற்றும் இயற்கை அனர்த்தங்களின் போது அரசு அதிகாரிகளின் செயற்பாடுகள் பாராட்டத்தக்க விதத்தில் இருந்ததாக அமைச்சர் எஸ். பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்துள்ள பொது மக்களிடம் குற்றச்சாட்டுகள் எழுவது சாதாரண விடயம் தான்.

குறிப்பாக இயற்கை அனர்த்தத்தில் இருப்பிடங்களை இழந்த மக்களின் மனநிலைக்கு ஏற்ப அவ்வாறான குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்படுவது வழக்கம்.

ஆனாலும் அரச அதிகாரிகள் கூடுமானவரை தமது பணியை நிறை வேற்றியிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

பாலிந்தநுவர பிரதேச செயலகத்தில் நேற்று இடம் பெற்ற அனர்த்த நிவாரணக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் எஸ். பி.திஸாநாயக்க இக் கருத்தை வெளியிட்டார். (இ-7-8)

# அமைச்சரவை மாற்ற விவகாரம் அமைச்சர் கபீர் ஹாசிம் பதவி விலகும் சாத்தியம்



ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும், பொது முயற்சியாண்மை அமைச்சருமான கபீர் ஹாசிம் பதவி விலகக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மாற்றம் தொடர்பில் அமைச் சர் ஹாசிம் அதிருப்தி வெளியிட்டுள்ளார். தமது அமைச்சின் கீழ் இயங்கி வந்த சில நிறுவனங்கள் வேறு அமைச்சிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அவர் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

மேலும் அமைச்சரவை மாற்றத்தின் பின்னர் கபீர் ஹாசிம் வெளிநாட்டு பயணமொன்றை மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடி அரசின் மீது மக்களுக்கு அதிருப்தி

## சரத்பவார் சுட்டிக்காட்டு



(மும்பை)

பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசின் மீது பொதுமக்கள் அதிருப்தியில் இருப்பதாக தேசியவாத காங்கிரஸ் கட்சியின் தலைவர் சரத்பவார் தெரிவித்தார்.

பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு பதவியேற்று 3 ஆண்டுகள் நிறைவு பெற்றதை அக்கட்சியினர் நாடு முழுவதும் கொண்டாடி வருகின்றனர். இந்த நிலையில் டில்லியில் நேற்று முன்தினம் பேசிய தேசியவாத காங்கிரஸ் கட்சியின் தலைவர் சரத்பவார் தெரிவிக்கையில்,

மோடி தலைமையிலான மத்திய அரசு முந்தைய ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் திட்டங்களையே தற்போது நடைமுறைக்கு கொண்டு வருகிறது. புதிதாக ஒரு திட்டமும் அறிவிக்கப்படவில்லை. குறிப்பாக ஆதார், தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டம் போன்றவை கடந்த ஆட்சியின் திட்டங்கள் ஆகும்.

பிரதமர் மோடி வெளிநாட்டில் வழங்கிய உரையின் போது தற்போது உலக அளவில் இந்தியாவின் நிலை உயர்ந்துள்ளதாக கூறுகிறார்.

இவ்வாறு பேசுவதற்கு முன் அவர் ஒருங்கிணைந்த நாடுகள் வழங்கிய அறிக்கையை கொஞ்சம் படித்து பார்க்கவேண்டும். அதில் நமது நாட்டில் சிறுபான்மையினருக்கு எதிரான தாக்குதல்களை தடுக்க முடியாமல் அரசு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 3 ஆண்டு பா.ஜனதா ஆட்சியில் விவசாயத்தில் போதிய வளர்ச்சி இல்லாததால் பொருளாதாரம் விழுந்து விட்டது. போதிய முதலீடு இல்லாததால் வேலைவாய்ப்பு எப்போதும் இல்லாத அளவிற்கு குறைந்துவிட்டது. தற்போதைய அரசு வரவேற்க தகுதியில்லாததாகவும், மக்களின் அதிருப்தியையும் சம்பாதித்து வருகிறதென சரத்பவார மேலும் தெரிவித்தார். (இ)

# ஐரோ.யூனியனிலிருந்து ...

# இங்கிலாந்துடன் ஜேர்...

(மெக்சிக்கோ சிட்டி)

ஐரோப்பிய யூனியனில் இருந்து வெளியேறும் நடவடிக்கையை தொடங்குகிற போது, தனது பெரும்பான்மையை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று இங்கிலாந்து பிரதமர் தெரேசா மே கருதினார். இதற்காக பாராளுமன்றத்தை கலைத்து விட்டு திடீர் தேர்தல் நடத்தினார்.

ஆனால் அவரது கனவு நிறைவேறவில்லை. இருந்த பெரும்பான்மையையும் அவர் இழந்தார். தற்போது அங்கு தொங்கு பாராளுமன்றம் அமைந்துள்ளது. எனவே 'பிரிக்ஜிட்' என்று அழைக்கப்படுகிற ஐரோப்பிய யூனியனில் இருந்து வெளியேறுகிற நடவடிக்கையை இங்கிலாந்து தொடங்குவதில் சிக்கல் நேரக்கூடும் என்று கருதப்படுகிறது.



இந்த நிலையில், ஜேர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்க்கல் மெக்சிக்கோ சென்றுள்ளார். அங்கு அவர் அந்த நாட்டின் ஜனாதிபதி என்ரிக் பெனா நீட்டோவுடன் நேற்று நிருபர் களை சந்தித்தார்.

அப்போது அவர், "ஐரோப்பிய யூனியனில் இருந்து வெளியேறுகிற முடி வில் இங்கிலாந்து விடாப் பிடியாக இருக்கும் என்று கருதுகிறேன். இங்கிலாந்து பிரதமர் இது தொடர்பான பேச்சுவார்த்தையை தொடங்கும் திட்டத்தில் ...

# சசிகலா மீண்டு வருவார்; நடராஜன் நம்பிக்கை





(சென்னை)

சொத்து குவிப்பு வழக்கின் சீராய்வு மனுவில் நீதி கிடைக்கும் எனது மனைவி சசிகலா சிறையில் இருந்து மீண்டு வருவார் என நடராஜன் தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் சசிகலாவின் கணவர் நடராஜன் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் இவ்வாறு கூறியுள்ளார்.

ஜெயலலிதா அ.தி.மு.க.வின் தலைவராக வருவதற்கு நாங்கள்தான் பின்னணியில் இருந்தோம். 1980 ஆம் ஆண்டுவாக்கில் ஜெயலலிதா அரசியலுக்கு வந்த காலத்தில் நாங்கள் அவருக்கு உதவியாக செயற்பட்டோம் என்றும் அவர் தெரிவித்தார். (இ)

# குட்டி பிரப...

# ஒடிசா சி...



(டில்லி)

ஜோர்ஜியா நாட்டின் பதுமி நகரில் நடைபெற்ற போட்டியில், குட்டி பிரபஞ்ச அழகியாக (லிட்டில் மிஸ் யுனிவர்ஸ்) பத்மாலயா நந்தா தேர்வானார். ஒடிசா மாநிலத்தை சேர்ந்த 12 வயது சிறு... லுள்ள பாட... கிறார். இவ... முன்தினம் ... அழகியாக ... இந்தப் போ... வெல்வது ...


# பயிர்க்கடனை தள்ளுபடி செய்யாவிட்டால் கூட்டணி அரசிலிருந்து வெளியேறுவோம்

## பா.ஜ.கவுக்கு சிவசேனா எச்சரிக்கை

(மும்பை)

பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்யாவிட்டால் எந்த நேரத்திலும் கூட்டணி அரசில் இருந்து வெளியேறுவோம் என்று பா.ஜனதாவுக்கு சிவசேனா திடீர் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மராட்டியத்தில் பயிர்க்கடன் தள்ளுபடி, விவசாயத்துக்கு இலவச மின்சாரம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகள் கடந்த முதலாம் திகதி காலவரையறையற்ற போராட்டம் நடத்தி வருகிறார்கள். விவசாயிகளின் தொடர்



போராட்டம் காரணமாக 5 ஏக்கர் வரை நிலம் வைத்திருக்கும் சிறு, குறு விவசாயிகளுக்கு பயிர்க்கடன் தள்ளுபடி செய்வதற்கான அறிவிப்பு வெளியிடப்படும் என்று முதலமைச்சர் தேவேந்திர பட்னாவிஸ் தெரிவித்தார்.

ஆனால் அனைத்து விவசாயிகளுக்கும் பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று ஆளும் கூட்டணி கட்சியான சிவசேனா வலியுறுத்தியுள்ளது. இதற்கு முன்வராவிட்டால் சட்டசபை தேர்தலை சந்திக்க தயாராக இருக்க வேண்டும் என்று அக்கட்சி பா.ஜனதாவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து சிவசேனா மூத்த தலைவரும், டில்லி மேல்-சபை எம்.பி.யுமான சஞ்சய் ராவுத் தெரிவிக்கையில,

மராட்டியத்தில் அனைத்து விவசாயிகளுக்கும் முழுமையான பயிர்க்கடன் தள்ளுபடி செய்ய வேண்டும். இது தான் எங்களது நிலைப்பாடு. மாநில சட்டசபைக்கு முன்கூட்டியே தேர்தல் வருவதை தவிர்க்க வேண்டும் என்றால், பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்யுங்கள். நாங்கள் பதவியை துறக்க தயாராக இருக்கிறோம். அதிகாரத்தை துறப்பதால் எங்கள் கட்சிக்கு எந்தப் பாதிப்பும் வராது. சட்டசபைக்கு முன்கூட்டியே தேர்தல் வந்தால், பா.ஜனதாவை விட நாங்கள் மிகச்சிறந்த முறையில் எங்களை தயார்படுத்தி வைத்து இருக்கிறோம். தேவைப்படும் நிலையில் எந்த நேரத்திலும் நாங்கள் அரசில் இருந்து வெளியேறுவோம்.

முழுமையாக பயிர்க்கடனை தள்ளுபடி செய்யாவிட்டால அரசின் குரல்வளையை



நெரிக்க நாங்கள் அதிக நேரம் எடுத்துக் கொள்ள மாட்டோம. இதை எங்களது எச்சரிக்கையாக எடுத்து கொள்ளுங்கள். பயிர்க்கடன் தள்ளுபடி விவகாரத்தில் தேவேந்திர பட்னாவிஸ் அழுக்கு அரசியலில் ஈடுபடுகிறார்.

விவசாய சங்கங்கள் இடையே பிளவை ஏற்படுத்தி வருகிறார். இவ்வாறு சஞ்சய் ராவுத் தெரிவித்தார். (இ)

# அ.தி.மு.க. ...

# 4 ஆண்டு...

## திருமாவ...

(சேலம்)

அ.தி.மு.க. அரசு கவிழாது, 4 ஆண்டுகள் நீடிக்கும் என்று சட்டமன்ற தேர்தல் வர வாய்ப்பே இல்லை என்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்தார்.

தீண்டாமை ஒழிப்பு முன்னணி சார்பில் சேலத்தில் இருந்து சென்னைக்கு நடைபயணத்தை விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன் தொடங்கி வைத்தார்.

இந்த பயணத்தை தொடங்கி




# பிரதமர் தெரேசா மே மீது...

# நம்பிக்கையில்லாத் தீர்மான...

(லண்டன்)

பிரித்தானிய பொது தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையை இழந்த பிரதமர் தெரேசா மே பதவி விலக வேண்டும் என கன்சர்வேட்டிவ் கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரித்தானியாவில் கடந்த 8ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியினர் அறுதிப்பெரும்பான்மையை இழந்தனர்.

2015ஆம் ஆண்டில் கமரூன் பிரதமராக தெரிவான போது 330 தொகுதிகளில் வெற்றி பெற்று பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்தனர்.

ஆனால், தெரேசா மே தலைமையில் ... பெற்ற இந்த தேர்தலில் ஏற்கனவே கையில் ... 12 தொகுதிகளில் தோல்வி அடைந்தது ... மில்லாமல் அறுதிப் பெரும்பான்மையையு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியேறும் ...மனி பேசும்

இருப்பார். நாங்களும் விரைவாக பேச்சு வார்த்தை நடத்த விரும்புகிறோம். குறிப் பிட்ட கால அட்டவணைப்படி பேச்சு நடந்து முடிய வேண்டும். ஏற்கனவே ஒப்புக்கொண் டபடி பேச்சுவார்த்தை தொடங்குவதில் தாமதம் ஏற்படும் என்று கருதவில்லை" என கூறினார். மேலும் அவர் கூறும்போது, "ஐரோப பிய யூனி யனில் இருந்து வெளியே றினாலும், இங்கிலாந்து, ஐரோப்பா வின் ஒரு அங்கம் தான். அந்த நாடு நல்ல தொரு கூட்டாளியாக தொடர வேண்டும் என்று விரும்பு கிறேன் என்றும் தெரிவித் தார். (இ)

# தீபக் சசிகலாவுடன் கூட்டுச் சேர்ந்து ஜெயலலிதாவைக் கொன்றுவிட்டார்

## அண்ணன் மீது தங்கை தீபா பரபரப்புக் குற்றச்சாட்டு

(சென்னை)

சென்னை போயஸ் இல் லத்திற்கு நேற்றுக் காலை சென்ற ஜெயலலிதா அண் ணன் மகள் தீபா மற்றும் அவரது கணவர் மாதவன் ஆகியோருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

மேலும் செய்தி சேகரிக்க சென்றிருந்த செய்தியாளர் கள் மீது போயஸ் கார்டனில் இருந்த தனியார் பாதுகாப்பு ஊழியர்கள் தாக்குதல் நடத்தி, கமராக்களை சேதப்படுத்தி யுள்ளதாக புகார் தெரிவித் துள்ளனர். இதனால் அப்பகு தியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

மேலும், தன்னை அடித் துவிரட்டி விட்டதாக தீபா கண்ணீர் மல்க பேட்டியளித் துள்ளார். மேலும் அவர் கூறியுள்ளதாவது, பணத் திற்காக சொந்த அத்தை யான ஜெயலலிதாவை தமது சகோதரர் தீபக்கும் சசிகலா வுடன் சேர்ந்து கொன்று விட்டதாக தீபா குற்றம்சாட்டி யுள்ளார்.


போயஸ் தோட்ட இல்லத் திற்கு தீபக் அழைத்ததால் தான் தாம் வந்ததாக விளக் கமளித்துள்ளார். ஜெயலலிதா படத்திற்கு பூஜை செய்ய வருமாறு தீபக் தன்னை திட்டமிட்டு வரவழைத்தார்.

சசிகலாவின் ஆட்களு டன்சேர்ந்து சதி செய்து தம்மை போயஸ் இல்லத்திற்கு வர வைத்து ஏதோ செய்யப் பார்த்ததாக குற்றம்சாட்டி யுள்ளார்.

தமிழகத்தில் நடப்பது ஆட்சியே கிடையாது. உடன டியாக இந்த ஆட்சியை கலைக்க வேண்டும்.

மேலும் தனது கணவர் மாதவனை கொல்ல முயற்சி நடந்ததாக தெரிவித்துள் ளார். தம்மை தாக்கிய பாது காவலர்கள் மீது பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண் டும் என்றார். (இ)

# ...பஞ்ச அழகியாக ...சிறுமி தேர்வு



...ு சிறுமி பத்மாலயா நந்தா. இவர் கட்டாக் நகரி ...ள பாடசாலையில் 8ஆம் வகுப்பு படித்து வரு ...ர். இவர் ஜோர்ஜியா நாட்டின் பதுமி நகரில் நேற்று ...தினம் நடைபெற்ற போட்டியில், குட்டி பிரபஞ்ச ...கியாக (லிட்டில் மிஸ் யுனிவர்ஸ்) தேர் வாகினார். ...ப் போட்டியில் இந்தியச் சிறுமி ஒரு வர் பட்டம் ...வது இதுவே முதல் முறையாகும். உலகம் முழுவதுமிருந்து ஆயிரத் துக்கும்மேற்பட்டோர் விண ணப்பித்ததில், 75 பேர்முதல சுற்றில் தேர்வு செய்யப்பட்ட னர். அவர்க ளில் 10 பேர் இறுதி செய்யப்பட்டு, போட் டிக்கு அழைக்கப்பட்டனர்.

ஒவ்வொருவரும் பல சுற்றுப் போட்டிகளுக்கு உட்படுத்தப்பட்டனர். அந்த அடிப்படையில், பத்மாலயா நந்தா, குட்டி பிரபஞ்ச அழகி ஆனார். அவளுக்கு தங்க கிரீடம் சூட்டப்பட்டது.

அடுத்த ஆண்டு போட்டி நடைபெறும் வரை, அந்த கிரீடத்தை அவள் பயன்படுத திக்கொள்ளலாம். கிரீஸ்நாட டில்செப்டெம்பர மாதம் நடை பெறும் குட்டி உலக அழகி போட்டியில்பத்மாலயா நந்தா கலந்து கொள்கிறார். (இ)

# இங்கிலாந்தில் இந்திய வம்சாவளியினர் 12 பேர் எம்.பிக்களாக தேர்வாகினர்



தலைப்பாகையுடன் முதல் சீக்கியர்


முதல் சீக்கியப் பெண்

(லண்டன்)

இங்கிலாந்து பாராளு மன்ற தேர்தலில் முதல் முறையாக 12 இந்திய வம்சா வளியினர் எம்.பி.க்களாக வெற்றி பெற்று சாதனை படை த்துள்ளனர். மேலும் சீக்கிய பெண் ஒருவர் முதல் முறை யாக எம்.பியாகியுள்ளார்.

இந்திய வம்சாவளியை சேர்ந்த பிரீத்திபட்டேல், அலோக்சர்மா, சுயல்லா பெர்னான்டஸ், ரிஷிசுனக், சைலேஷ்வாரா ஆகிய 5 பேர் கன்சர்வேடிங் கட்சி சார்பிலும், கெய்த்வாஸ், விரேந்திர சர்மா, லிசா நான்டி, சீமா மலகோத்ரா வலரிவாஸ், தன்மன்ஜித்சிங், பிரீத் கவூர் சில் ஆகிய 7 பேர் தொழி லாளர் கட்சி சார்பிலும் வெற்றி பெற்றனர்.

சீக்கிய பெண்ணான பிரீத் கவூர்சில் எட்ஜ்பஸ்டன் தொகுதியில் போட்டியிட்டு 6 ஆயிரத்து 917 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இங்கிலாந்து பாராளுமன்றத்துக்கு தேர்வு செய்யப்பட்ட முதல் சீக்கிய பெண் என்ற பெருமையை பெற்றார்.

இந்த தேர்தலில் இந்திய வம்சாவளியை சேர்ந்த 27 பேர் போட்டியிட்டனர். இதில் 12 பேர் வெற்றி பெற்றனர். கடந்த பாராளுமன்றத்தில் இந்திய வம்சாவளியை சேர்ந்த 10 எம்.பி.க்கள் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# ...அரசு கவிழாது; ...கள் நீடிக்கும்

## ...வளவன் பேட்டி



வைத்த தொல். திருமாவள வன் நிருபர்களிடம் கூறியதா வது,

தமிழகத்தில் அ.தி.மு.க. அரசு பலவீனமாக உள் ளது. அவர்களை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளும் முயற்சியில் பார திய ஜனதா ஈடுபட்டு வருகிறது.

மாட்டிறைச்சி விவகாரத் தில் கேரளா, மேற்கு வங் காளம் உள்ளிட்ட பல்வேறு மாநில முதலமைச்சர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

ஆனால் தமிழக அரசு கருத்து எதுவும் தெரிவிக்கா தது வருத்தமாக இருக்கி றது.

அ.தி.மு.க. அரசு கவிழும் என்று மு.க. ஸ்டாலின் கூறி இருக்கிறாரே என்று கேட்ட போது மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட இந்த அரசு கவிழாது என்றும், 4 ஆண்டு கள் நீடிக்கும், சட்டமன்ற தேர்தல்வர வாய்ப்பே இல்லை என்றும் திருமாவளவன் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் தீண் டாமை ஒழிப்பு முன்னணி பொதுச் செயலாளர் சாமு வேல்ராஜ், தலைவர் சம்பத் உட்பட பலர் கலந்து கொண்ட னர்.

முன்னதாக அம்பேத்கர் சிலைக்கு தொல். திருமா வளவன் மாலை அணி வித்தார். (இ)

# ...து ...ம்

...மயில் நடை ...கயில் இருந்த ...ந்தது மட்டு ...யையும் இழந் துள்ளனர்.

முக்கிய எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியினர் முன்பை விட கூடுதலாக 32 தொகுதிகளில் வெற்றி பெற்றனர்.

தெரேசா மேயின் இந்த பின்னடைவிற்கு அவரே பொறுப்பேற்க வேண்டும். தெரேசா மே பதவி விலக வேண்டும் என எதிர்க் கட்சியினர் கோரிக்கை விடுத்தனர்.

இந் நிலையில், தெரேசா மேயின் சொந்தக் கட்சி உறுப்பினர்களும் அவர் பதவி விலக வேண் டும் என கோரிக்கை விடுத் துள்ளது பரபரப்பை ஏற்ப டுத்தியுள்ளது.

கன்சர்வேட்டிவ் கட்சியை சேர்ந்த இணையத்தளம் நடத்திய கருத்துக்கணிப்பில் சுமார் 65 சதவிகித கட்சி உறுப்பினர்கள் தெரேசா மே இராஜினாமா செய்ய வேண் டும் என கூறியுள்ளனர்.

மேலும், அடுத்த வாரம் பாராளுமன்றம் கூடும்போது தெரேசா மே மீது நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வரவும் வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

15 சதவிகித பாராளு மன்ற உறுப்பினர்கள். அதா வது 48 பாராளுமன்ற உறுப பினர்கள் ஒன்று சேர்ந்து கோரிக்கை விடுத்தால் தெரேசா மே மீது நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வரலாம்.

இந்த நம்பிக்கை இல்லா தீர்மானத்தில் தெரேசா மே தோல்வி அடைந்தால் அவர் தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்ய வேண் டும் என்பது குறிப்பிடத்தக் கது. (இ)

# மராவி நகரை மீட்டெடுக்க ஐ.எஸ்ஸுடன் உச்சக்கட்டப்போர்

## 13 இராணுவத்தினர் பலி!

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டின் மராவி நகரை கைப்பற்றி அராஜகம் நடத்திவரும் ஐ. எஸ் தீவிரவாதிகளை விரட்டி யடிக்க நடந்து வரும் உச்சக் கட்ட போரில் 13 இராணுவ வீரர்கள உயிரிழந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிலிப்பைன்ஸ் நாட்டில் ஐ.எஸ். தீவிரவாதிகளுடன் தொடர்புடைய அபு சய்யாப் தீவிரவாத குழுவினர் இயங்கி வருகின்றனர். புத்த மதத்தி னர், கிறிஸ்தவர்கள் மற்றும் இஸ்லாமியர்கள் இணைந்து பரவலாக வாழும் இந்நாட்டில இஸ்லாமிய சட்டத்திட்டங்க ளுக்கு உட்படுத்த ஆட்சியை ஏற்படுத்த வேண்டும் என ஆயுதம் ஏந்திய போராட்டத் தில் ஈடுபட்டு வருகின்றனர்.

வெளிநாடுகளில் இருந்து பிலிப்பைன்ஸ் தீவுகளுக்கு சுற்றுலா வரும் பயணிகளை கடத்தி செல்லும் அபு சய்யாப் தீவிரவாதிகள், பிணைத் தொகையை பெற்றுக்கொண்டு விடுவிக்கின்றனர்.

படையினர் கடந்த மாதம் முதல் மராவி நகரை சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், கடந்த இரு நாட்களாக இராணுவத் தினருக்கும், தீவிரவாதிக ளுக்கும் இடையே உச்சக்கட்ட போர் நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினம் தீவிர வாதிகளின் தாக்குதலில் 13 வீரர்கள் பலியானதாக இரா ணுவ செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். மேலும், நாளை அந்நாட்டின் சுதந் திர தினம் கொண்டாடப்படும நிலையில், தீவிரவாதிகளை முற்றிலும் வேரோடு அழித்து விடுவதாகவும் அவர் உறுதி யேற்றுள்ளார். (இ)

# தேர்தல் முறைகேடு வழக்கு பிரேசில் ஜனாதிபதி விடுதலை



(பிரேசிலியா)

தேர்தல் முறைகேடு வழக் கில் பிரேசில் ஜனாதிபதி மீது சுமத்தப்பட்ட குற்றம் நிரூபிக் கப்படவில்லை என கூறி விடுதலை செய்யப்பட்டார். அதனால் அவரது பதவி தப்பியது.

பிரேசில் நாட்டில் ஜனாதி பதியாக இருந்த டில்மாரூ செப் முறைகேட்டில் ஈடுபட்டதாக கடந்த ஆண்டு பதவி நீக்கம் செய்யப்பட்டார். அவரை தொட ர்ந்து துணை ஜனாதிபதியாக இருந்த மைக்கேல் டெமர் புதிய ஜனாதிபதியா னார்.

கடந்த 2014 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலின போது டில்மா ரூசெப்புக்காக தேர்தல் நிதி திரட்டுவதில் இவர் முறைகேடு செய்ததாக புகார் கூறப்பட்டது.

மேலும், ஊழல் புகார்க ளும் தெரிவிக்கப்பட்டன. அதை தொடர்ந்து அவர் பதவி விலக வேண்டும் என வலி யுறுத்தப்பட்டது. ஆனால் டெமர் பதவி விலக மறுத்து விட்டார்.

இந்த நிலையில் தேர்தல் நடத்தை விதிமுறை நீதிமன றில் மைக்கேல் டெமர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட் டது. வழக்கு விசாரணை முடிந்து நேற்று முன்தினம் தீர்ப்பு கூறப்பட்டது.

இதில் அவர் மீது சுமத் தப்பட்ட குற்றம் நிரூபிக்கப் படவில்லை என கூறி விடு தலை செய்யப்பட்டார். அதை தொடர்ந்து அவரது ஜனாதிபதி பதவி தப்பியது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய அரசியலமைப்புக்கு எதிராக செயற்பட

# நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் சு.க. அமைச்சர்கள் இரகசிய பேச்சு



(கொழும்பு)

உத்தேசபுதியஅரசியலமைப்புக்கு எதிராக இணைந்து செயற்படும் நோக்கத்துடன், அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் இரகசியமாகப் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் கொள்கைகளுக்கு எதிரான அம்சங்களுடன் உத்தேச புதிய அரசியலமைப்பு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படுமாயின் அதற்கு அமைச்சர் நிமால் தலைமையில் கூட்டாகச் சேர்ந்து, எதிர்த்து வாக்களிப்பதற்கு இந்த இரகசிய பேச்சுவார்த்தையின் போது சம்பந்தப்பட்ட சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் தீர்மானித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இவ்வாறு புதிய அரசியலமைப்பு விடயத்தில் மாத்திரமன்றி அரசாங்கத்தின் ஏனைய அனைத்து உத்தேச தீர்மானங்கள் தொடர்பிலும், அவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளுக்கும், நிலைப்பாடுகளுக்கும் எதிராக மேற்கொள்ளப்படும் பட்சத்தில் அவற்றிற்கு எதிராக அமைச்சர் நிமால் சிறிபால தலைமையில் தனியான குழுவாக இயங்கி எதிர்ப்பதற்கு மேற்படி இரகசிய பேச்சுவார்த்தையில், தீர்மானிக்கப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கைகளுக்கு எதிராக அரசாங்கத்தால் உத்தேச பிரேரணைகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்போது, அரசுக்கு எதிராக கூட்டு எதிரணியின் உறுப்பினர்களுடன், இணைந்து செயற்படுவதற்கும், அமைச்சர் நிமால் தலைமையிலான இந்த சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் தீர்மானித்துள்ளதாக தெரியவந்துள்ளது. (இ-7)

# 26 தேயிலைத் தொழிற்சாலைகள் இயற்கை அனர்த்தத்தால் பாதிப்பு

(கொழும்பு)

அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களால் 26 தேயிலைத் தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

காலி, மாத்தறை மாவட்டங்களில் உள்ள தேயிலைத் தொழிற்சாலைகளுக்கே இவ்வாறு பாதிப்புக்கள் ஏற்பட்டிருப்பதாகதேயிலை சபை ஆணையாளர் ஜயந்த எதிரிசிங்ஹ தெரிவித்துள்ளார்.

14 தேயிலைத் தொழிற்சாலைகள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய தொழிற்சாலைகள் மண்சரிவினால் பாதிக்கப்பட்டன.

இதனால் 2 இலட்சத்து 50 ஆயிரம் கிலோ தேயிலைக்கு பாதிப்பு ஏற்பட்டதாக தேயிலை சபை ஆணையாளர் தெரிவித்தார்.

இதன் படி தேயிலைத் தொழிற்சாலை மற்றும் தேயிலைக்கு ஏற்பட்ட மொத்தப் பாதிப்பு சுமார் 60 கோடி ரூபாவாகும்.

பாதிக்கப்பட்ட தேயிலைத் தொழிற்சாலைகளில் 99 சதவீதமானவற்றுக்கு காப்புறுதி செய்யப்பட்டிருப்பதாகவும் அதற்கான இழப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் இருப்பதாகவும் தேயிலை சபை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களின் போது இந்தத் தொழிற்சாலைகள் பெரும்பாலான வற்றுக்கு பாதிப்பு ஏற்பட்டதனால் அவற்றை பாதுகாப்பான இடங்களில் அமைப்பதற்கான நடவடிக்கை குறித்த ஆலோசனை முன்வைக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7,8)

# உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்துவதை தவிர்க்க சர்வஜன வாக்கெடுப்பு அவசியம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்தாதிருப்பதானால், மக்கள் கருத்துக் கணிப்பு அல்லது நீதிமன்றத் தீர்ப்பொன்றினூடாகவே அதனைச் செய்ய முடியும் என்று தேர்தல்கள் ஆணைக் குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களின் ஆயுட்காலம் எதிர்வரும் செப்டெம்பர் மாதத்துடன் நிறைவடைந்ததையடுத்து, தேர்தலுக்கான தினம் அறிவிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் தேர்தல்கள் பிற்போடப்படாது என்றும் அவர் கூறியுள்ளார்.

சட்டவாக்க சபையின் தற்போதைய கட்டளைகள் மற்றும் அரசமைப்புக்கு அமைய, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்தாதிருப்பதானால், மக்கள் கருத்துக்கணிப்பு அல்லது நீதிமன்றத் தீர்ப்பொன்றினூடாக மட்டுமே அதனைச்செய்ய முடியும்.

வேறெந்த நடவடிக்கையினூடாகவும் அதனைச் செய்ய முடியாது என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வாக்காளர் பதிவுப் பட்டியலை தயாரிப்பதற்கான பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில், நாட்டில் ஏற்பட்ட அனர்த்த நிலைமை காரணமாக, வாக்காளர் பதிவுப் பட்டியலை தயாரிக்கும் பணிகள் ஜுலை மாதம் 31 ஆம் திகதிவரை இடம்பெறும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்காக உரிய மாவட்ட செயலகங்களின் பரிந்துரைகளுக்கமைய உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். (இ-7)

# டெங்கால் 5 மாதத்தில் 150 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் இவ் வருடத்தின் முதல் 5 மாதங்களில் மாத்திரம் டெங்கு தொற்று காரணமாக, 150 பேர் வரையில் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் தினங்களில் டெங்கு நுளம்பு குடப்பிகள் அதிகரிப்பதற்கு வாய்ப்புக்கள் உள்ளமையினால், நுளம்புகள் பரவக்கூடிய வகையிலான இடங்களை தூய்மைப்படுத்தும் வேலைத் திட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டியுள்ளதாக சங்கத்தின் தலைவர் நலிந்த சமனசேன தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த 5 மாதங்களில் மாத்திரம் 59 ஆயிரத்து 700 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன், இதில் 43 சதவீதமானோர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்களென சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7,8)

## இன்று ஒரு தகவல்

### காத்திருக்கும் நேரத்தில்.....

ஒரு குடும்பத்தில் அல்லது ஓர் அமைப்பில் ஒருவர் வேண்டாதவர் ஆகிவிட்டார் என்பதற்காக கூண்டோடு அதனுடன் சம்பந்தப்பட்ட அனைவரையும் வெறுப்பது என்பது ஒரு கேலிக்கூத்தான செயல்.

எனக்கு நேரமே இல்லை என்று சொல்லிக் கொள்வது பலருக்கும் பஷனாகிவிட்டது. இந்த வாக்கியத்தை இன்னார் தான் சொல்லலாம் என்கிற வரைமுறையெல்லாம் பறந்துவிட்டது. எந்த வேலைக்கும் சொல்லாமல் ஊர் சுற்றுகிறவர்களும் தூங்கி வழிகிறவர்களும் கூட இப்படிச் சொல்ல ஆரம்பித்துவிட்டது ரொம்பவும் கொடுமையான விடயம்.

எனக்கு நேரமே இல்லை என்று சொல்லுகிறவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கிறவர்கள் எனக்கு மனம் இல்லை என்று வேண்டுமானால் இவர்கள் சொல்லி உண்மையை ஒப்புக் கொள்ளட்டும். இதுதான் நியாயம்.

பலபேர் பஸ் ஸ்டாண்டுகளில், ரயில் நிலையங்களில், சினிமா ரேஷன் கியூக்களில், டாக்கர் வீடுகளில், நண்பர்களின் வீடுகளில், பெரிய மனிதர்களின் வீட்டு வாசல்களில் மணிக்கணக்கில் காத்துக் கிடக்கிறார்கள் ஏன்–தவமே செய்கிறார்கள்.

ஒவ்வொரு சராசரி மனிதனும் தினமும் சுமார் இரண்டு மணி நேரத்தையாவது காத்திருப்பதிலேயே வீணாக்கி விடுகிறான்.

இப்படிக் காத்திருக்கும் நேரத்தை நாம் பயனுள்ள வகையில், செலவிட முடியும்.

ஜப்பானியர்கள் வீட்டில் அமர்ந்துகொண்டு கால்மேல் காலைப் போட்டுக்கொண்டு கோப்பி குடித்துக்கொண்டு செய்தித்தாளைப் படிப்பதில்லை. பஸ் ஸ்டாண்டில், ரயில் நிலையத்தில் காத்திருக்கும் நேரத்தில் தான் பெரும்பாலும் படிக்கிறார்கள். நாமும் இதைப் பின்பற்றலாம். வெட்கப்படக்கூடாது.

வீட்டில் நாம் ஆசையாய் வாங்கி வைத்திருந்த புத்தகம் சும்மா இருக்கும். நாம் யாரோ ஒரு நண்பருக்காக எங்கோ ஒரு பொது இடத்தில் சும்மா பராக்குப் பார்த்துக்கொண்டு நின்றுகொண்டிருப்போம். கையில் அந்தப் புத்தகத்தை கொண்டு வந்திருந்தால் படித்து முடித்திருக்கலாமல்லவா?

நம்மில் எவரையும் ஞாபகத் திலகங்கள் என்று சொல்லமுடிவதில்லை. நிலைமை இப்படி இருக்கிறபோது பொக்கெட்டிலும் கைப்பையிலும் அடங்குற மாதிரியான சிறு குறிப்பு நோட்டு ஒன்றை வைத்துக்கொண்டு காத்திருக்கிற நேரம் நினைவுக்கு வருகிற அத்தனை விடயங்களையும் குறித்து வைத்துவிட வேண்டும். வீட்டுக்கு, அலுவலகத்திற்கு வந்ததும் அவற்றை செயற்படுத்தலாம்.

சும்மா தேமேன்னு அரசியல் போஸ்டரையும் சினிமா போஸ்டரையும் போகிற, வருகிற வாகனங்களையும் திரும்பத் திரும்பப் பார்த்துக்கொண்டிருப்பதற்குப் பதில் மேற்கூறிய பழக்கம் எவ்வளவோ தேவலை அல்லவா?

வெகு நாட்களாகத் தீர்க்கப்படாமல் இருக்கிற பிரச்சினைகள், வருங்காலத் திட்டங்கள், நாம் செய்ய வேண்டிய சாதனைகள் இவற்றைப் பற்றியெல்லாம் காத்திருக்கும் நேரத்தில் அசைபோட வேண்டும். நல்ல தீர்வுகள் கிடைக்கும்; அபார யோசனைகள் பிறக்கும்!

நேரம் என்பது ஓர் அழுகும் பொருள். ஆனால் அபூர்வமான பொருள்.

அதை அவ்வப்போதும் சரியான முறையிலும் பயன்படுத்திவிட வேண்டும். இல்லாவிட்டால் போனது போனது தான்.

இதன் அருமை தெரியாமல் வீணாக்கிறவர்களைப் பார்த்து இரக்கப்படுவதைத் தவிர வேறென்ன செய்யமுடியும்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கை

வட மாகாண சபையை பொறுத்தவரையில் தரைக் கீழ், தரைமேல் உள்ள நீரை உபயோகித்தல், பயிச் செய்கைக்கு பாவித்தல் என்பதை கட்டுப்படுத்தல், ஒழுங்கு படுத்தல் நியதிச் சட்டங்கள் எதுவும் நிறைவேற்றப்பட்டுள்ள தாக தெரிய வில்லை.

எனவே விவசாயி ஒருவர் தனது சட்டபூர்வ உரித்துடைய காணியில் மழை நீரையோ, நிலத்தடி நீரையோ உபயோகித்து தனது வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக, உணவுக்காக, வர்த்தக தேவைக்காக எந்தவித பயிர்களையோ மரப் பயிர்களையோ பயிரிடும் உரிமை அவர்களுக்கு உண்டு என விசாரணைக்குழு கருதுகின்றது.

மேற்படி கருதுகோளின் அடிப்படையில் மேற்படி குற்றச் சாட்டில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக விசாரணையின் பொழுது முன்வைக்கப்பட்ட விடயங்களையும் அவற்றிக்கு திணைக்கள உத்தியோகத்தர்களது விளக்க சாட்சியங்களையும் இறுதியில் கௌரவ அமைச்சர் அவர்களால் விசாரணைக்குழுவிற்கு அளிக்கப்பட்ட விளக்கங்களும் மேற்படி குற்றச்சாட்டுக்கள் விசாரணையின் பொழுது சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட முறையில் எண் பிக்கப்பட்டுள்ளனவா என ஆராய்வோம்.

வவுனியா நெடுங்கேணி பிரதேச செயலர் பிரிவில் இந்திய முதலீட்டாளர் ஒருவராகிய திரு.ராம் என்பவர் மூங்கில் செய்கையில் விவாசாயிகளை ஊக்குவிக்கும் திட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு முன்மொழிவு ஒன்றை முன்வைத்து பிரதேச செயலர் நெடுங்கேணி தலைமையில் கூட்டம் ஒன்றை கூட்டி திட்டத்தின் நன்மை, தீமைகளை விளக்கப்படுத்தி இருந்தார். இது வெளிநாட்டு முதலீடு ஆகிய காரணத்தால் கௌரவ முதலமைச்சரின் அனுமதிக்கு விண்ணப்பித்து முதலமைச்சரால் அவ் விண்ணப்பம் விவசாய அமைச்சருக்கு முன்னிலைப் படுத்தப்பட்டிருந்தது. ஆனால் கௌரவ விவசாய அமைச்சர் அத்திட்டத்தை அனுமதிக்க மறுத்து விட்டார். முதலீட்டாளர் கௌரவஆளுநரிடம் அனுமதியைப் பெற்று திட்டத்தை அப்பிரதேசத்தில் அமுல் படுத்துகின்றார்.

கௌரவ விவசாய அமைச்சர் மூங்கில் வளர்ப்புத் திட்டத்தை அமுல் படுத்துவதை மறுத்ததோடு குறிப்பிட்ட முதலீட்டாளரை வேண்டிய ஆவணங்களுடன் வந்து தன்னை சந்திக்கும் படி கேட்டுள்ளார். தன்னை வந்து சந்திக்கும் படி கோரியமை கௌரவ விவசாய, கமநல சேவை, கால்நடை அபிவிருத்தி நீர் வழங்கல், உணவு வழங்கல் விநியோகித்தல், சுற்றாடல் மற்றும் கூட்டுறவு அமைச்சரின் நடத்தை மீது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் இவ்விடயம் தொடர்பாக விசாரணைக்குழு முன் விளக்கமளித்த கௌரவ அமைச்சர் அவர்கள் மூங்கிலை எரித்து மின்சக்தியை கொண்டு மின்சாரம் பெறும். அதாவது அனல் மின்நிலையம் அமைப்பதைத் தான் சுற்று சூழல் அமைச்சர் என்ற ரீதியில் அனுமதிக்க முடியாதென்றும் அவ்வாறெனின் காற்றாலை மின்சாரம் பெற மாகாண சபையுடன் ஒப்பந்தம் செய்தது போல ஒரு தொகைப் பணத்தை வருடாந்தம் CSR இற்கு அன்பளிப்பு தேவை எனவும் குறிப்பிட்டுள்ளமை அவரது சாட்சியின் போது அவரது கருத்தில் உள்ள இரட்டைத்தன்மையை எடுத்துக் காட்டு கின்றது.

இவ்விடயத்தில் கௌரவ விவசாயகமநலசேவை கால்நடை அபிவிருத்தி நீர் வழங்கல் உணவு வழங்கல் விநியோகித்தல் சுற்றாடல் மற்றும் கூட்டுறவு அமைச்சர் மாகாண சபையில் சுற்றுச்சூழல் அமைச்சர் என்ற சட்டபூர்வமற்ற நிலைபாட்டை வைத்துக் கொண்டு இவ்விடயங்களில் தலையிடுவதையும் இக் குழு கவனத்தில் எடுத்தள்ளது. சுற்றுச் சுழல் என்பது அரசியல் யாப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழ் மத்திய அரசும் மாகாண சபைகளுக்குமிடையிலான ஒருமைப்பாட்டு (Concurrence) விடயம் என்பது இதுவரை சுற்றுச்சூழல் விடயம் மத்திய அரசாலே நிர்வகிக்கப்பட்டு வரும் விடயம் என்பதும் அச் செயற்பாட்டின் ஒரு பகுதியை மாகாண சபைகளுக்கு வழங்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் அல்லது அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றோ நிறைவேற்றப்பட வில்லை என்பதையும் அதேநேரத்தில் இவ்விடயம் வடமாகாண ஆளுகைக்குள் வர வேண்டுமென்ற அடிப்படையில் வடமாகாண சபை நியதிச்சட்டம் ஒன்றை இதுவரை இயற்றி அனுமதி பெறப்பட்டதானத் தெரிய வில்லை எனவே இந் நிலையில் கௌரவ விவசாய அமைச்சர் தான் சுற்றுச் சூழல் அமைச்சராக வடமாகாணத்தில் செயற்பட்டு வருவதாக தெரிவிப்பதையும் இவ் விசாரணைக்குழு சட்ட பூர்வமற்றதொன்று எனக் கருதுகின்றது.

இந் நிலையில் மூங்கில் நடுகைத் திட்டத்தை நிராகரித்தமை சட்ட பூர்வமற்றதெனவும் முதலீட்டாளரை



தன்னை வந்து சந்திக்கும் படி கேட்டுக் கொண்டதை அவர் நடத்தை மீது சந்தேகத்தை ஏற்படுத்துவதான விசாரணைக்குழு கருதுகின்றது.

த்னியார் காணியில் எப்பயிரையும் செய்வதற்கு ஆலோசனை பெறுவதற்கு வட மாகாண விவசாய அமைச்சரின் அல்லது விவசாயத் திணைக்களத்தில் அனுமதி அல்லது ஆலோசனை பெற வேண்டிய தேவை அல்லை என்ற கௌரவ அமைச்சரின் இறுதி விளக்கம் மேற்படி சந்தேகத்தை மேலும் உறுதிப்படுத்தியுள்ள்து.

மல்லிகை செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் முதலீட்டாளர் கௌரவ விவசாய அமைச்சரை அணுகிய பொழுது சரியான நடைமுறையின் படி தன்னை அணுகாத காரணத்தினால் அதனை அமைச்சர் அங்கீகரிக்காததால் கௌரவ அமைச்சர் தனக்கு ஆரம் விழாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதும் அவர்தான் அந்த நிகழ்வுக்கு செல்லவில்லை எனத் தெரிவித்துள்ளார். ஆளுநரின் அனுமதியை பெற்று திட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

அனுமதி பெறத் தேவையற்ற விடயங்களுக்கெல்லாம் அனுமதி பெற வேண்டுமென்று வலியுறுத்துவதும் தங்களது அமைச்சு திணைக்களங்கள் தொடர்பான எல்லா விடயங்களும் விவசாய அமைச்சருக்கு தெரிய வேண்டுமென திணைக்கள மாவட்ட உதவிப்பணிப்பாளர்களுக்கு உத்தரவிட்டு அதனை நடைமுறைப்படுத்த நினைப்பதும் முதலீட்டாளர்களையும் விவசாய ஆர்வலர்களையும் விவசாயதுறையில் முதலீடு செய்வதற்கு போரினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளது வாழ்வாதாரத்தை உயர்த்த முனைபவர்களுக்கு ஒரு முட்டுக் கட்டையாக உள்ளதெனவும் இது கௌரவ அமைச்சரின் அதிகார துஷ்பிரயோகம் என இவ் விசாரணைக்குழு அபிப்பிராயப்படுகிறது.

எள்ளு விநியோகத் திட்டம் வவுனியா மாவட்டத்தின் அமெரிக்க நிறுவனம் ஒன்றின் உதவித் திட்டத்தின் கீழ் செயற்படுவத்துவதற்கு பிரதேச தெரிவு, பயனாளிகள் தெரிவு மற்றும் அறுவடைக்குப் பின்னரான சந்தைப்படுத்தல் பிரதேச செயலர், பிரதேச விவசாயப் போதனாசிரியர், மாவட்ட விவசாயப் பணிப்பாளர் ஆகியோருடைய மேற்பார்வையில் ஒழுங்குபடுத்தப்பட்ட நிலையில் பிரதி விவசாயப் பணிப்பாளர் வவுனியா கௌரவ அமைச்சரின் ஒப்புதலைப் பெறவேண்டும் என்ற குற்றச்சாட்டை பிரதி விவசாயப் பணிப்பாளர் - வவுனியா கௌரவ விவசாய அமைச்சரின் ஒப்பதலை பெற வேண்டுமெனத் தெரிவித்த குற்றச்சாட்டை பிரதி விவசாயப் பணிப்பாளர் தனது சாட்சியத்தில் ஏற்றுக் கொண்டதுடன் மாவட்டத்தில் நடை பெறுவதை தனது கவனத்திற்கு கொண்டு வர வேண்டும். என்ற கௌரவ அமைச்சரின் பணிப்புரையின் அடிப்படையிலேயே தனது ஆலோசனையை தெரிவித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

கௌரவ அமைச்சர் அவர்களும் அதனை ஏற்றுக் கொண்டதுடன் எழுத்தில் தந்தால் அனுமதிக்கிறேன் என தனது வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளமை இக் குற்றச்சாட்டில் சுமத்தப்பட்டதற்கான காரணத்தை விசாரணக்குழு தெளிவாக விளங்கக்கூடியதாக உள்ளது.

**4.2 கண்காட்சிகள், உழவர் விழா எனப் பல விழாக்களை பெருந்தொகைப்பணத்தை செலவழித்து நடத்தியதன் மூலம் மாகாணசபையின் பெருமளவிலான நிதியை வீண்விரயம் செய்தல்.**

வட மாகாணம் கடந்த 30 வருட யுத்தத்தினால் பாதிப்படைந்த மாகாணம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாய கடற்றொழில் கட்டுமானங்கள் அழிவடைந்து எனினும் யுத்த முடிவிற்குப் பின்னர் மாகாண விவசாய அமைச்சர் விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக விவசாய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்நடைத் திணைக்களத்தின் மூலம் வருடந்தோறும் சிறந்த விவசாயிகள், நவீன தேவைக்கேற்ப தொழில் நுட்பத்தை பிரயோகித்து விவசாயம் செய்வோர், வீட்டுத் தோட்டங்கள் பாடசாலை மட்டத் தோட்டங்களை ஊக்குவிப்பதற்றகாக போட்டிகளை நடத்தி அவர்களுக்கான பரிசுகளை வழங்கி அவர்களை கௌரவித்து வந்ததாக வட மாகாண விவசாயப் பணிப்பாளரது சாட்சியங்களிலிருந்து வெளியாகின்றது. இந் நிகழ்சிகள் மாவட்ட மட்டத்தில் ஆடம்பரமின்றி நடைபெற்று வந்துள்ளது.

ஆனால் 2016 ஆம் ஆண்டிலிருந்து மாகாண ரீதியாக இந் நிகழ்வுகள் விவசாய அமைச்சால் கௌரவ அமைச்சரினால் ஒழுங்குபடுத்தப்பட்டு செயற்படுத்தப்பட்டுள்ளது. இவ் விடயத்தில் விவசாயத் திணைக்களத்தின் ஆலோசனைப்படியே இவ்விழா ஒழுங்கு செய்யப்பட்டதென்ற கௌரவ அமைச்சரின் விளக்கம் ஏற்றுக்கொள்ள முடியாததொன்றாகும். ஏனெனில் குழுவின் முன் சாட்சியமளித்த மாகாண விவசாயப் பணிப்பாளர் எல்லாம் அமைச்சினால் தான் செய்யப்பட்டதாக தனது சாட்சியத்தில் குறிப்பிடப்ப ட்டுள்ளதை இவ்விசாரணைக்குழு கவனத்தில் எடுத்துள்ளது.

இவ்விழாவிற்கு தென் இந்திய திரைப்படக் கலைஞர் திரு. வைரமுத்து அவர்களை அழைக்கும் எண்ணம் தணக்கிருக்கவில்லை எனவும் இது தனது திணைக்கள mandate இல் இல்லை எனவும் இதனை ஒழுங்கமைத்தது அமைச்சு தான் எனவும் மாகாண விவசாயப் பணிப்பாளர் தனது சாட்சியத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மக்களைக் கவருவதற்காக திரு வைரமுத்து அவர்கள் அழைக்கப்பட்டதாகும். அவருக்கான செலவு ரூபா 28000 மாத்திரமே எனவும் கௌரவ அமைச்சர் தனது விளக்கத்தில் தெரிவித்திருப்பது கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. இறுதி யுத்தத்தில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்தக் களியாட்டம் மக்களைக் கவரும் தேவை ஏன் ஏற்பட்டது என்ற கேள்விக்கு கௌரவ அமைச்சரது விளக்கம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை.

எவ்வாறெனினும் இவ்விழாவிற்கு செலவு செய்யப்பட்ட மொத்த நிதியாக ரூபா 2.5 மில்லியனில் ரூபா1.9 மில்லியன் விவசாயிகளுக்கான பரிசிற்காவும் கேடயங்களுக்காகவும் செலவு செய்யப்பட்டதாக அமைச்சின் செயலாளரது சாட்சியையும் அவரினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தையும் விசாரணைக்குழு ஏற்றுக் கொள்கின்றது.

எவ்வாறெனினும் பல வருடங்களாக விவசாயத் திணைக்களத்தினால் மாவட்ட ரீதியில் சாதாரண நிகழ்ச்சியாக நடைபெற்ற விவசாயிகளின் கௌரவிப்பு நிகழ்வில் பாரிய நிகழ்ச்சியாக மாற்றி மக்களை வசீகரிக்கக் கூடிய தென்னிந்தியக் கலைஞரையும் அழைத்து கௌரவ விவசாய அமைச்சர் தலைமை தாங்கி இந்நிகழ்வு கௌரவ அமைச்சரது பெருமையை வெளிக் கொண்டு வருவதற்கு ஒழுங்கு செய்யப்பட்ட விழாவா? அல்லது விவசாயிகளை கௌரவிப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்ட விழாவா? என்ற சந்தேகம் முறைப்பாட்டாளருக்கு ஏற்பட்டிருப்பது தவிர்க்க முடியாததொன்றாகும்.எவ்வாறெனினும் இந் நிகழ்விற்குசெலவு செய்யப்பட்ட பணத்தில் 76% பரிசுக்காக செலவிடப்பட்டமை. முழு நிதியும் வீண்விரயம் செய்யப்பட்டுள்ளதென்ற குற்றச்சாட்டை இவ்விசாரணைக்குழு முன் எண்பிப்பதற்கு முறைப்பாட்டாளர்கள் தவறி விட்டனர்.

எனினும் தேர்தல் கால வாக்குத்திரட்டல் மக்களைக் கவருதல் தன்னை பிரபல்யப்படுத்தல் போன்ற மனவியல்பான எண்ணங்களைக் குறைத்து கௌரவ விவசாய அமைச்சர் விவசாயிகளின் வாழ் →

# வடக்கு அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கை



வாதாரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளில் அக்கறை காட்ட வேண்டும் என இக்குழு விதந்துரைக் கிறது.

**4.3 மாகாண சபை உறுப்பினர்களினதும் மாகாண சபை ஆலோசனைக் குழுக்களினதும் ஆலோசனைகளைப் பெறாமல் திட்டங்கள் முன்னெடுத்தமை**

கௌரவ விவசாய அமைச்சருக்கு எதிராக மேற்படி குற்றச்சாட்டை எண்பிப்பதற்கு ஆவணச் சான்றுகளோ அல்லத முறையான வாய்மொழிச் சான்றுகளோ கிழு விசாரணையின் பொழுது வழக்குத்தொடுநரால் முன் வைக்கப்படவில்லை என்பதுடன் இவை மாகாணசபை பேரவை (Council) தொடர்பான விடயமாக இருப் பதனால் இக்குற்றச்சாட்டை விசாரணை செய்வது இக்குழவின் அதிகதர வரம்பிற்கு உட்பட்டதா என்பதில் பூரண திருப்திப்பாடு காண முடியாத நிலை ஏற்பட் டுள்ளது. ஆகையால் இக் குற்றச்சாட்டிலிருந்து கௌரவ அமைச்சரை விடுவிக்க விசாரணைக்குழு தீர்மானித் துள்ளது.

**4.4Beta Power (pvt)Ltd.&Joule power (Pvt)Ltd நிறுவனங்களிடமிருந்து 2015ஆம் ஆண்டு முதல் வருடம் ஒன்றிற்கு ரூபா 20மில்லியன் வீதம் 2016 வரை பெறப்பட்ட ரூபா மில்லியன் பணத்தை மோசடி செய்தல்.**

Beta Power(pvt)Ltd.&Joule power(Pvt)Ltd. நிறுவனங்கள் தனியார் நிறுவனங்களாகும்.

16 காற்றாலைகள் அரச காணிகளில் அமைப்பதற்கு முறையான குத்தகை அனுமதியை பெறுவதற்கு கௌரவ முதலமைச்சரின் ஒருமைப்பாட்டை(Concurence) பெறுவதற்கு அந்நிறுவனத்தினர் அவரை அணுகி யுள்ளனர். அக்கலந்துரையாடலில் கௌரவ விவசாய அமைச்சர் அவர்களும் கலந்து கொண்டு அவர்களோடு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மாகாணசபை செய லாளரைக் கொண்டு கையொப்பமிடப் பண்ணியு ள்ளனர்.

முதலாவது ஒப்பந்தம் 19.03.2014இலும் திரு. த்தப்பட்ட புது ஒப்பந்தம் பின்னர் பிரதம செயலாளருடன் 07.11.2014இலும் செய்யப்பட்டிருந்தன. இதற்கான பேச்சு வார்த்தையில் Corporative Social Responsibity நிதி மூலம் வருடம் தோறும் முதல் 10வருடங்களுக்கும் வருடாந்தம் 20மில்லியன் ரூபாவும் 10வருடங்களுக்கு பின்னர் வருடம் ஒன்றிற்கு 23மில்லியன் பணமும் வட்மாகாண சபைக்கு பாதிக்கப்பட்ட மக்களின் வாழ் வாதாரத்தை அதிகரிப்பதற்கான உபயோகிக்கப்ப டுவதற்கும் மாகாண விவசாய அமைச்சுக்கு இந் நிதியை வழங்குவதற்கும் ஒப்பந்தத்தில் வழிவகை செய்யப் பட்டுள்து.

கௌரவ விவசாய அமைச்சர் ஆரம்பத்திலிருந்தே இப் பேச்சுவார்த்தையில் ஈடுப்டு வந்தமையும் விவசாய அமைச்சுக்கு வாழ்வாதார உதவியாக இந்நிதியை வழங்க ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டமை, பீட்டா மற்றும் ஜுவி நிறுவனத்தால் செய்யப்பட்ட பரிந்துரையின் அடிப்படையிலேயே என்பது விசாரணையின் பொழுது வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது. அதில் கௌரவ அமைச்சரின் நேரடியான சட்டபூர்வமற்ற பங்களிப்பை எண்பிப்பதற்கான சாட்சிகள் எதனையும் விசாரணையின் பொழுது முன்வைக்கப்படவில்லை.

அத்துடன் 2015 இல் பெறப்பட்ட 20 மில்லியன் ரூபாவும் 2016 இல் வருட 10 மில்லியன் ருபாவுமாக 30 மில்லியன் ரூபா செலவில் விவசாய திணைக்களத்தின் மூலம் 252 விவசாயக் கிணறுகள் யாழ்.மாவட்டத்திலும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலும் புனர மைக்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருவதையும் இத்திட்டத்தை விவசாயத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், சுகாதார அமைப்புகள், பயனாளிகள் ஒன்றாக செயற்படுத்துவதாக விசாரணையின் பொழுது முன்வைக்கப்பட்டன.

ஆயினும் இவ்விசாரணைக்குழு கோண்டாவில், இணுவில், கைதடி ஆகிய பகுதிகளுக்கு சென்று இத் திட்டத்தின் கீழ் திருத்தப்பட்ட விவசாய கிணறுகளின் உரிமையாளர்களைச் சந்தித்து நடத்திய கள ஆய் வின்போது குறித்த கிணற்று உரிமையாளர் ஒவ்வொரு வரும் தமக்கு கிணறு திருத்தியது தொடர்பில் ரூபா 150,000/- செலவு ஏற்பட்டதாகவும் 2016 இல் ஆண்டு மார்கழி மாதட் ரூபா 60,000/- வரையில் பணமாக தமது விவசாய சம்மேளன தலைவர் (அல்லது செயலாளர்) ஊடாக செலுத்தப்பட்டது என்றும் மிகுதிப்பணம் செலுத் தப்படவில்லை என்றும் கூறியிருந்தனர்.

கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த ஒரு விவசாயி மட்டும் தனக்கு ரூபா 117,000/- செலுத்தப்பட்டதாக கூறியிருந்தார். வேலை களை தாமே தமது பணத்தில் செய்ததாகவும் எவ்வளவு தொகை தமது கிணற்றுக்கு ஒதுக்கப்பட்டது என்பது தமக்கு தெரியாது என்றும் கேள்வி கோரல் இன்றியே இவ்வேலை செய்யப்பட்டதாகவும் கூறியிருந்தனர். ஒவ்வொரு கிணற்றுக்கும் ரூபா 150,000 செலவு ஏற்பட்டதாக கிணற்று உரிமையாளர் கள் கூறிய போதும் அதற்கான பற்றுச்சீட்டுகள் எதுவும் சமர்ப்பிக் கப்பட வில்லை.

செய்யப்பட்ட திருத்த வேலைகளும் அத் தொகைக்கு ஏற்றதாக் தென்படவில்லை. மேலும் இப்பணம் விவசாய சங்கங்களுக்கு காசோலையாக கொடுக்கப்பட்டு அதன் தலைவர் அல்லது செயலாளர் அதன்ன மாற்றி தமக்கு பணமாக தந்ததாக எமக்கு கூறப்பட்டது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சுச் செயலாளர் விவசாயக் கிணறுகள் புனரமப்பு செய்யப்பட்ட விடயத்தில் விவசாய திணைக்களத்தினால் உரிய நடைமுறை பின்பற்றப்பட்டதெனக் கூறிய வேளையிலும் கள ஆய்வின் போது கேள்வி கோரல் இன்றி தமது பணத்தில் தாமே இவ் வேலையைச் செய்ததாகவும் தமக்கு ஒதுக்க ப்பட்ட பணம் எவ்வளவு என்பது தமக்குதெரியாது என்றும் கூறப்பட்டமை இங்கு ஓர் நிதி மோசடி தொடர்பில் பலத்தி சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

எனவே இவ்விடயம் தொடர்பில் ஒவ்வொரு விவ சாயிகள் சங்கத்திற்கும் கொடுக்கப்பட்ட காசோலையின் தொகை எவ்வளவு? ஒவ்வொரு விவசாயிகள் சங்கத் தாலும் கிணற்று உரிமையாளர்களுக்கு கொடுக்கப்பட்ட தொகை எவ்வளது? என்பதை திருத்தப்பட்ட 252 கிணற்று உரிமையாளர்களையும் சம்பந்தப்பட்ட விவசாய சங்கத் தலைவர்களையும் அமைச்சு உத்தியோக த்தர்களையும் அழைத்து விசாரித்து அறிய வேண்டிய தேவை எம்மால் உணரப்பட்ட போதிலும் இதற்கான கால அவகாசம் போதாமையினால் அதனை செய்ய இவ் விசாரணைக்குழுவினால் முடியவில்லை.

இதன் காரணமாக உண்மைநிலை வெளிக்கொண்டு வர இவ்விடயம் தொடர்பில் உடன் ஒரு கணக்காய்வு நடத் தப்பட வேண்டும் எனவும் எவராவது தவறு இழைத் திருப்பது தெரியவரின் அவர்களுக்கெதிராக தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் கௌரவ முதலமைச்சருக்கு இவ்விசாரணைக்குழு பரிந்துரைக்கின்றது.

இப்பரிந்துரைக்கு அமைவாக கௌரவ அமைச்சரின் நிதிமோசடி குறித்து நேரடி சாட்சியம் இல்லாமையால் கௌரவ அமைச்சரை இக்குற்றச்சாட்டிலிருந்து விடுவி க்கின்றோம். அதேநேரத்தில் விவசாயக் கிணறுகள் திருத்தப்பட்டமை தொடர்பில் செய்யப்பட்ட செலவுகள் குறித்து மேலதிக பூரண விசாரணை நடத்துமாறு கௌரவ முதலமைச்சர் அவர்களை விசாரணைக்குழு கேட்டுக் கொள்கின்றது.

மேலும் மேற்படி இரு நிறுவனங்களிடமிருந்து வருடந்தோறும் 20 மில்லியன் விவசாய அமைச்சிற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்டுள்ளதாயினும் 2014 ஆம் ஆண்டுக் கொடுப்பன வில் இருந்து இவ்விரண்டு நிறுவனங்க ளிடமிருந்து ரூபா 19.5 மில்லியன் பெறுமதியான 06 பவுசர் வாகனங் களைப் பெற்றதும் அவ்வாகனங்களுக்கு இயக்குவதற்கான நிதி, சாரதி உதவியாளர் வேதனத்தை நிர்வாக ஒழுங்கு விதிகளுக்கு முரணானதாக மாகாண நீர்ப்பாசனத் திணைக்கள நிதியைப் பயன்படுத்தி கொடுப்பனவு செய்வதும் அவ்வாகனங்களை தொடர்ந் தும் திருநெல்வேலி விவசாயப் பண்ணையில் அமைச்சு சார்பாக வைத்திருப்பதும் மாகாண சபை நிதியை வீண் விரயம் செய்வதாக இக்குழு அபிப்பிராயப்படுகிறது. ஏனெனில் நிர்விநியோகம் மத்திய அரசின் கீழ் செயற் படும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையாகும். அத்தோடு உள்ளூராட்சி மன்றங்களுமாகும். அது அவ்வாறே செயற்பட்டு வருகிறது.

அது அவ்வாறிருக்க நீர் விநியோகம் என்ற அமைச்சின் பெயரைத் தவிர நிதிக் குழுவாலோஅல்லது மாகாண சபை பாதீட்டிலோ நீர் விநியோகத்திற்கு எவ்வித நிதி ஒதுக்கமும் பெறாத கௌரவ விவசாய அமைச்சர் 19.5 மில்லியன் ரூபாவை வீண் விரயம் செய்து 6 பவுசர் களைக் கொள்வனவு செய்வித்து குறிப்பிட்ட பணியை செயற்படுத்த அதிகாரம் மற்றும் நிதி மனித வளம் அற்ற விவசாய அமைச்சில் கடந்த 2 வருடங்களாக தாமே வைத்திருப்பது எப்படி வீண்விரயம் அல்ல என்று தீர்மானிக்க முடியும். ஆகையால் இவ் பவுசர் வாகனங்கள் உரிய தேவையான உள்ளூராட்சி அமைப்புக்களுக்கு கையளிக்கப்படவேண்டும் என இக் குழு கருதுகின்றது.

அதே நேரத்தில் இப் பணத்தை கௌரவ அமைச்சர் அவர்கள் மோசடி செய்தார் என்பதை எண்பிப்பதற்கான காட்சிகள், சான்றாவணங்கள் விசாரணைக்குழுவுக்கு முன்வைக்கப்படாத காரணத்தினால் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை. எனவே இக் குற்றச்சாட்டிலிருந்து கௌரவ அமைச்சரை விடுவிக்க விசாரணைக்குழு தீர்மானிக்கின்றது.

**4.5. பாதீனிய ஒழிப்பு நடவடிக்கை என்ற பெயரில் மாகாண நிதியை மோசடி செய்தல்.**

பாதீனியம் 1987ஆம் ஆண்டு இந்திய அமைதிப் படையுடன் வந்த மிருகங்கள் மூலம் கொண்டுவரப்பட்ட செடியாகும். இந்திய அமைதிப்படை இலங்கையை விட்டுச் சென்ற பின்னர் இச் செடியினால் ஏற்படும் பாதிப்பு இனங்காணப்பட்டு மக்களுக்கு விழிப்பூட்டலை ஏற்படுத்தும் நோக்கத்தோடு பல இடங்களில் அறிவித்தல் பலகைகள் போடப்பட்டு இச்செடியை ஒழிப்பற்கு விவசாய திணைக்களத்தால் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட பொழுதும் உண்மையில் இச் செடியின் தாக்கம் விவசாயிகள் மட்டத்தில் பூரணமாக உணரப்படாமையால் அவர்களால் இச் செடிகளை அழிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. ஆனால் இச் செடியின் பரவல் தொடர்ந்து அதிகரித்து வந்தது. இந் நிலையில் மாகாண விவசாயத் திணைக்களம் கடந்த சில வருடங்களாக பார்த்தீனிய ஒழிப்பு நடவடிக்கையை நடைமுறைப்ப டுத்தவில்லை.

இந் நிலையில் 2014 ஆம் ஆண்டு பாதீனியம் ஒழிப்பு என்ற பெரிய அளிவிலான திட்டம், விவசாய அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டது. ரூ 5,000,000/= அளவில் செலவு செய்யப்பட்டுள்ளது. குழுவின் முன்னர் விளக்கமளித்த கௌரவ விவசாய அமைச்சரது விளக்கத்தின் படி செலவழிக்கப்பட்ட பணம் மனிதவலு என்பன நியாய பூர்வமானதாக இருக்கவில்லை என்பதை ஒப்புக் கொண்டுள்ளார்.

இந் நிலையில் சிறப்பாக நடைமுறைப்படுத்த முடியாத, ஏற்கனவே விவசாயத் திணைக்களத்தால் கைவிடப்பட்ட திட்டத்தை எவ்வாறு நிறைவேற்றலாம் என கௌரவ விவசாய அமைச்சர் தீர்மானித்து கௌரவ முதலமைச்சர் தலைமையில் பெரிய விழாவாக ஆரம்பித்து அதற்காக ரூ.5 மில்லியன் அளவில் செலவு செய்த இத் திட்டத்தை இடைநடுவில் கைவிட்டது விவசாய அமைச்சுக்கும், முத லமைச்சருக்கும்,

வடமாகாண மக்கள் மத்தியில் மாகாண சபை நிதியை செயற்படுத்த முடியாத திட்டங்களுக்கு செலவு செய்து வீண் விரயம் செய்கிறார்கள் என்ற எண்ணத்தை அல்லது அபிப்பிராயத்தை ஏற்படுத்துவது தவறென இக் குழு கருதவில்லை. ஆனால் இப் பணம் மோசடி செய்யப்பட்டதாக, சாட்சிகள் முன்வைக்கப்படாத நிலையில் இச் செலவை ஓர் திட்டமிடப்படாத செலவு எனவும், அதனால் பொது மக்களுக்கு நன்மை கிடைக்காத காரணத்தினால் வீண் விரயம் எனவும் இக் குழு கருதுகின்றது. அதற்கு கௌரவ விவசாய அமைச்சரே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

# வடக்கு அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கை



4.6 (அ). Northern Power என்ற மின் உற்பத்தி நிலையம் சுன்னாகத்தில் தொழிற்பட்ட வேளையில் அதனது கழிவு எண்ணெய் குடிநீரில் கலந்த விடயத்திற்கு, ஆய்வுக்குழு ஒன்றை நியமித்து அக் குழுவின் அறிக்கை மூலம் நிறுவனத்திற்கு சாதகமாக அறிக்கையை வெளிப்படுத்தி உண்மைகளை மறைத்தமை.

Northern Power என்ற நிறுவனம் இலங்கை மின்சார சபையோடு செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே சுன்னாகத்தில் இயங்கி வந்தது. இலங்கை மின்சார சபை மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ஓர் நிறுவனமாகும்.

இந் நிறுவனத்தின் செயற்பாட்டால் ஒயில் கசிவை ஏற்படுத்தி நிலத்தடி நீரை மாசுபடுத்தியுள்ளது என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. நிலத்தடி நீர் நிர்வாகம் மத்திய அரசின் கீழ் நிர்வகிக்கப்படும், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு மற்றும் நீர்வளச் சபையின் நிர்வாகத் துக்குட்பட்டது.

எனவே நிலத்தடி நீரில் ஒயில் கலந்திருந்தால் இலங்கை மின்சார சபை, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை, இலங்கை நீர்வளச் சபை என்பன Northern Power நிறுவனத்தோடு அவர்களுக்கு இலங்கை மின்சாரசபையுடன் ஏற்படுத்தப்பட்டிருந்த எழுத்திலான ஒப்பந்தத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்து அப் பிரச்சினையை மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டிய பொறுப்பு அந் நிறுவனங்களுக்கும் அந்நிறுவனங்களை நிர்வகிக்கும் மத்திய அரசுக்கும் இருந்தது. அவர்கள் அப்பொறுப்பை சரியான முறையில் செயற்படுத்தினர்.

அத்தோடு மக்கள் பாதிப்பை உயர்ந்து மத்திய அமைச்சர் அமைச்சரவை பத்திரத்தின் மூலம் அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்று அதற்கான செயற்பாட்டுக்குழுவை அமைத்து பாதிக்கப்பட்ட பிரதேச மக்களுக்கு குடிநீர் விநியோகிக்க உடன் நடவடிக்கையையும் நீண்ட கால நோக்கில்இப்பாதிப்பை நீக்க நடவடிக்கை எடுத்துள்ளனர். ஏனெனில் அந்நடவடிக்கைகளுக்கு தேவையான மனிதவளம், இயந்திர சாதனங்கள் மற்றும் நிபுணத்துவ அறிவு என்பன அவர்களுக்கு இருந்ததனால் இவ் அனர்த்தம் அறிவிக்கப்பட்ட உடனேயே இதற்கான குழுவொன்றை நியமித்து மேற்படி நிறுவனங்களின் உதவியுடன் உண்மையை, பாதிப்பை கண்டறியும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டிருந்தன.

அதேநேரத்தில்வடக்குமாகாண சபைவிவசாய அமைச்சு தமக்கு சட்டபூர்வமாக அதிகாரமளிக்கப்படாததும் நிர்வாக ரீதியாக தொடர்பற்றதுமான இவ்விடயத்தில் தலையிட்டு இதற்கான நிபுணத்துவம், தொழில்நுட்ப வளம், தேவையான உபகரணங்கள் இல்லாத நிலையில் கௌரவ அமைச்சர் தன்னிச்சையாகவே ஓர் குழுவை அமைத்து பின்னர் அதற்கு மாகாணசபை அனுமதியைப் பெற்று மத்திய அரசால் செய்யப்பட்ட ஆய்வு தரவுகளை மாத்திரம் கொண்டு அக்குழு பகுப்பாய்வு செய்து நிலத்தடி நீரில் ஒயில் கலப்பு இல்லை என ஓர் அறிக்கையை தயாரித்து சிறு வட்டத்துக்குள் அதனை வெளியிட்டு Northern Power நிறுவனம் அதனைப் பாராட்டும் அளவுக்கு செயற்பட்டமை, நிலத்தடி நீரில் ஒயில் கலக்கப்பட்டுள்ளது என்ற அடிப்படையில் மத்திய அரசால் வெளியிடப்பட்ட அறிக்கையோடு முரண்பாட்டை ஏற்படுத்தியமை, விவசாய அமைச்சால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் தகுதியிலும் அவர்களது அறிக்கையின் மீதும் அக்குழுவை நியமித்த கௌரவ விவசாய அமைச்சர் மீதும் ஒட்டுமொத்தமாக வடமாகாணசபை மீதும் பொதுமக்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியமை நியாயபூர்வமானது என இவ் விசாரணைக்குழு கருதுகின்றது. இதற்காக செலவிடப்பட்ட நிதி வீண் விரயம்எனக் கருதுகின்றது. இந் நிபுணர்குழுவின் அறிக்கை பொது மக்களுக்கு வெளியிடப்படாமை இச் சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துவதாக உள்ளது.

3.6 (ஆ) நிலத்தடிநீர் விடயம் தொடர்பில் எதுவித அதிகாரமும் அற்ற நிலையில் நிலத்தடி நீரில் எண்ணெய்க் கசிவு தொடர்பில் விசாரணைக்காக நிபுணர் குழுவை நியமித்து மாகாண சபையின் நிதியை வீண் விரயம் செய்தமை

மேற்படி குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்ட நிலத்தடி நீர் தொடர்பான நிர்வாகம் மாகாண சபைக்கு இலங்கை அரசியல் யாப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழ் பாராதீனப்படுத்தப்பட்ட விடயமல்ல. அதனை அமைச்சின் செயலாளர் தனது சாட்சியத்தின் பொழுது ஏற்றுக் கொண்டுள்ளார். அவர் தான் மாகாண நிதிக்கான அமைச்சின் கணக்கு உத்தியோகத்தர் ஆவார். அதே நேரத்தில் விசாரணைக் குழுவின் முன் தோன்றி விளக்கமளித்த கௌரவ அமைச்சரும் ஏற்றுக் கொண்டுள்ளார். நிலத்தடி நீரில் ஒயில் கலந்தமை ஓர் Burming issue என்றதால் சுற்றுச்சூழல் அமைச்சர் என்ற அடிப்படையில் தான் தலையிட்டு மாகாணசபை அனுமதியளித்த காரணத்தால்தான் அவ்விடயத்தில் ஈடுபட்டதாகவும் விசாரணைக் குழுவுக்கு விளக்கமளித்துள்ளார்.

வடமாகாணத்தில் மத்திய அரசாங்க செயற்பாடுகள் எந்தவிதத் தடையுமின்றி அரசாங்க அதிபரின் ஒருங்கிணைப்போடும் வழிகாட்டலோடும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதேநேரம் நிலத்தடி நீருக்கு பொறுப்பான தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையும் நீர் வளச்சபையும் இயங்கிக்கொண்டிருக்கும் சூழ்நிலையில் பொதுமக்களுக்கான எந்த Burming issue வையும் எதிர்நோக்கக்கூடிய மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு இயங்கிக் கொண்டிருக்கும் நிலையில் மத்திய சுற்றாடல் அமைச்சும் சுற்றாடல் அதிகாரசபை மூலம் தனது செயற்பாட்டை நடத்திக் கொண்டுவரும் யாழ்.மாவட்டத்தில் சுற்றாடல் அமைச்சுடனோ அல்லது நீர் விநியோகத்துக்கு பொறுப்பான அமைச்சுடனோ ஒரு புரிந்துணர்வை (M.O.U) ஏற்படுத்திக் கொள்ளாது மாகாண விவசாய அமைச்சர் இவ்விடயத்தில் தலையிட்டு நிபுணர் குழுவை நியமித்தமையும் அதற்காக மாகாண நிதி 1.9 மில்லியன் செலவு செய்தமையும் நியாயமானதொன்றாக இக் குழு கருதவில்லை. அத்தோடு அமைச்சர் தனது விளக்கத்தில் இக் குழு ஓர் ஆய்வையும் தாமாகவே செய்யவில்லை எனவும் மத்திய அரசாங்க நிர்வாக அலகுகளால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு தரவுகளை வைத்துக் கொண்டே தமது அறிக்கையை வெளியிட்டனர் என்ற விளக்கமும் தேவையற்றதும் நிபுணத்துவம் அற்றதும் கையாலாகாத்தனம் கொண்டதுமான இக்குழுவை நியமித்தது. அதற்கு மாகாணசபை செலவு செய்தமை வீண் விரயம் என்றே இக்குழு கருதுகின்றது. மாகாண சபையின் அனுமதியுடன்தான் இந்நடவடிக்கைசெய்யப்பட்டது என்ற விளக்கம் ஏற்றுக்கொள்ள முடியாததொன்றாகும். ஏனெனில் மாகாண சபைக்கான அனுமதிக்கு விண்ணப்பித்ததே கௌரவ விவசாய அமைச்சரேயாகும். அப்பொழுது தனதும் மாகாண சபையினதும் அதிகார எல்லையை வரையறை செய்யும் அறிவு கௌரவ அமைச்சருக்கோ அல்லது அவரது செயலாளருக்கோ இருந்திருக்க வேண்டும். எனவே இதற்காக செலவிடப்பட்ட செலவு அப்பட்டமாக ஓர் வீண் விரயம் என இக்குழு அபிப்பிராயப்படுகின்றது.

**4.7. 2015 நவம்பர் மாதம் முன்னெடுக்கப்பட்ட 5 இலட்சம் மரநடுகைத் திட்டம் தொடர்பில் பண மோசடி செய்தமை.**

மர நடுகை என்பது குறிப்பாக விவசாயத் திணைக்களத்தால் பயன்தரு மரங்கள் நடும் திட்டம் வருடாவருடம் நடைமுறைப்படுத்தப்படும் திட்டமென்பதுடன் பனை அபிவிருத்திச் சபையும் வருடாவருடம் பாரியளவில் பனை மீள் நடுகைத் திட்டத்தை செயற்படுத்தி வருகின்றது. அதற்கு மேலான அரசாங்கமும் தேசிய ரீதியான மரம் நடுகைத் திட்டத்தை செயற்படுத்தி வருகின்றது.

யாழ். மாவட்டத்தில் கடந்த 30 வருடகாலமாக மர நடுகைத் திட்டம் செயற்படுத்தப்படுவதுடன் அதில் கண்ட அனுபவம் காரணமாக மரம் நடுதலை மரம் நட்டு பராமரித்தல் என்று புதுத்தொனியுடன் இத்திட்டம் 1990 இலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அதன் பயனை மிருசுவில் வரையிலான ஏ9 வீதியோர மரங்கள், வல்லைவெளி– யாழ். பருத்தித்துறை வீதியோர மரங்கள், மானிப்பாய் வீதியில் மருங்கில் உள்ள மரங்கள் என்பன சான்றாகியுள்ளன. அதாவது மரம் நடுதல் மாத்திரமல்ல அம்மரங்கள் தாமாகவே வளரும் வரை அவற்றைப் பராமரித்தல் என்ற கொள்கையினடிப்படையிலேயே இம்மரநடுகை உலர் வலயத்தில் பரிமாணம் பெற்றுள்ளது. அதேநேரம் யுத்தத்தின் பின்னர் பல இலட்சக் கணக்கான தென்னை மற்றும் பயன்தரு மரவகைகள் குடும்பங்களுக்கு வழங்கி அவர்களால் பராமரிக்கப்பட்டு பயன்தரும் நிலையில் உள்ளன.

இவ்வரலாற்றைக் கொண்ட மரநடுகை, மாகாண சபை உருவாக்கப்பட்ட பின்னர் 2015 நவம்பர் மாதத்தில் 5 இலட்சம் மரங்கள் நடுவோம் என்ற குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்பட்ட திட்டத்தில் 14,193 மரக்கன்றுகள் மாத்திரம் விவசாய அமைச்சால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் மொத்தச் செலவாக ரூ.2.5 மில்லியனுக்கு செய்யப்பட்டதெனவும் இம்மரக்கன்றுகள் நடுகைத்திட்டம்

(அ) நேரடியாக அமைச்சருக்கூடாகச் செய்யப்பட்டது

(ஆ) சம்பந்தப்பட்ட திணைக்களங்களூடாகச் செய்யப்பட்டது

(இ பொது அமைப்புக்கள் மூலம் செய்யப்பட்டது

என அமைச்சின் செயலாளரது சாட்சியத்தை விசாரணைக்குழு ஏற்றுக்கொள்கின்றது. ஆனால் வவுனியா சேமமடு வீதியில் இளமருதங்குளம் கிராமத்தில் கௌரவ முதலமைச்சர் கௌரவ விவசாய அமைச்சர், செயலாளர் மற்றும் கௌரவ மாகாண சபை அங்கத்தவர்கள் முன் னிலையில் பனை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்கு உரித்தான 15 ஏக்கர் காணியில் பெரும் விழாவாக நடப்பட்ட மரங்களுக்கு யார் உரிமையாளர் என்பதை அமைச்சின் செயலாளரோ அல்லது கௌரவ அமைச்சரோ விசாரணைக்குழுவிற்கு விளக்கமளிக்கத் தவறிவிட்டனர். ஏனெனில் கௌரவ அமைச்சரின் நேரடிப் பங்குபற்றுதல் இல்லாது இத்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் கௌரவ முதலமைச்சரும் இந்த நிகழ்வுக்கு சமுகமளித்திருந்ததாக பொதுமக்கள் குழுவிடம் நேரடியாகத் தெரிவித்துள்ளனர்.

விசாரணைக்குழு இப்பிரதேசத்திற்குச் சென்று கள ஆய்வு செய்த பொழுது மரங்களை நட்டமையை நிரூபிக்கும் குழிகளும் ஓரிரு தேக்கம் கன்றுகளையும் தான் காணக்கூடியதாக இருந்ததுடன் எல்லை வேலிகள் பாழடைந்து எவ்விதப் பராமரிப்புமின்றி அக்காணி இருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

எனவே குறிப்பிட்ட இடத்தில் மரம் நடுகையை தூண்டியது யார்? அதற்கான செலவு எவ்வளவு? அது யாருடைய நிதி? கௌரவ முதலமைச்சர், விவசாய அமைச்சர் பெரு விழாவாக முன்னெடுக்கப்பட்ட இத்திட்டம் மாகாண சபையின் திட்டமெனவே அப்பகுதி மக்கள் அபிப்பிராயப் படுவதோடு இவ்வாறு பொதுமக்கள் நிதியைத் திட்டமிடாது செலவு செய்து வீண்விரயமாக்குவது வடமாகாண சபை என அவர்கள் கொள்ளும் அபிப்பிராயத்தை விசாரணைக் குழு புறந்தள்ள முடியாதுள்ளது.

இது விடயமாக அமைச்சின் செயலாளர் மரங்களைப் பராமரிக்கும் பொறுப்பு தங்களுடையது அல்ல எனவும் அதற்கான பொறிமுறை தம்மிடம் இல்லை எனவும் அவ்வாறு செய்வதாயின் பெருமளவு நிதி தேவை எனவும் விசாரணையின் பொழுது தெரிவித்த கருத்து ஏற்றுக் கொள்ள முடியாததொன்று என்பதுடன் விழா எடுப்பதும் அமைச்சர்களின் செல்வாக்கை முன்னிலைப்படுத்துவதும் தான் அமைச்சர்களதும் அமைச்சின் செயலாளர்களதும் பணியே என விசாரணைக்குழு தனது ஆதங்கத்தை தெரிவித்துக்கொள்கிறது.

கௌரவ விவசாய அமைச்சருக்கு எதிரான இக்குற்றச் சாட்டை எண்பிப்பதற்கு பூரணமான ஆதாரங்கள் விசாரணையின் பொழுது வெளிக்கொண்டு வரப்படவில்லையாயினும் வழங்கப்பட்ட மரக்கன்று களை பராமரித்துப் பாதுகாப்பதற்கான பொறிமுறை இல்லாத இத்திட்டம் வெற்றியளிக்காத திட்டம் என்பதுடன் பூரணம் பெறாததும் வருடாவருடம் நிதி வீண் விரயத்திற்கும் கொண்டு செல்வதற்கான காரணமாக அமைந்துவிட்டது என விசாரணைக்குழு அபிப்பிராயப்படுகிறது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்காற்று நடவடிக்கை சு.க. அசமந்தப் போக்கு

## வடமத்தி முதல்வர் பேசல விசனம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து கொண்டு கட்சித் தலைவரை விமர்சனம் செய்யும், கட்சியின் ஒழுங்குகளை மீறும் உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை முன்னெடுப்பதாக கட்சியின் மத்திய செயற்குழு எடுத்த தீர்மானத்தை இதுவரை செயற்படுத்தாதுள்ளதாக வட மத்திய மாகாண சபை முதலமைச்சர் பேசல ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்தாதுள்ளமை தொடர்பில் அடுத்த மத்திய செயற்குழுக் கூட்டத்தில் தான் கேள்வி எழுப்பவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மே தினக் கூட்டத்தின் பின்னர் நடைபெற்ற கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தின் போது கட்சியின் ஒழுக்கங்களை மீறுவோர் தொடர்பில் கட்சியாப்பின் அடிப்படையில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதாக தெளிவான தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆனால், அது இன்று வரை நடைமுறைப் படுத்தப்படவில்லை. மத்திய செயற்குழுவின் தீர்மானத்தை கட்சி நடைமுறைப்படுத்தாதுள்ளது.

ஒழுக்கம் இல்லாது கட்சியொன்று முன்னோக்கிச் செல்ல முடியாது. ஒழுக்க நடவடிக்கை எடுக்கப்படாமையினால், அமைச்சர்களும், எம்.பி.க்களும் தமக்கு வேண்டிய் பிரகாரம் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். கட்சியை பலவீனப் படுத்த, கட்சியை உடைக்க எதிர்பார்த்துள்ளவர்களுக்கு இது சந்தர்ப்பமாக அமைகின்றது.

அடுத்த மத்திய செயற்குழுக் கூட்டத்தின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கவனத்துக்கு இந்த விடயத்தை கொண்டு வரவுள்ளதாகவும் முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7-8)

# வடமேல் மாகாணத்தில் நிலவும் கடும் வரட்சி

வடமேல் மாகாணத்தில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சி காரணமாக 1,83,130 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதில் புத்தளம் மாவட்டத்தின் 13 பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட 33 கிராம சேவகர் பிரிவுகள் உள்ளடங்குவதாகவும், இதில் 23,782 குடும்பங்களைச் சேர்ந்த 85,758 பேர் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், புத்தளம், கற்பிட்டி, வண்ணாத்திவில்லு, ஆனமடு, கருவலகஸ்வெள, நவகத்தேகம, மகாகும்புகடவல, சிலாபம், முந்தல், மஹாவ, ஆராச்சிக்கட்டு, பள்ளம மற்றும் தங்கொட்டுவ ஆகிய எட்டுப் பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த 5,673 குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு அந்தப் பகுதியிலுள்ள பிரதேச செயலகங்களின் ஊடாகக் குடிநீர் விநியோகிப்பட்டு வருவதாக புத்தளம் மாவட்டத்தின் அனர்த்த முகாமைத்துவ நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்தக் கடும் வரட்சியினால் மாவட்டத்திலுள்ள பல குளங்கள் காய்ந்த நிலையில் காணப்படுவதால் கால்நடைகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதுடன், கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்களும் கருகிய நிலையில் காணப்படுகின்றன. (இ-7-8)

# பேருந்து மீது தாக்குதல்



கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபை பேருந்து மீது கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்து சபை கிண்ணியா டிப்போவுக்கு சொந்தமான பேருந்து மீதே நேற்று முன்தினம் கலேவெல பகுதியில் வைத்து கல்வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கிண்ணியா டிப்போ பொறுப்பதிகாரி எம். பறூஸ் தெரிவித்தார். கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் 10 மணிக்கு திருகோணமலை நோக்கி புறப்பட்ட பேருந்து மீதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த தாக்குதலால் எவருக்கும் காயம் ஏற்பட வில்லைஎனவும் பேருந்துவண்டியின் முன்பக்க கண்ணாடி சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த கிண்ணியா டிப்போ பொறுப்பதிகாரி சாரதியின் பக்கம் கல் வீசப்பட்டிருந்தால் சாரதி பாதிக்கப்பட்டிருக்கக் கூடும் எனத் தெரிவித்தார். (இ-7)

# பிலியந்தலை துப்பாக்கிச் சூடு; மற்றுமொருவர் கைதானார்

(கொழும்பு)

பிலியந்தலை பகுதியில் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்ட சம்பவம் தொடர்பில் மற்றுமொரு சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கெக்கிராவ பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகில் வைத்து இவர் கைதாகியுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

சந்தேகநபர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளைக் கொள்வனவு செய்த நபரே இவ்வாறு கைதாகியுள்ளார்.

மேலும் இவர் ரம்புக்கனை பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

இதேவேளை, நாட்டில் இடம்பெற்ற பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய குறித்த நபருக்கு எதிராக பலபிடிய மற்றும் ஹோமாகம நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்த 9 ஆம் திகதி போதைப்பொருள் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரி ஒருவர் மற்றும் சிறுமி ஒருவரும் உயிரிழந்திருந்ததுடன் பொலிஸ் அதிகாரிகள் இருவர் உள்ளிட்ட ஐவர் காயமடைந்தனர்.

இந்தநிலையில், குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய 34 மற்றும் 27 வயதான இருவர் அகுங்கல்ல - தர்கா நகரில் வைத்து கைது செய்யப்பட்டனர். (இ-7-8)

# கட்டாரிலுள்ள இலங்கையர்கள் தொடர்பான கலந்துரையாடல்

(கொழும்பு)

கட்டார் நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை உக்கிரமடைந்தால், இலங்கையர்களின் பாதுகாப்பு தொடர்பில் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய விசேட கலந்துரையாடல் ஒன்று நாளைமறுதினம் புதன்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கட்டாரிலுள்ள இலங்கைக்கான தூதுவர் ஏ.எஸ்.பீ. லியனகே தெரிவித்துள்ளார்.

இதற்காக வேண்டி இலங்கையர்களின் 22 அமைப்புக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையர்களின் பாதுகாப்பு தொடர்பில் சகல தரப்பினருடனும் ஆரம்ப கட்டப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்பொழுது கட்டாரிலுள்ள இலங்கையர்களின் தொழில்கள் தொடர்பில் எந்த வித எச்சரிக்கைகளும் இல்லையெனவும் தூதுவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-8)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1100

### சுதாமதி




### விஷ்ணுகாந்




### பிரேமா




### கலைநிதி




### கிருபா




### சௌமியா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விட்டதைப் பிடிக்க இருப்பதை விடாதீர்கள்?

**தொழில் ரகசியம்**

மனைவி நச்சரிக்கிறாா் என்று அவரோடு படம் பார்க்கச் செல்கிறீர்கள். மனைவியின் நச்சரிப்பே பரவாயில்லை என்பது போல் க்ண்றாவியாய் இருக்கிறது பட்ம். பொறுக்க முடியாமல் இடை வேளையில் 'வீட்டுக்கு போயிடலாமா' என்கிறாள். 'இந்த பாடாவதி படத்துக்கு பணம் தண்டம் அழுதிருக்கேன். அத வீணாக்கச் சொல்றியா? முழுசா பார்த்து தொலைப்போம்', என்று கூறுவீர்கள் இல்லையா?

கல்யாணத்தின் போது வாங்கிய கார். பழுதாகியிருக்கிறது. கல்யாணம்தான் இடையில் நிற்கிறது. காரையாவது சரி செய்வோம் என்று ஏகத்துக்கு செலவழிக்கிறீர்கள். சில நாள் கழித்து மீண்டும் பழுது. காரை வந்த விலைக்கு விற்க மனமில்லாமல் இவ்வளவு செலவழிச்சோமே என்று மீண்டும் திருத்தம் செய்வீர்கள் தானே?

இரண்டு கேள்விகளுக்கும் உங்கள் பதில் 'ஆமாம்' என்றால் 'சங்க் காஸ்ட் ஃபேலசியில் தொபுகடீர் என்று விழுந்திருக்கும் வித்தகரே. கை ஊன்றி எழுந்து வருக' என்று போர்டு வைத்து உங்களை இக்கட்டுரைக்கு வரவேற்கிறோம்!


பொருளாதார சித்தாந்தப்படி ஏற்கெனவே செலவழிக்கப்பட்ட, மீட்டெடுக்க முடியாத செலவை சங்க் காஸ்ட் என்பார்கள். சங்க் காஸ்ட் என்பதற்கு மூழ்கிய செலவு என்று பொருள். சினிமா தியேட்டரில் பாதி படத்தில் எழுந்து போனால்தான் பணம் வீண் என்று நினைக்கிறீர்கள். ஆனால் எப்பொழுது நீங்கள் கவுண்டரில் கை நீட்டி பணம் தந்தீர்களோ அப்பொழுதே உங்கள் பணம் போய்விட்டது. மனம்தான் அப்படி பார்க்க மறுக்கிறது. கார் பழுது விடயமும் அவ்வாறே. திருத்தம் செய்தோம் என்பதற்காக மீண்டும் திருத்தம் செய்கிறீர்கள். விட்டதை பிடிக்க இருப்பதை விடுகிறீர்கள். இதைத் தான் 'மூழ்கிய செலவு போலிவாதம்' (Sunk Cost Fallacy) என்கிறார்கள்.

### இக்குறைபாட்டில் எத்தனை தரம் விழுகிறோம்?

அனுதினமும். என்ன. நாம் உணர்வதில்லை. அவ்வளவே. சற்றே யோசித் தால் எத்தனை முறை சங்க் காஸ்ட் ஃபேலசியில் விழுந்து அறிவற்ற முடிவுகள் எடுக்கிறோம் என்று புரியும். ஆங்கிலம் சரளமாக பேச ஆசைப்பட்டு ஆங்கில பயிற்சி வகுப்பில் சேர்கிறீர்கள். சொல்லித் தருபவரின் ஆங்கிலம் மகா மோசம். அவரே ஆங்கிலத்தை தமிழில் தான் எழுதி சித்தியடைந்திருப்பார் போலிருக்கிறது. சேர்ந்த பாவத் திற்கு மீதி வகுப்புகளுக்கு போவீர்களா மாட்டீர்களா? 'இதுவரை வந்தாகி விட்டதே', 'இத்தனை செய்து விட்டோமே', 'இவ்வளவு கொடுத்து விட்டோமே' என்று எப்பொழுதெல்லாம் நினைக்கிறீர்களோ அப்பொழுதெல்லாம் சங்க் காஸ்ட் போலிவாதம் மன தில் சடுகுடு ஆடுகிறது என்று அர்த்தம்!

சங்க் காஸ்ட் என்பது வருங்காலத்தின் பயனை பார்க்காமல் கடந்த காலத்தின் செலவைப் பார்ப்பது. நேற்று என்ன விலை தந்தோம் என்று பார்க்கும் நாம் அதனால் நாளை கிடைக்கும் பயனைப் பார்ப்பதில்லை. அதனால் தான் சங்க் காஸ்ட்டை பின்னோக்கி பார்க்கும் முடிவுகள் (Backward-looking decisions) என்கிறார்கள். இப்படிச் சொல்வதால் சங்க் காஸ்ட் கோட்பாடு பணம் சம்பந்தப்பட்ட விடயம் மட்டும் என்று நினைக்காதீர்கள். பிடிக்கவில்லை என்றாலும் இத்தனை நாள் வாழ்ந்தாகி விட்டது இனி எதற்கு மாற்றிக்கொண்டு என்று பொருந்தாத மனைவியுடன் கணவன்கள் வாழ்வது கூட சங்க் காஸ்ட் போலிவாதத்தால் தான்!

இப்படியெல்லாம் கூறுவதால் இக்கோட்பாடு ஏதோ நீங்கள், நான் போன்ற மானிட பதர்கள் விழும் குழி என்று எண்ணாதீர்கள். அரசாங்கங்கள் கூட இப்படுகுழியில் விழு



கின்றன. பல ஆண்டுகளுக்கு முன் இங்கிலாந்தும் பிரான்சும் சேர்ந்து 'கான்கார்ட்' என்னும் விமானத்தை கூட்டாக தயாரிக்க முடிவு செய்தன. ஒலியை விட வேகமாக பறக்கும் சக்திகொண்ட அதிவேக விமானம். ஏகத்துக்கும் பணத்தை முழுங்கிய திட்டம். ஆரம்பித்த நாள் முதல் நஷ்டம்தான். 'வணிக பேரழிவு' என்றே இந்த செயற்றிட்டம் வர்ணிக்கப்பட்டது. சரி போனது போகட்டும் என்று விட்டார்களா?

ஆம். கைவிட மனமில்லாமல் நஷ்டத்திலேயே நடத்தினார்கள். 'இத்தனை செலவழித்தோமே, ஊரெல்லாம் பீற்றிக் கொண்டோமே, இப்பொழுது எந்த முகத்தை வைத்துக் கொண்டு மூடுவது' என்ற பயமே காரணம். இதனால் இக் கோட்பாட்டிற்கு 'கான்கார்ட் போலி வாதம்' என்று இன்னொரு பெயரும் உண்டு!

கடன் கொடுத்த கம்பனிகள் சரியாய் போகாதபோது கொடுத்த கடனை திரும்பப் பெற வங்கிகள் மேலும் மேலும் கடன் கொடுத்து சிக்குவது கூட இக்கோட்பாட்டின் கோரப்பிடியில் கட்டுண்டு கிடப்பதால்தான்.

மூழ்கிய செலவு போலிவாதத்தில் நாம்மூழ்க 3 காரணங்கள்முன்வைக்கலாம். கண்ணுக்கு தெரிந்து எதையும் வீண் செய்ய பலருக்கு பிடிப்பதில்லை. உங்கள் எதிரே நூறு ரூபாய் தாளை எடுத்து நான் அதை யாருக்காவது தருவதற்கு பதில் எரிக்கப் போகிறேன் என்றால் 'எதற்கு வீண் செய்கிறீர்க்ள், அதை யாருக்காவது கொடுக்கலாமே' என்று உங்களுக்கு தோன்றும். என் நூறு ரூபாயை யாருக்கோ தந்தாலோ எரித்தாலோ உங்களுக்கு அதனால் எங்கு எரியப் போகிறது? கண் எதிரே ஒருவர் பணத்தை கிழித்து வீண் செய்கிறேன் என்கிறானே என்ற வயித்தெரிச்சலால் தான்!

இரண்டாவது, நாம் சரியான முடிவெடுப்பவர் என்று மற்றவர்கள் நினைக்க விரும்புகிறோம். ஏதோ ஒன்றை செய்யத் துணிந்து அது சரியாய் செல்லாத போது 'ஒழிந்து போகிறது, மூழ்கிய செலவு என்று நாம் விட்டால் முன்னே எடுத்த முடிவு தவறானது என்று ஆகிவி டுமே' என்று அஞ்சுகிறோம். எடுத்த முடிவை சரியானது என்று எப்பேற்பட்டாவது அனைவருக்கும் காட்ட செய்யும் வேலையை தொடர்கிறோம். அது மொத்தமாய் குட்டி சுவராகும் வரை.

மூழ்கிய செலவு போலிவாதத்தில் பலர் விழ மூன்றாவது முக்கிய காரணம் லாஸ் அவர்ஷன் என்கிறார்கள் உளவியலாளர்கள் 'டேனியல் கான்மென்' மற்றும் 'அமாஸ் ட்வெர்ஸ்கி'. லாபம் அடைவதை விட நஷ்டம் அடையாமல் இருப்பதை விரும்புகிறோம். அதனால் நஷ்டம் அடையும்போது அதை நிவர்த்தி செய்ய முயல்கிறோம். 'அய்யோ பணத்தை அழுது தொலைத்திருக்கிறோமே, இதை எப்படி பாதியில் விடுவது' என்ற எண்ணமே நம் கண்களை மறைக்கிறது. 'செலவு செய்வதன் சிரமம் (Pain of paying) என்று இதை அழகாக வர்ணிக்கிறார் சமூக உளவியலாளர் 'டேன் ஏரியலி'.

அழுத பணமும், செய்த முயற்சியும் வீண் இல்லை என்று உங்களையும் மற்றவர்களையும் நம்ப வைக்க மீண்டும் அதையே செய்கிறீர்கள். மாறுவதை விட மாறாமல் இருப்பதன் மூலம் வருத்தம் இருக்காது என்ற தவறான நம்பிக்கையே இதற்கு காரணம்.

வாழ்க்கையை விடுங்கள், வியாபாரத்தில் மூழ்கிய செலவில் முத்தெடுப்பவர் உண்டு. யாரோ ஒரு ஊழியரை பல காலம் தேடிப் பிடித்து தேர்வு செய்தோம் என்பதற்காக அவர் சரியில்லாதபோதும் அவரை கட்டிக்கொண்டு அழுவார்கள். செலவு செய்து எடுத்த தொலைக் காட்சி விளம்பரம் உருப்படியாய் எதையும் செய்யாமல் இருந்தாலும் எடுத்தோமே என்று அதை மாற்றாமல் பயன்படுத்துவார்கள்.

நடந்ததைப் பற்றி நினைத்து அதை நியாயப்படுத்தாமல், நடக்கப் போவதையும் அதனால் விளையும் நன்மைகளை நினைத்துப் பாருங்கள். சில சமயங்களில் செய்த முயற்சி முதலில் பயனளிக்காவிட்டாலும் தொலைநோக்கு கொண்டு அணுகும் போது பயனளிக்கலாம். அறிவு கொண்டு அணுகுகிறோமா இல்லை இத்தனை முயன்றோம், இவ்வளவு செலவு செய் தோம் என்பதற்காக மீண்டும் முயல்கிறீர்களா என்று சிந்தியுங்கள். சங்க் காஸ்ட் போலிவாதம் பலரை, பல வேளைகளில், பலவித ரூபங்களில் படுத்தும் பலே கோட்பாடு என்பதை நினைவில் வையுங்கள். இதற்கு யாரும் விதி விலக்கல்ல என்பதையும் உணருங்கள்.

இவ்வளவு ஏன், இக்கட்டுரை அலுப்பைத் தந்திருந்தாலும் கடைசி வரை படித்து விட்டீர்களே. ஏன்? பாதி படிச்சாச்சு, மிச்சத்தையும் படித்து தொலைப்போம் என்று நினைத்ததால் தானே!




## தேயிலைக்கு பாதிப்பு; ரூ. 4 பில்லியன் இழப்பு

வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தங்களால் தேயிலை செய்கைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

வெள்ளம் மற்றும் மண்சரிவினால் சுமார் 3 ஆயிரம் சிறு தேயிலை தோட்டங்கள் அழிவடைந்துள்ளதாக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனால் 4 பில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் உபாலி மாரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இரத்தினபுரி,காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களிலேயே அதிகமான தேயிலை தோட்டங்கள் அழிவடைந்துள்ளன.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,689.07 | 6,668.96 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,842.45 | 3,840.77⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 3,484.060 |

**உயர்வடைந்தபங்குகள்(ரூ):** ஈடன் ஹோட்டல் லங்கா(22.30), சிஜஎப்எல்(0.80), ஆர்பிகோ இன்சுரன்ஸ்(19.90), கொழும்பு சிற்றி(1,049.40), வலிபல்வன்(20.40).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** ஹரிசந்திர(1,637.40), பரஹன [illegible], ஈபி கிரேசி(1,215.00), சிரஸ் ஹிக்கடுவ(14.90), அதாம் கப்பிரல்[illegible]

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பு

நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2015-ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016-ம் ஆண்டில் அதிகரித்து காணப்பட்டதாக மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய 2015-ம் ஆண்டு 10 ஆயிரத்து 951.7 பில்லியன் ரூபாயாக காணப்பட்டது.அவை 2016-ம் ஆண்டு 11 ஆயிரத்து 839 பில்லியனாக அதிகரித்து காணப்பட்டதாகவும் மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் உள்ளடக்க சுருக்கியானது, பொருளாதாரத்தின் மொத்தப் பெறுமதிகூட்டலின் 50.7 சதவீதமாக விளங்கியது.

இதனிடையே, பொருளாதாரத்தின் 2வது மிகப்பெரிய துறையான நிதியல்லாக் கூட்டுத்தாபனங்கள் துறையின் பெறுமதிகூட்டல் 2016 உடன் ஒப்பிடுகையில் [illegible] சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் வீழ்ச்சி



இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் மேற்கொள்ளப்பட்ட புள்ளி விபரங்களில் படியே இந்த தகவல் வெளிடப்பட்டுள்ளது.

இதற்கமைய கடந்த மாதம் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2.5 சதவீதத்தால் குறைவடைந்து காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு ள்ளது.

இலங்கையில் நிலவி வரும் காலநிலை காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டிருக்க கூடும் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இதனால், மத்திய கிழக்கு நாடுகள், தெற்காசியா நாடுகள் என்பவற்றில் இருந்து வருகை தரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையே அதிகளவில் வீழ்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 150.78 | 154.58 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 191.75 | 198.29 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 167.75 | 174.09 |
| சுவிஸ் பிராங் | 154.61 | 160.74 |
| கனேடிய டொலர் | 110.98 | 115.36 |
| அவுஸ்திரேலிய டொலர் | 112.57 | 117.62 |
| சிங்கப்பூர் டொலர் | 108.62 | 112.60 |
| ஜப்பான் யென் | 1.36 | 1.41 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.37 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 41.51 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# சிறுவர் அரங்கம்

## நம்பாதே!

அந்தக் காட்டிலிருந்த ஒரு மானும், காகமும், ஒன்றுக்கொன்று மிகவும் நட்பாயிருந்தன. அந்த மான், அங்கிருந்த புற்களையெல்லாம் நிறைய சாப்பிட்டு நன்கு கொழுத் தது. அதே காட்டில் திரிந்து கொண்டிருந்த நரி ஒன்று, அந்த மானைப் பார்த்துவிட்டது. "ஆகா! என்ன மேனி அழகு! என்ன கம்பீரம்! இதன் மாமிசம் மிகவும் சுவையாக இருக்குமே! எப்படியும் வஞ்சனையால் இதைக் கொல்ல வேண்டும்!' என்று தீர்மானித்தது.

உடனே அந்த மானிடம் சென்று, நண்பா! சுகமா?" என்று கேட்டது நரி. அதுகேட்ட மான் நிமிர்ந்து பார்த்தது. இது ஒன்றும் நமக்கு அறிமுகமானதாகத் தெரியவில்லையே! யார் நீ? எங்கிருந்து வருகிறாய்?" என்று கேட்டது மான்.

Nambathey நான் இந்தக் காட்டில், யாருமற்ற அனாதையாய் திரிந்து கொண்டிருக்கிறேன். இன்றைக்கு உன்னைப் பார்த்ததும், எனக்கு மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது. நீ இடும் வேலையைச் செய்து கொண்டே, உன்னிடம் நட்பாக இருக்க விரும்புகிறேன்," என்றது நரி.

அவ்வார்த்தைகள், மானின் மனதை வெகுவாகக் குளிரச் செய்தன.அப்படியா! சரி!" என்று உடனே சம்மதித்துவிட்டது மான்.

மாலையில் சூரியன் அஸ்தமித்ததும், அவை இரண்டும் ஒன்று சேர்ந்து, அங்கிருந்த சம்பக மரத் தின் கீழே வந்து நின்றன. அம்மரத் தில்தான், மானின் நண்பன் காகம் கூடுகட்டி வசித்து வந்தது.

இவ்விருவரையும் பார்த்த அக் காகம், கூட்டைவிட்டு வெளியே வந்து, நண்பா! உன் பக்கத்தில் இருக்கிறவன் யார்? யாரோ புது ஆசாமியாகத் தெரிகிறதே!" என்று கேட்டது.

ஆமாம். நீ சொல்வது சரி தான். இவன் என்னிடம் நட்பு கொள்ள வந்திருக்கிறான்!" என்றது.

நான் நினைத்தது சரி தான். முன்பின் தெரியாதவனை நம்பி விடாதே! நீயோ, என்னைப் போன்று வெள்ளை மனம் படைத்தவன். வெளுத்ததையெல்லாம் பால் என்று நம்பிவிடுவாய்!" என்றது காகம்.

அது கேட்ட நரிக்கு, "சுருக் கென்றது!

ஒருவனைக் கண்டதுமே, அவனது சுபாவம் தெரிந்து விடுமா? ஆனால், நல்லோர்களைக் கண்ட மாத்திரத்திலேயே நட்பு கொள்ளலாம்! நீ எப்படி எனக்கு நண்பனோ, அதுபோல் இவனும் இருந்து விட்டுப் போகட்டுமே! நீ ஏன் தடை செய்கிறாய்?" என்று கூறி, அந்த நரியைத் தன் சிநேகிதனாகவே வைத்துக் கொண்டது மான்.

அதன்பிறகு, மூன்றும் சேர்ந்து இருந்தன. ஆங்காங்க சென்று இரைதேடி, நன்கு வயிறுமுட்ட தின்றுவிட்டு, இருட்டுகிற வேளையில் அந்த



இடத்திற்குச் சேர்ந்தாற் போல் திரும்பிக் கொண்டிருந்தன.

மானுடைய மேனி, நன்கு கொழுந்து பளபளவென்று ஆக ஆக, நரியின் வாயில் நீரூறிற்று! உடனே தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கி விட்டது.

இந்தக் காட்டில் ஓரிடத்தில் பயிர் மிகவும் நேர்த்தியாக விளைந்திருக்கிறது. வேண்டுமென்றால் உனக்குக்காட்டுகிறேன்," என்று மானைப் பார்த்து தணிந்த குரலில் சொல்லியது நரி.

அப்படியா! நானும் தான் எங்கெங்கேயோ சுற்றித் திரிகிறேன் என் கண்ணில் படவில்லையே!"

வா! இப்போதே காட்டுகிறேன்," என்று கையோடுமானை அழைத்து போயிற்று. அப்படியும் இப்படியுமாக வளைந்து வளைந்து சென்று அந்த இடத்தைக் காட்டியது.

அன்று முதல் மான், அங்கேயே சென்று அப்பயிரைச் சுவையாக மேய்ந்து கொண்டிருந்தது.

அந்தக் கொல்லைக்குச் சொந்தக் காரன், ஒருநாள் அதைப் பார்த்து விட்டான். ஓ! இந்த மானுடைய வேலை தானா இது! நான், யாரோ, என்னவோ என்று எண்ணினேன்! இதை ஒரு கை பார்த்து விடுகிறேன்!" என்று கருவினான்.

அடுத்த நாளே, அந்த மானைப் பிடிக்க வலை விரித்துவிட்டான். அந்த மான், வழக்கப்படி அன்றும் வந்தது பயிரை மேய்ந்தது. வகையாய் அங்கு விரித்திருந்த வலையில் மாட்டிக் கொண்டது.

ஐயையோ! இப்படி நேர்ந்து விட்டதே இன்று!" உள்ளுக்குள் அலறியது. "உம். நம் நண்பனுக்குத் தெரிந்தால், எப்படியும் நம்மை விடுவித்து விடமாட்டானா!' என்று நம்பிக்கையோடு இருந்தது.

எதிர்பார்த்தது போல், நரியும் அப்போது அங்கே வந்து, மான் வலையில் மாட்டிக் கொண்டு திண்டாடுவதைக் கண்டதும், "சரிதான்! இன்றுதான் நம் ஆசை நிறை வேறியது. இப்போது இதன் எலும்பையும், மாமிசத்தையும் சுவைத்துத் தின்னலாம்!" என்று அது எண்ணிய போதே, அதன் வாயில் எச்சில் ஊறியது.

ஆனால், நரியைக் கண்ட மானோ, மிகுந்த சந்தோஷப் பட்டது. ஆ! நல்ல வேளையில் வந்தாய்! வலையைக் கடித்து அறுத்து உடனே என்னை விடுதலை செய்!

நீ வ்ரமாட்டாயா என்று இதுவரை எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தேன்! சங்கடத்தில் நண்பர்கள், உடையிழந்தவன் கை போல் உதவுவர் என்பதற் கிணங்க வந்திருக்கிறாய்!" என்று பரபரத்தது மான்.

தொடரும்...

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

06.2017
12

- 1429 - நூறாண்டுகள் போர்: ஜோன் ஒஃப் ஆர்க் தலைமையில் பிரெஞ்சு இராணுவம் ஆங்கிலேயர்களிடம் இருந்து ஜார்கூ என்ற இடத்தைக் கைப்பற்றினர்.
- 1775 - அமெரிக்கப் புரட்சிப் போர்: பிரித்தானிய இராணுவத் தளபதி தொமஸ் கேஜ் மசாசுசெட்சில் இராணுவச் சட்டத்தைப் பிறப்பித்தார். தமது ஆயுதங்களைக் கீழே வைக்கும் அனைத்துக் குடியேற்றக்காரர்களுக்கும் மன்னிப்பு அளிப்பதாக அறிவிக்கப்பட்டது.
- 1830 - 34,000 பிரெஞ்சுப் படைகள் அல்ஜீரியாவை அடைந்ததில் இருந்து பிரெஞ்சுக் குடியேற்றம் அந்நாட்டில் ஆரம்பமாகியது.
- 1902 - அவுஸ்திரேலியாவின் நான்கு மாநிலங்களில் பெண்கள் பொதுத்தேர்தலில் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர். அவுஸ்திரேலியப் பழங்குடிகள் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டது.
- 1935 - பொலீவியாவுக்கும் பராகுவேயிற்கும் இடையில் அமைதி உடன்பாடு எட்டப்பட்டு மூன்றாண்டுகள் போர் முடிவுக்கு வந்தது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: 13,000 பிரித்தானிய மற்றும் பிரெஞ்சுப் படைகள் பிரான்சில் ஜேர்மனியரிடம் சரணடைந்தனர்.
- 1943 - நாசி ஜெர்மனியர் மேற்கு உக்ரைனில் 1,180 யூதர்களைப் படுகொலை செய்தனர்.
- 1964 - தென்னாபிரிக்க நீதிமன்றம் நெல்சன் மண்டேலாவுக்கு ஆயுள்கால சிறைத்தண்டனை விதித்தது.
- 1987 - மத்திய ஆபிரிக்கக் குடியரசின் முன்னாள் பேரரசர் ஜீன்-பெடெல் பொக்காசாவுக்கு அவரது 13 ஆண்டுகால ஆட்சியில் இழைக்கப்பட்ட குற்றங்களுக்காக மரணதண்டனை அறிவிக்கப்பட்டது.
- 1991 - மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் 65 தமிழர்கள் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1999 - நேட்டோ தலைமையிலான ஐநா அமைதிப் படை கொசோவோவினுள் நுழைந்தது.
- 2003 - தமிழர் விடுதலை இயக்கம் என்ற அமைப்புக்குத் தமிழக அரசு தடை விதித்தது.
- 2006 - காஷ்மீரில் தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கி சூட்டில் தொழிலாளர்கள் 8 பேர் உயிரிழந்தனர்.

பிறப்புகள்

- 1924 - ஜோர்ஜ் டபிள்யூ. புஷ், அமெரிக்காவின் 41வது குடியரசுத் தலைவர்
- 1932 - பத்மினி, தென்னிந்தியத் திரைப்பட நடிகை (இ. 2006)

இறப்புகள்

- 2014 - வாண்டுமாமா, குழந்தை எழுத்தாளர் (பி.1925)
- 2014 - கொடுக்காப்புளி செல்வராஜ், நகைச்சுவை நடிகர்

சிறப்பு நாள்

- பிலிப்பீன்ஸ் - விடுதலை நாள்
- குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு தினம்
- ரஷ்யா - ரஷ்ய நாள் (1990)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 160 | 140 | 200 | 140 | 160 |
| உருளைக்கிழங்கு | 110 | 90 | 120 | 120 | 100 | 110 |
| பச்சைமிளகாய் | 500 | 450 | 500 | 400 | 400 | 500 |
| தக்காளி | 160 | 140 | 140 | 160 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 60 | 80 | 100 | 60 | 70 |
| கோவா | 160 | 140 | 200 | 160 | 160 | 200 |
| கரட் | 230 | 200 | 280 | 400 | 250 | 320 |
| பூசணி | 70 | 80 | 80 | 80 | 60 | 80 |
| புடோல் | 80 | 50 | 100 | 160 | 140 | 80 |
| வாழைக்காய் | 60 | 40 | 80 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 270 | 300 | 380 | 200 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 100 | 120 | 100 | 110 |
| பாகற்காய் | 160 | 150 | 200 | 160 | 180 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 120 | 120 | 120 | 120 |
| கருணைக்கிழங்கு | 100 | 70 | —. | 160 | 120 | 120 |
| பயற்றங்காய் | 100 | 100 | 70 | 120 | 140 | 120 |
| லீக்ஸ் | 100 | 100 | 140 | 160 | 120 | 120 |
| பீற்றூட் | 120 | 100 | 160 | 160 | 140 | 160 |
| கறிமிளகாய் | 350 | 150 | 300 | 280 | 200 | 300 |
| முருங்கைக்காய் | 160 | 80 | 150 | 120 | 160 | 120 |
| போஞ்சி | 200 | 180 | 240 | 240 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 150 | 150 | 200 | 120 | 50 |
| கீரை - 1பிடி | 20 | 30 | 30 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 60 | 80 | 120 | 80 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 70 | 65 | 50-60 | 70 | 70 |
| இராசவள்ளி | 250 | — | — | 280 | 200 | 150 |
| வெங்காயப்பூ | 300 | — | 280 | 200 | 280 | 280 |
| முள்ளங்கி | 80 | — | 150 | 120 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 10 | 40 | 40 | 25 | 30 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 20 | 10 |
| ஈரப்பலா | 100 | — | 100 | — | 80 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சம் அடைந்த பின் கைவிடலாமோ.
தாயும் தன் குழந்தையை தள்ளிடப் போமோ!
~ பாரதியார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# ஜனாதிபதியின் சந்திப்பு நெடுந்துயரை தீர்க்கட்டும்

காணாமல்போனவர்களின் உறவினர்களைச் சந்திப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார் என்ற செய்தி மனதுக்கு ஆறுதலைத் தருகிறது.

யுத்தம் ஏற்படுத்திய பேரிழப்புக்களை அனுபவித்து வருகின்ற தமிழ் மக்கள் அதிலிருந்து மெல்ல மெல்ல மீள எத்தனிக்க முயற்சி செய்தாலும் காணாமல்போனவர் என்ற விவகாரம் அவர்களின் உறவினர்களை உலுப்பி வருகிறது.

காணாமல்போன தன் பிள்ளைக்காக தவம் இருக்கும் தாய்; காணாமல்போன குடும்பத் தலைவனுக்காகக் காத்திருக்கும் குடும்பம் என்றொரு துன்பப்பட்டியல் மிக நீண்டதாக உள்ளது.

இதற்கு அப்பால் காணாமல்போன தன் பிள்ளையை படையினருடன் கண்டதான தகவல்கள், ஜனாதிபதியின் பிரசாரக் கூட்டத்தில் நின்றதான செய்திகள் என அனைத்தும் காணாமல் போனவர்களின் உறவினர்களை வாட்டி வதைக்கிறது.

காணாமல்போன எங்கள் பிள்ளைகள் தொடர்பில் ஒரு முடிவே கிடையாதா? என்ற ஏக்கத்துடன் காணாமல்போன உறவினர்கள் மேற்கொண்டிருக்கும் தொடர் போராட்டம் நூறு நாட்களைக் கடந்து செல்கிறது.

இந்நிலையில் காணாமல்போனவர்களின் உறவினர்களை மைத்திரிபால சிறிசேன இன்று யாழ்ப்பாணத்தில் சந்திக்க உள்ளார்.

இச்சந்தர்ப்பத்தில் தொடர் போராட்டம் நடத்தி வரும் எமது உறவுகளுக்கு சற்றேனும் ஆறுதலைக் கொடுக்கும் எனலாம்.

பிள்ளைகளை இழந்து தவிக்கும் பெற்றோர், அவர்களின் குடும்பத்தினர் தமது துயருக்கு முடிவு கட்டும் வகையில் அன்னாகாரம் இன்றி தங்கள் அத்தனை வேலைகளையும் புறந்தள்ளி தொடர் போராட்டம் நடத்தி வரும் போது,

அதுபற்றி ஏன்? என்று கேட்கவில்லையாயின் அதுவே மிகப்பெரும் துன்பமாக மாறும்.

அந்த வகையில் இந்த நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள்; காணாமல் போனவர்களின் உறவினர்களை இன்று யாழ்ப்பாணத்தில் சந்திப்பது ஒரு முக்கியமான நிகழ்வு.

அதேவேளை இந்தச் சந்திப்பில் தங்கள் பிள்ளைகளை நினைந்துருகும் பெற்றோரின் கண்ணீருக்கு முடிவு கட்ட வேண்டும்.

முன்னைய ஆட்சிக்காலத்தில் நடந்த சந்திப்புப் போல அமையாது இந்தச் சந்திப்பு பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் அளிப்பதாக அமைவது கட்டாயமானதாகும்.

காணாமல்போனவர்களின் உறவுகள் கண்ணீரும் கம்பலையுமாக அலைந்து திரியும் போது ஆட்சியாளர்கள் சிலரும் பேரினவாத அரசியல்வாதிகளும் கூறிய கருத்துக்கள் மனிதநேயமற்றவை.

அவர்கள் கூறிய கருத்துக்கள் பாதிக்கப்பட்டவர்களின் இதயங்களை கருகச் செய்தன. காணாமல்போனவர்கள் வெளிநாடு சென்றிருக்கலாம் அல்லது அவர்களை விடுதலைப் புலிகள் சுட்டுக் கொன்றிருக்கலாம் என்ற அறிவிப்புக்கள் எரிகின்ற நெருப்புக்கு எண்ணெய் ஊற்றுவதாகவே இருந்தன.

காணாமல்போனவர்கள் இறந்து விட்டனர் என்றால் அவர்களின் உடல்கள் எங்கே? கொன்றது யார்? பாதுகாப்பார் என்று நினைத்து ஒப்படைத்தோமே பாதுகாக்க வேண்டியவர்களே கொன்றுவிட்டனர் என்றால் அவர்களுக்கான தண்டனை என்ன? என்ற கேள்விகள் எல்லாம் எழுமல்லவா?

ஆகவே ஒரு நல்ல முடிவை ஜனாதிபதி தர வேண்டும். இந்த முடிவு கண்ணீரும் கம்பலையுமாக அலையும் எங்கள் உறவுகளின் துன்பத்துக்கு முடிவு கட்டுவதாக இருக்கட்டும்.

# நிரந்தர நியமனத்தைக் கோரும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள்

வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு தமக்கான நிரந்த நியமனத்தை வழங்குமாறு பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் கடந்த 2011 ஆம் ஆண்டில் இருந்து பகுதி நேர ஆங்கில பாட ஆசிரியர்களாக 56 பேர் கடமையாற்றி வருகிறோம். எமக்குரிய கடமை நேரம் 2 மணித்தியாலங்களாக இருப்பினும் நாம் பாடசாலைகளில் முழு நேரமாக கடமையாற்றி வருகிறோம். ஒரு நாளைக்கு 150 ரூபாய் சம்பளத்துக்கு தான் நாம் கடமையாற்றுகின்றோம்.

ஆங்கில தினப் போட்டி தொடக்கம் இணைபாடவிதான செயற்பாடுகள், செயலமர்வுகள் என அனைத்திலும் பங்கு கொண்டு சாதாரண ஆசிரியருக்குரிய அனைத்து செயற்பாடுகளையும் பாடசாலைகளில் மேற்கொண்டு வருகின்றோம்.

நாம் இச் சேவைக்கு யாருடைய சிபாரிசிலும் செல்லவில்லை. பத்திரிகை வாயிலாக விண்ணப்பம் கோரப்பட்ட எழுத்து பரீட்சை மூலமே ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு நேர்முகத்தேர்வின் மூலம் தெரிவு செய்யப்பட்டோம். ஆனால் தொண்டர் ஆசிரியர்களையும் ஒப்பந்த ஆசிரியர்களையும் நிரந்தரமாக்குவதற்கு எடுத்த முயற்சிகளை மாகாண அரசு எமக்கான நிரந்தர நியமனத்துக்காக எடுக்கவில்லை.

கடந்த 2005 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனத்தின் போது பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் நியமனமும் வழங்கப்பட்டது. ஆனால் அதற்கு பின்னர் வழங்கப்படும் நியமனத்தில் பகுதி நேர ஆசிரியர்கள் உள்வாங்கப்படவில்லை.

இது தொடர்பில் நாம் கல்வி அமைச்சருடனும் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுடனும் கலந்துரையாடினோம். ஆனால் எம்மை ஒரு பொருட்டாக அவர்கள் கவனத்தில் எடுக்கவில்லை. பட்டதாரிகள் டிப்ளோமா தாரிகளாக வந்தால் மாத்திரமே நியமனம் தருவதாக தெரிவிக்கின்றார்கள்.

எமது எதிர்காலம் கேள்விக்குறியதாய் உள்ளது. இத்தனை வருடங்களாக நாம் ஆற்றிய சேவைக்கு என்ன பலன் தரப்போகின்றனர். ஒப்பந்த அடிப்படையில்சேவையாற்றிய ஆசிரியர்களும் எம்முடன் தான் சேவைக்கு உள்வாங்கப்பட்டார்கள். அவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. அரசியல்வாதிகளின் செல் வாக்கைப் பயன்படுத்தி பலர் நியமனங்களை பெற்றுள்ளார்கள். நாம் எங்கு செல்வது?

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுடனும் கலந்துரையாடியிருந்தும் எந்தவித பதிலும் எமக்கு வழங்கப்படவில்லை. எம்மை பகடைக் காய்களாக தான் பயன்படுத்துகிறார்கள். எமக்காக குரல் கொடுக்க எவரும் முன்வரவில்லை. எமது பரிதாப நிலையை கருத்திற்கொண்டும் எமது எதிர்காலத்தை கவனத்தில் எடுத்தும் எதிர்வரும் 28, 29,30 ஆம் திகதிகளில் இடம்பெறும் நேர்முகத் தேர்வில் எம்மையும் உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (8-9)

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

**விவாகத்திற்கு கசரம்மாக வேண்டுமா?**




கசரம் என்பது சூரியன் பிரவேசித்துக் கொண்டிருக்கும் நட்சத்திர பலத்தைக் குறிக்கும்.

திருமண நாளன்று சூரியன் இருக்கும் நட்சத்திரத்தில் திருமணத்தில் குறிக்கப்பட்டிருக்கும் நட்சத்திரம் வரை எண்ண வேண்டும். எண்ணிய தொகையை 9 ஆல் வகுக்க வேண்டும்.

1,2,3,7,8 வந்தால் தோஷமில்லை. 3,4, 5,9 வந்தால் கசரம் ஆகும்.

(தொடரும்)

# காணாமற்போன முதியவர் காட்டில் சடலமாக மீட்பு

கரவெட்டி பகுதியில் 10 தினங்களுக்கு முன்னர் காணாமற் போன வயோதிபர் ஒருவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை கரணவாய்ப் பகுதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். உச்சில் வீதி கரவெட்டி மேற்கைச் சேர்ந்த பாலசுந்தரம் (வயது 60) எனும் முதியவர் கரணவாய் மண்டான் காட்டுப் பகுதியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலத்தின் அருகில நச்சுப் போத்தல் ஒன்று காணப்பட்டதாகவும் சடலம் பழுதடைந்த நிலையில் உள்ளதால் இறந்த 8 தினங்கள் இருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (8-60)

⅄⅄⅄⅄⅄⅄⅄

சுன்னாகம் மத்தியில் முதியவர் ஒருவரின் சடலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மீட்கப்பட்டது. டாக்டர் சுப்பிரமணியம் வீதி - பழனி கோவிலடியைச் சேர்ந்த தனிமையில் வசித்து வந்த சோமசுந்தரம் பழனிவேல் (வயது-78) என்ற முதிய வரின் சடலமே இவ்வாறு மீட்கப்படடது.

தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு வந்த திடீர் மரண விசாரணை அதிகாரி கீற்தேப்பரின் விசாரணையின் பின் சடலம் உறவினர் களிடம ஒப்படைக்கப்பட்டது. இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-99)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மறறும்பராமரிப்புவேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணிவரை யாழ். பிரதேசத்தில் தையிட்டி, வறுத்தலைவிளான், வீமன்காமம், மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, கொடுக்குழாய், ஆழியவளை, வெற்றிலைக் கேணி, கட்டைக்காடு, கேவில், வெற்றிலைக்கேணி இரா ணுவ முகாம், கட்டைக்காடு இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில தெற்கிலுப்பைக் குளம் ஆகிய இடத்திலும் மன்னாா பிரதேசத்தில பள்ளி முனை NHDA, மன்னார் நகரம் ஒரு பகுதி, காகில்ஸ் பூட் சிற்றி, பெரியநீலாச் சேனை, இத்திக்கண்டல், சொர்ணபுரி, அடம்பன், மினுக்கன், பாப்பாமோட்டை, பரப்பாங்கண்டல், வட்டக்கண்டல், குருவில், பரப்புககடந்தான், ஆண்டான் குளம், கண்ணாட்டி, பள்ளி வாசல்பிட்டி, அடம்பன் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும் (இ-9)

# நீர் வெறுப்பு நோயால் மரணம் நிச்சயம் ஆனாலும் அது தடுக்கப்படக்கூடியதே

ஏற்பு தடுப்பூசியானது விலங்கு விசர் நோயிலிருந்து பாதுகாப்பு தராது. எனவே ஏற்பூசி போட்டவர்களும் கட்டாயம் தொற்று அபாய நிலை இருப்பின் விலங்குவிசர்நோய் தடுப்பூசியினை **(ARV)** தவறாது ஏற்றிக்கொள்ளல்.

பாதுகாப்பான சூழலில் வளர்ப்புநாய், பூனைகளை வளர்ப்போம்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகரசபை.

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## முயற்சியளவே ஞானவிளைவு



விதை, நிலம், எரு, தண்ணீர், காவல் இவைகள் அனைத்தும் சரியாக இருந்தால் தான் விளைவு நன்றாக இருக்கும். அதுபோலவே, ஒரு ஆசான் அத்துவிதத் தத்துவம் என்ற ஒருமைத் தத்துவ விதையை உன்அறிவு என்னும் நிலத்தில் ஊன்றினால் அது வளர்ச்சி பெற, நீ ஒழுக்கம் என்ற உரம் இடவேண்டும். அறிவை ஒன்றிப் பழகும் ஒருமைப் பழக்கமான தவமும் - ஆராய்ச்சியும் என்ற தண்ணீரும் பாய்ச்ச வேண்டும்.

அறிவை ஒன்றச் செய்து உறுதியான, அசைவற்ற நிலையடைவதே ஞானத்திற்குத் தேவையாக இருக்கிறது.

ஆகையால், அறிவு சலனப்பட்டுக் காமம், குரோதம், கோபம், மோகம், மதம், மாச்சரியம் என்னும் அறு குணங்களில் எதுவாயும் மாறாது பார்த்துக் கொள்ளும் விழிப்பு நிலையாகிய காவல் புரிய வேண்டும்.

இவைகள் எல்லாம் அமையும் வகைக்கும் அளவிற்கும் ஏற்றபடி "ஞானம்" என்ற விளைவும் உனக்கு உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வை உதைபந்தாட்டம் சம்பியனானது உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகம்







பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் வல்வை வி.கழகம் நடாத்திய உதைபந்தாட்ட இறுதி போட்டியில் (10/06/2017) அன்று நடைபெற்ற போட்டியில் வதிரி பொம்மர்ஸ் வி.கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டு கழகம் மோதியது.

முதலாவது பாதியாட்டத்தில் பொம்மர்ஸ் அணி தலைவர் சாரங்கன் நீண்ட தூரத்திலான சிறந்த கோல் ஒன்றை பதிவு செய்ய முதல் பாதியாட்டத்தில் 01:00 என்ற கோல் அடிப்படையில் வதிரி பொம்மர்ஸ் அணி முன்னிலை பெற்றிருந்தது.

இரண்டாவது பாதியாட்டத்தில் நவஜீவன்ஸ் பின் கள வீரர் ரவிஷாந் கோல் போட ஆட்டம் 01:01 என்ற கோல் அடிப்படையில் சம நிலையானது. வெற்றியை தீர்மாணிப்பதற்காக வழக்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதை முடிவில் 04:03 என்ற ரீதியில் பொம்மர்ஸ் அணியை வீழ்த்தி சம்பியனானது நவஜீவன்ஸ் அணி. போட்டியின் தொடர் ஆட்ட நாயகனாக பொம்மர்ஸ் அணி வீரர் சாரங்கன் தெரிவு செய்யப்பட்டார்.

ஆட்ட நாயகனாக நவஜீவன்ஸ் அணி வீரர் ரவிஷாந்த் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த பின்கள வீரராக நவஜீவன்ஸ் அணி வீரர் கௌதமன் தெரிவு செய்யப்பட்டார்.

சிறந்த கோல் காப்பாளராக பொம்மர்ஸ் அணியின் கோல் காப்பாளர் மதுஷன் தெரிவு செய்யப்பட்டார். இத் தொடரின் சிறந்த கோல் பொம்மர்ஸ் அணி வீரர் கோபிநாத் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த நன்னடத்தை அணியாக கொற்றாவத்தை றேஞ்சஸ் வி.க.தெரிவு செய்யப்பட்டது.(க)

# மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டு விழா

வடக்கு. கிழக்கு மாகாணம் எங்கிலும் வாழும் தமிழ் மாற்றுத் திறனாளிகள் அனைவரும் இணைந்து நடத்தும் தமிழ் மாற்றுத் திறனாளிகள் விளையாட்டு விழா கிளிநொச்சி மற்றும் மட்டக்களப்பில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்துக்கான விளையாட்டுப் போட்டிகள் அனைத்தும் கிளிநொச்சியிலும் கிழக்கு மாகாணத்துக்கான போட்டிகள் அனைத்தும் மட்டக்களப்பிலும் தமிழ் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் ஏற்பாட்டில் அடுத்த மாதமளவில் நடைபெறவுள்ளது

2016 ஆம் ஆண்டு நடைபெற்ற மாற்றுத் திறனாளிகள் விளையாட்டு விழாவை வெகு சிறப்பாகவும் நேர்த்தியாகவும் நடந்திய தமிழ் மாற்றுத் திறனாளிகள் மீண்டும் அவ்வாறானதொரு விழாவை நடத்த முனைகின்றார்கள்.

அங்கங்களை இழந்து . சக்கரநாட்காலியில் முடக்கப்பட்டு வாழும் ஒரு சமூக கூட்டம் ஒவ்வொரு வருடமும் தமது வாழ்வு குறித்து ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடத்தும் இந்த விளையாட்டு விழா , அவர்களிடையே விளையாட்டு வீரர்களையும் உருவாக்குகின்றது.

அவர்கள் மாற்றுத் திறனாளிகளுக்காக நடத்தப்படும் சர்வதேச போட்டிகளில் தற்போது மிளிரத் தொடங்கி உள்ளார்கள்.

இம்முறை போட்டிகளை மேலும் வலுச்சேர்க்கும் வகையில் வடக்கு . கிழக்கு மாகாண சபைகள் மாற்றுத் திறனாளிகளின் முயற்சிகளுக்கு உதவ முன்வந்துள்ளார்கள். போட்டிகள். மாகாண சமூக சேவைத் திணக்களம், விளையாட்டு உத்தியோகத் தர்களின் மேற்பார்வையிலும் மாற்றுத் திறனாளிகளின் ஒருங்கிணைப்பிலும் நடைபெறும்.

போட்டிகள் அனைத்தும் முதலில் மாவட்ட ரீதியாக நடைபெறும். அதன் அடிப்படையில் தற்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மாற்றுத் திறனாளிகளின் அமைப்புக்கள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டு வருகினறன. (க-9)

வலம்புரி SPORTS
விளையாட்டுச் செய்திகள்



08.06.2017 அன்று ஓமந்தை மத்திய கல்லூரியில் நடைபெற்ற 17 வயதுப் பிரிவு எறிபந்தாட்டப் போட்டியில் முல்லைத்தீவு கோட்டைகட்டிய குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.



உடற் கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தினால் இளவாலை மெய்கண்டான் வித்தியாலயத்துக்கு நா.விஜயகுமாரின் நிதி உதவியுடன் பெறுமதிமிக்க விளையாட்டு உபகரணங்களை சங்கத் தலைவர் ப.தர்மகுமாரன் பாடசாலை உப அதிபரிடம் கையளித்தார்.

# மூன்றாமிடத்தை தனதாக்கியது கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி




பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் வல்வை வி.கழகம் நடத்திய உதைபந்தாட்டத்தின் 10/06/2017 அன்று நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் நவிண்டில் கலைமதி அணியை 02:01 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டி மூன்றாமிடத்தை தனதாக்கி யது கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி. யங்கம்பன்ஸ் அணி சார்பாக பிரகாஷ், தர்சன் தலா ஒவ்வொரு கோலினை பெற்றுக்கொடுத்தனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முழுமையான தீர்வு...

சேன, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் முழுமையான தீர்வுடன் வருவார் என்ற நம்பிக்கையில் அவருடைய வரவை, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளார்கள்.

வடக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தக் கோரியும் அவர்கள் தொடர்பான விபரங்களை வெளியிடக் கோரியும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் 113ஆவது நாளாகவும் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறு வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து மாவட்டத்திலும் கவனயீர்ப்பு போராட்டங்களை முன்னெடுத்து வந்துள்ளனர்.

இந்த நிலையிலே இவர்களின் தொடர் போராட்டத்தின் நூறாவது நாளில் காணாமல்போனவர்களின் உறவுகள் ஒன்றிணைந்து கிளிநொச்சி மாவட்டத்தில் மாபெரும் போராட்டத்தினை மேற்கொண்டு வீதி மறியல் ஆர்ப்பாட்டத்தையும் முன்னெடுத்திருந்தனர்.

வீதி மறியல் போராட்டத்தை நிறுத்துவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் அரச அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு அது பயனளிக்காத நிலையில் இறுதியில்

வடமாகாண ஆளுநர் குறித்த விடயத்தில் தான் கவனம் எடுப்பதாகவும், ஜனாதிபதியை சந்திப்பதற்கு ஏற்பாடு செய்வதாகவும் தெரிவித்து வீதி மறியல் போராட்டத்தை கைவிடுமாறு கோரியிருந்தார். அதன் அடிப்படையில் வீதிமறியல் போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்தி தமது போராட்டத்தை தொடர்ந்த உறவுகள் இன்றைய தினம் ஜனாதிபதியை சந்திப்பதற்கு ஆயத்தமாகியுள்ளனர்.

இந்த நிலையில் இன்றைய தினம் ஜனாதிபதியை சந்திக்கவுள்ள காணாமல் போனவர்களுடைய உறவுகள் வலம்புரி பத்திரிகைக்கு கருத்து தெரிவிக்கையில்,

அரசிடம் ஒப்படைத்த எமது உறவுகளை மீண்டும் திருப்பி தாருங்கள் என்ற நியாயமான கோரிக்கையை முன்வைத்து நாம் எமது உறவுகளை தேடி வீதியோரங்களில் போராடி வருகிறோம். பல அச்சுறுத்தல்கள், மத்தியில் எமது உறவுகளை தேடி போராடுகிறோம்.

ஜனாதிபதியை சந்திப்பதற்காக நாம் போராடவில்லை எமது உறவுளை தேடியே போராடுகிறோம். அதன் அடிப்படையில் நீதியான பதிலை எதிர்பார்த்து இன்றைய தினம் ஜனாதிபதியுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளவுள்ளோம்.

இறுதி கட்ட யுத்தம் இடம்பெற்ற போது இந்த அரசிடமும் இராணுவத்திடம் நேரடியாக கையளிக்கப்பட்ட எமது உறவுகளின் பெயர் விபரங்களை வெளியிட வேண்டும், மறைமுகமாக உள்ள தடுப்பு முகாம்கள் சித்திர வதைக்கூடங்களை நாம் நேரடியாக பார்வையிட வேண்டும், ஏற்கெனவே சித்திர வதை கூடங்கள் இருந்து அவை மூடப்பட்டிருப்பின் அங்கு இருந்த எமது உறவுகளின் விபரங்கள் வெளியிடப்பட வேண்டும் என்பதுடன் அவர்கள் எங்கு உள்ளார்கள் என தெரியப்படுத்த வேண்டும், தடுப்பில் உள்ள தமிழ் உறவுகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைக்கவுள்ளோம்.

எமது கோரிக்கைகள் நேர்மையானதும் நியாயமானதுமாகும். எமது கோரிக்கைகளுக்கு பதில் அளிப்பதற்கு அரசுக்கு கால அவகாசம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. கால அவகாசமும் எம்மிடம் யாரும் கேட்க வேண்டாம் உடனடியாக எமக்கு பதில் கூற வேண்டும்.

எமது கோரிக்கையை ஏற்று எம்மை சந்திக்க வரும் ஜனாதிபதி மேல் நாம் முழுமையான நம்பிக்கையில் உள்ளோம். எமது உறவுகளை மீட்க நீதியான தீர்வுடன் எம்மை சந்திக்க வருவார் என நம்புகிறோம் சாதகமான பதில் எமக்கு கிடைக்கும் வரை எமது தொடர் போராட்டத்தை கைவிட மாட்டோம் என அவர்கள் மேலும் தெரிவித்தனர். (செ-9)

## தேர்தல்கள்...

குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய தலைமையில் இடம்பெறவுள்ள கூட்டத்தில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளது.

தற்போது 64 கட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த நிலையில், புதிதாக பதிவு செய்வதற்காக 95 கட்சிகள் விண்ணப்பித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது குறித்து நடைபெற்ற நேர்முகப் பரீட்சையின் போது 16 கட்சிகள் மீண்டும் அழைக்கப்பட்டதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் தெரிவித்துள்ளார். (செ-11)

## ரூ.400 மில். இழப்பு...

வாகனங்களால், அரசாங்கத்துக்கு 400 மில்லியன் ரூபாய் இழப்பு ஏற்பட்டதாக, கணக்காய்வாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த அதிகாரத்தில் இருந்த 2013ஆம் ஆண்டு பொது நலவாய தலைவர்களின் உச்சி மாநாடு கொழும்பில் நடைபெற்றது.

இதில் பங்கேற்ற வெளிநாட்டுத் தலைவர்களின் பயன்பாட்டிற்கென 82 சொகுசு வாகனங்களை அரசாங்கம் இறக்குமதி செய்திருந்தது. இந்த வாகனங்கள் பின்னர் குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தன. இதனால் அரசாங்கத்துக்கு 400 மில்லியன் ரூபாய் இழப்பு ஏற்பட்டதாக கணக்காய்வாளர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.(செ-11)

## மாகாண விசார...

வின் அறிக்கையில் குறிப்பிட்ட விடயம் போன்று எவையும் இடம்பெறவில்லை என்றும் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை உண்மைக்குப்புறம்பானவை என பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் தற்போதைய மற்றும் முன்னாள் செயலாளர்கள் கையொப்பம் இட்டும் கடிதம் ஒன்றினையும் முதலமைச்சருக்கு அனுப்பியுள்ளனர்.

இது தொடர்பில் பொது அமைப்புக்கள் முதலமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயமாவது,

தங்களால் வடக்கு மாகாண சபை அமைச்சர்களின் செயற்பாடுகளை ஆராய நியமிக்கப்பட்டிருந்த விசாரணைக்குழு அறிக்கை கிளி. பாரதி வித்தியாலய முன்னாள் அதிபர் மீது பாலியல் குற்றச்சாட்டு முன்னாள் ஆசிரியர் ஒருவரால் முன்வைக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தக் குற்றசாட்டை கிளி.பாரதி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் எமது பிள்ளைகளின் சார்பாக அவர்களின் பெற்றோர்கள் சார்பாக கிராம மட்ட அமைப்புகளாகிய நாங்கள் வன்மையாக மறுக்கின்றோம். பொய்யான இக்குற்றச்சாட்டை மேலும் வன்மையாக கண்டிக்கின்றோம்.

குறித்த ஆசிரியை தனது பணிக் காலத்தின் போது முன்பிருந்த ஒய்வுப்பெற்ற அதிபரின் துண்டுதலால் பாடசாலை செயற்பாடுகளுக்கு இடையூறு செய்ததோடு, பாடசாலை நிர்வாகத்திற்கு இடையூறு விளைவித்தமையினாலும் சட்டதிட்டங்களை உதாசீனம் செய்தமையினாலும் இவரை பாடசாலையிலிருந்து இடமாற்றம் செய்யுமாறு வலயக் கல்விப் பணிப்பாளாரிடம் பாடசாலை அபிவிருத்திக் குழுவினால் கோரிக்கை விடுத்திருந்தோம்.

இதன் காரணமாக அவர் இங்கிருந்து இடமாற்றம் செய்யப்பட்டார். இதன் நிமிர்த்தம் கோபமடைந்து பழிவாங்க எண்ணிய குறித்த ஆசிரியை அதிபருக்கு எதிராகவும் பாடசாலைக்கு எதிராகவும் செயற்பட எண்ணி பொய்யான குற்றச்சாட்டு ஒன்றை முன்வைத்திருக்கின்றமையை நாங்கள் தற்போது மூன்று வருடங்களின் பின் இவ்வறிக்கையின் ஊடாக அறிய முடிகிறது.

இவ்வாறான ஒரு சம்பவம் இப் பாடசாலையில் நடந்திருந்தால் கிராம மட்ட அமைப்புகள் இது குறித்து சட்ட நடவடிக்கை எடுத்திருப்போம் என்பதனையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் அத்தோடு தனி நபர்கள் மீதும் குறித்த சமூகத்தின் மீதும் இவ்வாறு அவதூறு பரப்புவது அடிப்படை மனித உரிமை மீறல் என்பதை தாங்கள் நன்கு அறிவீர்கள்.

எனவே எமது பாடசாலையில் பாலியல் தொந்தரவு செய்யப்பட்டது என்ற அபாண்டமான குற்றச்சாட்டு விசாரணைக்குழுவின் அறிக்கையின் படி ஊடகங்களில் செய்திகளாக வெளியிடப்பட்டது. இது எமது முன்னாள் அதிபரையும், எமது சமூகத்தையும், மிகவும் அவமானப்படுத்தியுள்ளது. எமக்கு வேதனையை அளிக்கிறது எனவே இவ்வறிக்கை முடிவுகள் குறித்து எமது கண்டனத்தையும் அதிருப்தியையும் இத்தால் தெரிவிக்கின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தில் பாரதிபுரம் வடக்கு, தெற்கு.மத்தி கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பாரதிபுரம் சனசமூக நிலையம், மலையாளபுரம் தெற்கு, வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கிருஸ்ணபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம். விவேகானந்தநகர மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம், மலையாளபுரம் வடக்கு திருவள்ளுவர் சனசமூக நிலையம், மலையாளபுரம் வரசித்தி விநாயகர் ஆலய பரிபாலனசபை, கிருஸ்ணபாரதி முத்துமாரியம்மன் ஆலய பரிபாலனசபை, ஆகிய கிராம மட்ட பொது அமைப்புகள் ஒப்பம் இட்டு முதலமைச்சருக்கு கடிதம் அனுப்பியுள்ளனர். (செ-312)

## ஆறு நாடுகள்...

ளது.

வடக்கு-கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் நீதி வேண்டி, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால், நூறாவது நாளையும் தாண்டி ஒவ்வொரு மாவட்டத்திலும் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் அரசாங்கத்தால் இவர்களுக்கான நீதியான பதில் இதுவரை கிடைக்கவில்லை எனவே இவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து பல்வேறு போராட்டங்களும் கவனயீர்ப்பும் ஆங்காங்கே நடைபெற்று வருகிறது.

குறித்த ஆர்ப்பாட்டமானது பிரித்தானியா கனடா , அமெரிக்கா, சுவிட்சர்லாந்து , பிரான்ஸ், ஜேர்மனி, போன்ற நாடுகளில் இன்று ஒரே நேரத்தில் இடம் பெறவுள்ளது .

தமிழர்களுடைய உரிமை போராட்டத்தினை சர்வதேசத்துக்கு தெரியப்படுத்த தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நாடுகடந்த தமிழீழ அரசின் ஏற்பாட்டில் நடைபெறும் மேற்படி ஆர்ப்பாட்டத்திற்கு அந்த அந்த நாடுகளில் உள்ள தமிழ் இன உணர்வாளர்களை கலந்து கொண்டு போராட்டத்திற்கு வலுச்சேர்க்குமாறு நாடுகடந்த தமிழீழ அரசின் இளையோர் விவகார அமைச்சர் அகிலன் கோரிக்கை விடுத்துள்ளார். (செ-9)

## ஜெனிவாவில் இன்று...

க்கப்படவுள்ளது.

இதன்போது, இலங்கையின் நீதிக்கட்டமைப்பு, மறுசீரமைப்பு குறித்து பரிந்துரைகள் முன்வைக்கப்படும் சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

அத்துடன், தற்போதைய நிலைமைகள் தொடர்பிலும், விவாதத்தின் போது, உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளால் கேள்விகள் எழுப்பப்படலாம் என குறிப்பிடப்படுகிறது.

அதாவது, அண்மைக்காலமாக சிறுபான்மையினரின் மத ஸ்தலங்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் சொத்துகளை அழித்தல் போன்ற விவகாரங்கள் குறித்தும் கேள்வியெழுப்பப்படலாம் என நம்பப்படுகின்றது.

ஐ.நா சிறப்பு அறிக்கையாளர் மொனிக்கா பின்டோ கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்திருந்ததுடன், அவர் மே மாதம் 07ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருந்து பல தரப்பினரை சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இந்த விஜயத்தில் சித்திர வதைகள் தொடர்பான ஐ.நா சிறப்பு அறிக்கையாளர் ஜுவான் மென்டசும் கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது, கலந்துரையாடப்பட்ட விடயங்கள் மற்றும் கண்டறிந்தவை குறித்த அறிக்கையில் உள்வாங்கப்பட்டுள்ளன.

இந்த விடயங்களே இன்றைய தினம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

அத்துடன், அறிக்கையை நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளின் சுதந்திரம் தொடர்பான தற்போதைய ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் டியேகோ கார்சியா சயனிடம் சமர்ப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## கை கலப்பில் நால்வர்...

மோதல் ஏற்பட்டுள்ளது. இதன்போது இரு குழுக்களாக பிரிந்து மோதியுள்ளனர். இதில் வாள்கள் மற்றும் பொல்லுகளுடன் மோதலில் ஈடுபட்டமையால் அப்பகுதியில் நேற்றைய தினம் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதனையடுத்து சம்பவத்திற்கு விரைந்த யாழ்.பொலிஸார் மோதலில் ஈடுபட்ட குழுக்களை கட்டுப்படுத்த முயன்றுள்ளனர்.

இதன்போது மோதலில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்பட்டு மூவர் கைது செய்யப்பட்டு யாழ்.பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (செ-4)

## ஜனாதிபதி-உறவுகள்...

வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. இக் கலந்துரையாடலில் வடக்கில் உள்ள ஐந்து மாவட்டங்களில் உள்ள காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் பிரதிநிதிகள் மற்றும் மதகுருக்கள் சட்டத்தரணிகள் உள்ளிட்டோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ-9)

## தனி ஆட்சியமைக்கும் ஐ.தே.க-ரங்கே பண்டார

(கொழும்பு)

தனியாக ஆட்சி அமைக்கும் எண்ணத்தை ஐக்கிய தேசியக் கட்சி இன்னமும் கைவிடவில்லை என இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

ஆனமடுவ பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

கட்சியை விடவும் நாடு முக்கியமானது என்ற காரணத்தினால் இவ்வாறு கூட்டாக ஆட்சி நடத்துகின்றோம்.

எதிர்காலத்தில் நாட்டுக்கு மேலும் வெற்றிகளை ஈட்டிக் கொடுக்க ஐக்கிய தேசியக் கட்சி தனித்து ஆட்சி அமைக்க வேண்டியது அவசியமானதாகும்.

நாடு இன்று பாரிய கடன் சுமையில் சிக்கியுள்ளது. இந்தக் கடன்களை செலுத்தாது நாட்டை முன்னோக்கி நகர்த்த முடியாது.

இந்தப் பிரச்சினையிலிருந்து மீளும் வரையில் சில சவால்களை எதிர்நோக்க நேரிடும். இதனை மக்களும் புரிந்து கொள்ள வேண்டும் என ரங்கே பண்டார தெரிவித்துள்ளார். (செ-11)

## வடக்கு அமைச்சரவை...

வடக்கு மாகாண சபை அமைச்சர்களின் ஊழல் மோசடி மற்றும் முறைகேடுகள் தொடர்பான விசாரணை அறிக்கை வெளியாகியுள்ள நிலையில் அமைச்சர்கள், தொடர்பான நடவடிக்கைகள் முதலமைச்சரால் தீவிரமாக பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் வடக்கு மாகாண அமைச்சர்கள் நான்கு பேரையும் மாற்றம் செய்யுமாறு கோரி வடமாகாண பிரதி அவைத் தலைவர் அமரர் அன்ரனி ஜெகநாதன் தலைமையில் வடமாகாண சபை உறுப்பினர்கள் 16 பேர் இணைந்து கையொப்பம் இட்ட கடிதம் ஒன்றினை கடந்த வருடம் ஆறாம் மாதம் வடமாகாண முதலமைச்சரிடம் கையளித்திருந்தனர்.

குறித்த விடயம் தொடர்பில் சாதகமான பதில் முதலமைச்சரால் வழங்கப்படவில்லை. இருப்பினும் தற்போது வடக்கு மாகாண அமைச்சர்களின் சர்ச்சைக்குரிய விடயங்கள் பேசப்பட்ட சந்தர்ப்பத்தில் முதலமைச்சரால் மேற்குறித்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதாவது அன்றைய தினம் அமைச்சர்களை மாற்றுமாறு கோரிய அனைத்து உறுப்பினர்களுடன் நேற்றைய தினம் திடீரென முதலமைச்சர் தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டுள்ளார்.

அதன்போது அமைச்சர்களை மாற்றம் செய்வது தொடர்பாக அன்று நீங்கள் எடுத்த நிலைப்பாட்டில்தான் தற்போதும் உள்ளீர்களா என கேள்வி எழுப்பியுள்ளார்.

முதலமைச்சரின் கேள்விக்கு மேற்குறித்த உறுப்பினர்களில் பெரும்பான்மையானோர் தாம் நான்கு அமைச்சர்களை மாற்றம் செய்யும் அதே நிலைப்பாட்டில் தான் உள்ளதாக தெரிவித்துள்ளதுடன் கடந்த வருடம் முன்வைத்த கோரிக்கையை மீளவும் வலியுறுத்துவதாக தெரிவித்துள்ளனர் என அறிய முடிகிறது.

அத்துடன் முதலமைச்சர் குறித்த விடயம் தொடர்பில் கட்சித் தலைமையுடனும் பேசியுள்ளார் என நம்பத்தகுந்த வட்டார தகவல்கள் தெரிவித்துள்ளன. அவர்களும் நான்கு அமைச்சர்களையும் மாற்றுவதற்கான நிலைப்பாட்டிலே உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேற்படி தகவல்களின் அடிப்படையில் வடமாகாண அமைச்சர்கள் நான்கு பேரையும் பதவியில் இருந்து மாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கான சாதகமான சூழ்நிலை காணப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேவேளை வடக்கு மாகாண சபை அமைச்சர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டு விசாரணை அறிக்கை விவாதம் விசேட அமர்வாக நாளைமறுதினம் 14ஆம் திகதி இடம்பெறவுள்ளது. (செ-9)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ஞானசார தேர...

பல்வேறு பாகங்களிலுள்ள முஸ்லிம் வர்த்தகர்களில் பல்வேறு வர்த்தக நிலையங்கள் மற்றும் இஸ்லாமிய பள்ளிவாசல்கள் மீது தாக்குதல்கள் மற்றும் தீ வைப்புச் சம்பவங்கள் இடம்பெற்றன.

முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைகளை தூண்டிவரும் குற்றச்சாட்டை எதிர்கொண்டுள்ள பொது பல சேனா அமைப்பே இந்த தாக்குதல் சம்பவங்களுக்குப் பின்னால் செயற்படுவதாகவும் அதனால் அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரரை கைது செய்ய வேண்டும் என்றும் முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

எனினும் பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் இதுவரை கைது செய்யப்படவில்லை.

இந்த நிலையில் கொழும்பில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரியந்த ஜயகொடி. ஞானசார தேரரை விரைவில் கைது செய்வதாக உறுதியளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கலபொட அத்தே ஞானசார தேரரை கைது செய்வதற்காக 4 பொலிஸ் குழுக்கள் செயற்பட்டு வருகின்றன. இந்நிலையில் அவரைக் கைது செய்வதற்கான அனைத்து சட்டரீதியான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றோம். கடந்த மாதத்திலிருந்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் இரு இஸ்லாமிய பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் சில மீது தீமூட்டிய சம்பவங்கள் பதிவாகின.

இதுகுறித்த விசாரணைகளை அந்தந்த பகுதிக்குப் பொறுப்பாக பொலிஸார் நடத்துகின்றனர். நுகேகொட விஜேராம பகுதியில் மட்டும் 4 வர்த்தக நிலையங்கள் மீது தீ வைக்கப்பட்டன. இந்த சம்பவத்துடன் நேரடியாக தொடர்புபட்ட சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மருத்துவர் ஒருவரது மகனான 32 வயதான இவர் உணகவமொன்றில் தொழில் செய்பவர். இவர் 2014ஆம் ஆண்டிலிருந்து பொது பல சேனா அமைப்பில் இணைந்து இதுவரை அந்த அமைப்பின் அத்தனை செயற்பாடுகளிலும் பங்கேற்றுள்ளார். ஞானசார தேரர் மற்றும் பொது பல சேனாவின் பங்காளிக் குழுக்களுடனும் நெருங்கிய தொடர்பையும் கொண்டிருக்கிறார்.

ஞானசார தேரரை கைது செய்ய வேண்டாம் எனக்கோரி பொறளையில் நடத்திய ஆர்ப்பாட்டத்திலும் இவர் பங்கேற்றிருந்தார். அத்துடன் திருகோணமலையில் பள்ளிவாசல் மீது நடத்திய தாக்குதல் தொடர்பில் தமிழ் இளைஞர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேபோன்று திருகோணமலை தந்துரே பகுதியில் புத்தர் பெருமானை அவமானப்படுத்தி முகநூலில் பதிவேற்றிய முஸ்லிம் இளைஞர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவத்தையடுத்து குறித்த பகுதியில் சிங்கள இளைஞர்கள் முஸ்லிம் மக்களின் வீடுகளை சேதப்படுத்திய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர் என்றார்.(செ-11)

## மூவரடங்கிய நீதி...

கோரிக்கைக்கு அமைய பிரதம நீதியரசர் பிரியசத் டெப் மூவரடங்கிய நீதிபதிகள் குழாமை நியமித்தார்.

வவுனியா மேல் நீதிமன்றத்தின் நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன், யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் மற்றும் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிறேம்சங்கர் ஆகியோர் கொண்ட குழாம் இதற்காக நியமிக்கப்பட்டது.

மாணவி வித்தியாவின் கொலை தொடர்பில் தற்போது 10 சந்தேகநபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் அவர்களில் 9 பேருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஒரு சந்தேகநபர் அரச தரப்பு சாட்சியாளராக மாறுவதற்கு ஒப்புதல் அளித்தார்.

அதேவேளை இந்த வழக்கை யாழ். மேல் நீதிமன்றத்திலிருந்து வேறு நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டாம் என பல்வேறு தரப்பினராலும் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில், யாழ். மேல் நீதிமன்றத்தில் இன்றைய தினம் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் புங்குடுத்தீவு பகுதியில் 2015 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி மாணவி சிவலோகநாதன் வித்தியா கூட்டு வன்புணர்விற்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருந்தமை தெரிந்ததே. (செ-11)

## வாகன இறக்குமதி...

2015ஆம் ஆண்டு 40 பில்லியன் ரூபாயாகவிருந்த வரி வருமான இழப்பு இந்த வருடம் 38.2 ஆக அமைந்துள்ளதாக நிதி அமைச்சின் வருடாந்த அறிக்கையை மேற்கோள்காட்டி வெளியிட்டுள்ளது.

2015ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கார்களின் பதிவு 57.2 வீதத்தாலும் பஸ்களின் பதிவு 35.1 வீதத்தாலும் முச்சக்கர வண்டிகளின் பதிவு 56 வீதத்தாலும் குறைவடைந்துள்ளதாக நிதி அமைச்சின் வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தீர்வை வரியற்ற வாகனங்கள் இறக்குமதியால் அரசாங்கம் 38.2 பில்லியன் ரூபாய் வருமானத்தை இழக்க நேரிட்டுள்ளது.

தீர்வை வரியற்ற வாகன அனுமதிப்பத்திரங்களால் அரசாங்கத்திற்கு ஏற்படும் நட்டத்தைக் கருத்திற்கொண்டு. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகன அனுமதிப்பத்திரம் வழங்கும் நடைமுறையை இரத்து செய்வதற்கு ஒரு கட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

எனினும் கடந்த வருடம் மே மாதம் இரண்டாம் திகதி அந்த தீர்மானத்தை மாற்றி பாராளுமன்றத்திலுள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் தீர்வை வரியற்ற அனுமதிப் பத்திரங்களை விநியோகிக்க முடிவெடுக்கப்பட்டது.

இதனிடையே சலுகை அடிப்படையில் கார்களை இறக்குமதி செய்வது தொடர்பில் இந்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்படும் வகையிலான புதிய சுற்றுநிருபமொன்றை நிதி அமைச்சு வெளியிட்டது.

இதன் பிரகாரம் 25ஆயிரம் அமெரிக்க டொலர்களை விட குறைந்த பெறுமதியுடைய வாகனத்திற்காக செலுத்த வேண்டிய வரி 35 வீதமாக காணப்படுவதுடன் கிடைக்கும் வரிச்சலுகை 65 வீதமாகும்.

25ஆயிரம் டொலரிலிருந்து 30ஆயிரம் டொலர் வரையான கார்களுக்கு 40 வீத வரியை செலுத்த வேண்டும் என்பதுடன் இதன் மூலம் கிடைக்கும் வரிச்சலுகை 60 வீதமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## அமைச்சுப் பதவிக...

விகளைப் பெறும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நா.யோகேந்திரநாதன் எழுதிய நீந்திக் கடந்த நெருப்பாறு என்ற நூலின் இரண்டாம் பாக வெளியீட்டு விழா கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அற்ப பதவிகளுக்காக அனைத்தையும் மறந்து தமது இலக்கை மறந்து நிற்பதானது ஆரோக்கியமானதல்லவென அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்காலம் தமிழர்களுக்குச் சோதனைக் காலம் என்று கூறுவதைவிட உணர்வுகளை மழுங்கடிக்கின்ற காலமாகவே உள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.(செ-11)

## பேருந்து கட்டணங்...

த்து பிரதியமைச்சர் அசோக அபயசிங்க தகவல் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றைய தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். (செ-11)


**வீடு வாடகைக்கு உண்டு**

யாழ். பல்கலைக்கழகம், யாழ். வைத்தியசாலையை அண்மித்து யாழ். பலாலி வீதியில் கெற்றப்போல் சந்திக்கு அருகில் மூன்று அறைகள், சமையலறை, குளியலறை, வரவேற்பறை போன்றவற்றினை உள்ளடக்கியதான புதிய வீடு வாடகைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 076 918 2942
076 664 5638 (C-8783)

**கணக்கீடு** NAC மானிப்பாய்
திரு.R.வின்சன்
A/L - 2019 - பிரிவு - II
கணக்கீட்டுச் சமன்பாடு
செவ், வியா - 5 pm
தொ.பே: 077 6947162 (9418)

**விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்**
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

**VISA CONSULTANCY**
01. சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்பபடிவங்கள் நிபுணத்துவம் வாய்ந்தவர்களுடாக சிறந்த முறையில் பூர்த்தி செய்து கொடுக்கப்படும்.
02. India, UK, Canada, போன்ற நாடுகளுக்கான விசா விண்ணப்பங்கள் Online மூலம் பூர்த்தி செய்து கொடுக்கப்படும்.
03. விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு, விண்ணப்பதாரிகளின் வசதிகளுக்கேற்ப Appointment பெற்றுக் கொடுக்கப்படும்.
04. விசா சம்பந்தமான கடிதங்கள் மற்றும் ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்.
05. பயணச்சீட்டுக்கள் (Air Tickets) மற்றும் பயணக்காப்பீடு (Insurance) போன்றவற்றை பெற்றுக் கொள்வதற்கும் எமது நிறுவனத்தை அணுகவும்.
06. நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரிகளும் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.
07. அமெரிக்க Green Card Visa விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படுவதுடன் கடந்த வருடம் விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் தங்களது Visa Status ஐ Online உடாக எம்மிடம் Check பண்ணிக் கொள்ளலாம்.
குறிப்பு: கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு அலுவலகத்திற்கு சமுகமளிக்கவும்.
VISA CONSULTANCY
Thirumurugen Com Net (Pvt) Ltd
216, K.K.S Road, Jaffna. Hotline : 0703750002 (9419)

**Vacancy**
வடக்கில் இயங்கி வரும் எமது Everest நிறுவனத்தில்,
■ நிர்வாகம் ■ முகாமைத்துவம்
■ விற்பனை விநியோகஸ்தர் ■ மேற்பார்வையாளர்
ஆகிய பதவி வெற்றிடங்கள் உள்ளன
வேலை அனுபவமற்றவர்களுக்கு 3 மாத பயிற்சி வழங்கப்படும். பயிற்சியின் போது 15000/=. பயிற்சியின் பின் மேலதிக கொடுப்பனவுகளுடன் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
தங்குமிடம் இலவசம், வெளிநாடு செல்வதற்கான வாய்ப்பு உண்டு, O/L, A/L படித்தவர்கள் விரும்பத்தக்கது, பதவி வெற்றிடங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.
தொடர்பு:
0215689060, 0770771377, 0779856671

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**
● 220க்கு மேற்பட்ட நாடுகளுக்கான சேவைகள்
ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் சேவையினைப் பெற்றுக் கொள்ளலாம்
● உணவுப் பொருட்கள், உடைகள், அன்பளிப்புப் பொருட்கள், கடல் உணவுகள், மருந்துப் பொருட்கள் என்பன ஏற்றுக் கொள்ளப்படும்.
11kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு 1kgற்கான விசேட சலுகைக் கட்டணம்
லண்டன் 550/-, ஜேர்மன் 600/-, பிரான்ஸ் 650/-, சுவிஸ் 800/-, கனடா 950/- ஏனைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்
திருமுருகன் கொம்நெற் (pvt) Ltd
216, K.K.S, வீதி, யாழ்ப்பாணம். தொ.இல. 077 755 4528
கிளைகள்
No. 46, ஆடியபாதம் றோட், திருநெல்வேலி.
No. 18, பிரதான வீதி, நெல்லியடி.
பிரதான வீதி, சங்கானை.
பிரதான வீதி, பருத்தித்துறை. (9419)

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்**
வெளிநாடுகளுக்கான
துரித கடிதங்கள், பொதிகள் சேவை



எமது சேவை 365 நாட்களும்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன்
72 மணி நேரத்தில் உலகின் எப்பாகத்திலும் ஒப்படைக்கப்படும் (Express Service)
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் ஏற்கப்பட்டு வெளிநாடுகளில் ஒப்படைக்கப்படும் (Door to Door Service)
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.
Call 021 222 6113
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
இல.10, புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Call 021 222 3536
DHL aramex FedEx (அ-8779)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.